www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi


சுற்று 11 | யூன் 2004 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 69

# பேச்சுவார்த்தையை குழப்பும் தரப்பில் யூ. என். பி-ஜே. வி. பி

## திரைமறைவில் அமெரிக்க – இந்திய தலையீடும் போட்டியும்

கடந்த ஏப்பிரல் இரண்டாம் திகதி பாராளுமன்ற சங்கீத கதிரை விளையாட்டுக்கான தேர்தல் முடிவுற்றது. ஆளும் தரப்பு கதிரைகளுக்கு எதிர்க்கட்சியினரும் எதிர்ப்பக்க ஆசனங்களுக்கு முன்னைய ஆட்சியினரும் மாறி அமர்ந்துள்ளனர். இதனால் தேசிய இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை என்ற விடயமும் இடம் மாறி நிற்கின்றது. முன்பு பேச்சுவார்த்தையை குழப்பி வந்த ஜனாதிபதி இப்போது அதனைக் கையில் எடுத்து சமாதானத்தைக் கொண்டு வருபவராக மாறி நிற்கிறர். அதேவேளை முன்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கொண்டு வந்து பேச்சுவார்த்தையை ஆரம்பித்த யூஎன்.பி யினர் இப்போது அதனைக் குழப்பும தரப்பாக மாறி வருகின்றனர்.

இவ்விரு தரப்பினரின் பாராளுமன்ற ஆளும் வர்க்க அரசியல் வரலாறே



இவ்வாறு மாற மாறச் செயற்பட்டதன ஊடாகவே வழிநடந்து வந்திருக்கிறது. அதிலிருந்து துளியளவும் விலகிச் செல்லவில்லை. எந்தக் கொம்பன் வந்தாலும் எங்களின் இந்தப் பேரினவாத ஆளும் வர்க்க நிலைப்பாட்டை மாற்ற

முடியாது என்பதையே அண்மைய வாரங்களின் அரசியல் சம்பவங்கள் எடுத்துக் காட்டி வருகின்றன.

கடந்த ஏப்பிரல் 22ம் திகதி முதலாவது பாராளுமன்றத் தொடர் ஆரம்பித்த

வுடன் ஜனாதிபதி இரவோடு இரவாக தூரத் தள்ளி வைத்த நோர்வே நாட்டின் அனுசரணைக்கு அழைப்பு விடுத்து அவசர அவசரமாக புலிகள் இயக்கத்துடனான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தார். தனது பிரதான பங்காளியான ஜே.வி.பி யுடன் கலந்து பேசிக் காலத்தை வீணாக்காது ஜனாதிபதி எடுத்த நடவடிக்கை ஜே.வி.பியை மட்டுமன்றி தோல்வியில் துவண்டு போயிருந்த யூஎன்.பியையும் ஆச்சரியப்பட வைத்தது.

இதனால் இரண்டு அரசியல் எதிர்வு கூறல்களும் எதிர் பார்ப்புகளும் உடைந்து கொண்டன. "ஒன்று ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி ஆட்சிக்கு வந்தால் யுத்தம் வந்து விடும் என்பது இடம் பெறவில்லை. இரண்டாவது புலிகள் இயக்கம் கட்டாயம் யுத்தத்தில் இறங்கிக் கொள்ளும் என்பதும் நடைபெறவில்லை. இவற்றுக்குப் பதிலாக ஜனாதிபதியும் புலிகள் இயக்கமும் எடுத்த சாதகமான நடவடிக்கைகள் சமாதானத்தையும் அரசியல் தீர்வையும

தொடர்ச்சி.. 12ம் பக்கம்.

## ஜனாதிபதி வடக்கில் அக்கறை காட்டுவது பிரச்சினைகளைத் தீர்க்கவா? பயன்படுத்தவா?

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வடக்கு புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சை தன்னகத்தே வைத்திருக்கிறார். முன்பு போன்று அதனை அமைச்சராக்கிய டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒப்படைக்கவில்லை. காரணம் அம்மாவிற்கும் தெரியும் அமைச்சருக்கும் புரியும். அதேவேளை கிழக்கின் புனரமைப்பை தமது முஸ்லீம் பங்காளிகளுக்கு வழங்கியுள்ளார்.

அதுவும் அர்த்த புஷ்டியுடன் தான்.

வடக்கின் புனரமைப்பு புனர்வாழ்வு அபிவிருத்தி என்பனவற்றுக்கான திட்டங்களை தம்மளவில் வைத்திருக்கும் ஜனாதிபதி அதுபற்றி தமது நம்பிக்கைக்குரிய அதிஉயர் அதிகாரிகளுடன் கலந்து பேசியுள்ளதாக அறிய முடிகின்றது. இதன் அடிப்படையிலேயே திட்ட மதிப்பீடுகளை கண்டறிவதற்காக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் நாயகம் ஹரீம் பீரிஸ் தலைமையில் உயர்மட்டக் குழு யாழ்ப்பாணம் சென்று திரும்பியுள்ளது.

புனரமைப்பு புனர்வாழ்வு அபிவிருத்தி என்பன வடக்கிற்கு அவசியம் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அங்குள்ள தேவைகள் ஏராளம் ஏராளமாக உள்ளன. ஆனால் அவற்றுக்குரிய வளங்கள் என்ன அடிப்படையில் எந்த

தொடர்ச்சி.. 12ம் பக்கம்.

## கிழக்கின் படுகொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

### ஒரு மனித நேய வேண்டுகோள்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான யுத்த நிறுத்தம் இன்னும் வடக்கு கிழக்கில் நடைமுறையில் இருந்து வருகின்றது. இதனை சர்வதேச கண்காணிப்பு குழுவினர் கண்காணித்து அவதானித்தும் வருகின்றனர். அதேவேளை வடக்கு கிழக்கில் அடையாளம் காட்டாத மனிதப் படுகொலைகள் இடம் பெற்ற வண்ணமே இருக்கின்றன. இதில் கிழக்கு மாகாணம் முன்னணியில் நிற்கின்றது. அண்மைய மாதங்களில் கிழக்கில் இடம் பெற்ற படுகொலைகள் அதிர்ச்சியும் கவலையும் தரக் கூடியனவாகும். உரிமை கோரப்படாது அடையாளம் காட்டாது பலர் கொல்லப் பட்டுள்ளனர். இப்படுகொலைக்கு இறுதியாக பலியானவர் கிழக்குப் பல் கலைக்கழகப் பேராசிரியர் ஒருவராவார். இதற்கு முன்பும் சமூக அக்கறையாளர்கள், கல்வியாளர்கள் போராளிகள், மாற்று இயக்கங்களைச் சேர்ந்தோர் என அவ்வப்போது பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலைகள் இப்போது கிழக்கில் அதிகரித்துள்ளன. புலிகள் இயக்கத்திற்குள் ஏற்பட்ட பிளவு முயற்சிக்குப் பின் பழிக்குப்பழி வாங்கும் படுகொலைகள் நிகழ்ந்து வருகின்றன. இவ்வாறான படுகொலைகள் நிச்சயம் கிழக்கை அடக்கவும் துண்டாடவும் தமிழர் போராட்டப் பலத்தை சிதைக்கவும் நிற்கும் பேரினவாத சக்திகளுக்கும் அவர்களுக்கு பின்னால் உள்ள அந்நிய சக்திகளுக்குமே உதவக் கூடியன வாகும். அதேவேளை வடக்கு கிழக்கின் மக்கள் மத்தியில் அவநம்பிக்கையையும் பரஸ்பர துவேஷத்தையும் ஏற்படுத்த வல்லனவாகும். அத்துடன் பேச்சுவார்த்தைக்கான சூழலைக் குழப்பவும் யுத்த வெறிபிடித்த பேரினவாத சக்திகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடும்.

எனவே தமிழ் மக்களின் ஐக்கியம், போராட்டப் பலம், பேச்சுவார்த்தையை முன்னெடுத்தல் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கு தொடரும் படுகொலைகளை உடன் நிறுத்த வேண்டுமென மனித நேய அடிப்படையில் புதிய பூமி வேண்டிக் கொள்கின்றது.

## சிறிபாத கல்வியியல் கல்லூரி திறக்கப்படவேண்டும்!

மலையக தமிழ் தேசிய இனத்திற்கென இருக்கும் ஒரேயொரு கல்வியியல் கல்லூரியான பத்தனை சிறிபாத கல்வியியல் கல்லூரியை பேரினவாதிகளிடமிருந்தும், அவர்களுக்கு துணைபோகும் மலையக அரசியல் வாதிகளிடமிருந்தும் பாதுகாப்பது அவசியமாகிறது.

அக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே கல்வி சாரா அலுவலர்களுக்கும் ஆசிரிய பயிலுநர்களுக்கும் பிரச்சினைகள் இருந்தே வருகின்றன. கல்விசாரா அலுவலர்கள் பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பவர்களாக அல்லது முன்னெடுப்பதற் கான கருவியாக இருந்து வருகின்றனர். அவர்கள் ஆசிரிய பயிலுநர்களின் நியாயமான கோரிக்கை களையும் போராட்டங்களையும் தமிழ் இனவாதமாக காட்டி வருகின்றனர். அதன் மூலம் அவர்களின் தவறுகளும் மோசடிகளும் மறைக்கப்பட்டு வருகின்றன. அங்கு கல்வி பயிலும் சிங்கள ஆசிரிய பயிலுநர்களை தமிழ் ஆசிரிய பயிலுநர்களுக்கு எதிராக திசை திருப்பியும் வருகின்றனர்.

கல்விசாரா அலுவலர்களை எதிர்த்து ஆசிரிய பயிலுநர்கள் அவ்வப்போது செய்து வந்த போராட்டங்களில் எல்லாம் மலையக அரசியல் வாதிகள் தலையிட்டு பிரச்சினைகளை தீர்ப்பதாக வாக்குறுதி அளித்ததை அடுத்து போராட்டங்கள் கைவிடப்பட்டன. ஆனால் ஒவ்வொரு வருடமும் மீண்டும் மீண்டும் அதேவிதமான பிரச்சினைகள் ஏற்படுவதும் ஆசிரிய பயிலுநர்கள் எதிர்ப்பு

தொடர்ச்சி.. 12ம் பக்கம்.






★ அழிவு தரும் மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து நிறுத்த
★ சிறிபாத கல்வியியல் கல்லூரி உட்பட மலையகக் கல்வியைப் பாதுகாக்க
★ அடிப்படை ~ அன்றாடப் பிரச்சினைகளுக்கு போராட
★ மலையக மக்கள் புதிய அரசியல் மார்க்கத்தில் வழிநடக்க

மாகாணசபைத் தேர்தல் நுவரெலியா மாவட்டத்தில்
புதிய–ஜனநாயக கட்சியின் சுயேட்சைக் குழு 2 மெழுகுவர்த்தி சின்னத்திற்கு வாக்களியுங்கள்.

தலைமை வேட்பாளர் சட்டத்தரணி ~ இ.தம்பையா



www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக வீதிகளின் அவலநிலை பற்றி
## கண்ணில் படுவதுமில்லை காதில் கேட்பதுமில்லை

மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மட்டுமன்றி அன்றாட அவசியத் தேவைகளும் மறுக்கப்பட்டும் கவனிப்பார் இன்றியும் இருந்து வரும் நிலை நீடிக்கிறது. இதில் அன்றாடத் தேவைகளில் ஒன்றான போக்குவரத்தும் வீதிகளின் அவல நிலைகளும் பரவலாகக் காணப்படும் பிரச்சினையாகும். இவற்றை பாராளுமன்ற உறுப்பினர்களோ மாகாணசபை உறுப்பினர்களோ அன்றி பிரதேச சபைகளைச் சேர்ந்தோரோ எவ்வித கவனத்திற்கும் எடுப்பதில்லை. இவர்களுக்கு சாராயக் கடைகள் திறப்பது அரசாங்க தனியாரிடம் ஒப்பந்தங்கள் பெறுவது காணிகள் பிடிப்பது, கட்டிடங்கள், கடைகள் கட்டுவது போன்றவற்றில்தான் முழுக் கவனமும் இவற்றுக்காகவே மேற்படிப் பதவிகள்.

மலையகத்தில் மோசமான வீதிகளின் நிலைக்கு ஒரு உதாரணம் இராகலை யில் இருந்து ஹைபோரஸ்ட் பகுதிக்குச் செல்லும் நீண்ட வீதியாகும். மிக மோசமாகப் பழுதடைந்து பல வருடங்களாக எவ்வித திருத்தத்திற்கும் உட்படாமல் குண்டும் குழிகளுமாக இருந்து வருகின்றன. மனிதர் நடந்து செல்வதே இயலாதிருக்கும் போது வாகனங்கள் செல்வதென்பது மிகக் கஷ்டமான தாகும். இதனைச் செப்பனிடுமாறு பல தடவைகள் மக்கள் கோரிக்கை விடுத்தும் எதுவுமே நடைபெறவில்லை.

அண்மையில் இப்பிரதேச மக்கள் மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வீதிமறியல் போராட்டம் நடாத்தி இவ் அவலத்தை சம்பந்தப்பட்டோரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இராகலைப் பிரதேசத்தின் புருப்சைட்–ஹைபோரஸ்ட் இலக்கம் 3 வரையான நீண்ட வீதியும், ஹைபோரஸ்ட் – கொனப்பிட்டிய வரையான வீதியும் கடந்த பத்து பதினைந்து வருடங்களுக்கு மேல் எவ்வித திருத்தத்தையும் பெறவில்லை. இவ்வீதிகளில் இ.போ.ச. பஸ் சேவை குறைவாகவே உள்ளது. தனியார் சேவையில் 14ரூபாவுக்கு பதிலாக 20 ரூபா அறவிடப்படுகிறது. அத்துடன் நேர காலம் கவனிக்கப்படு வதில்லை. இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் நீண்ட தூரத்தை கால் நடையாகவே மேற்கொள்ளப்படு கின்றனர். இந்த அவலம் மலையகத்தின் சொத்துக்கள் சேர்த்து சுகம் அனுபவித்து வரும் தலைமைகளுக்கும் அவர்களது தொண்டர் கூட்டத்திற்கும் கண்ணில் படுவதும் இல்லை. காதில் ஏறுவதுமில்லை. தொடர்ந்த மக்கள் போராட்டங்களே ஒரே வழியாகும்.

# உலர் உணவுநிவாரணம் நிறுத்தப்பட்டால் வடக்கில் பட்டினி நிலை தோன்றும்

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்கும் மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணத்தை ஐம்பது வீதத்தால் குறைக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங் கத்தில் ஆலோசிக்கப்படுவதாக அறிய முடிகின்றது. இத்தகைய ஆலோசனை எந்த அடிப்படையில் நோக்கப்படுகின்றது என்பது புரியவில்லை. கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேல் இரண்டு அரசாங்க காலங்களிலும் இந்த உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. கடந்த இரண்டரை வருடங் களில் சிறு அளவுக்கு நிலைமைகள் வழமைக்கு வந்துள்ளதே தவிர முற்று முழுதான இயல்பு வாழ்க்கை ஏற்பட வில்லை. விவசாயம் செய்வதிலும் சந்தைப் படுத்துவதிலும் பல்வேறு தடை களும் வசதியீனங்களும் இருக்கின்றன. விளை நிலங்களில் கணிசமானவை உயர் ராணுவ பாதுகாப்பு வலயங்களுக் குள் அகப்பட்டுள்ளன. அவ்வாறே மீன் பிடிப்பதிலும் கடல் வலயத் தடுப்புகளும் கெடுபிடிகளும் நீடிக்கின்றன. சிறுகைத் தொழில்கள் அழிந்து போய் உள்ளன. இடம் பெயர்ந்தவர்கள் கடந்த 15 வருடங்களாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியவில்லை.

இந்நிலையிலேயே உலர் உணவு நிவாரணம் என்பது வருமானம் குறைந்த, வேலை பெற முடியாத, இடம் பெயர்ந்த மக்களுக்கு கைக்கொடுத்து வந்தது. யாழ் மாவட்டத்தில் ஒரு லட்சத்து இருபதினாயிரத்து முன்னூற்றி முப்பத்தியொன்பது (124,339) குடும்பங்கள் இந் நிவாரணத்தைப் பெற்று வருகின்றனர். இதுவரை குடா நாட்டில் பட்டினி நிலை பரவலாக ஏற்படாமைக்கு இந்த நிவாரண கொடுப்பனவு ஒரு காரணமாகும். அதனை நம்பியே இக் குடும்பங்கள் குறைந்த வருமானத்தில் தமது அன்றாட வாழ்க்கையை பல இன்னல் கள் மத்தியில் நடாத்தி வருகின்றன. எனவே இந் நிவாரணம் நிறுத்தப்பட்டால் நிச்சயம் பட்டினி நிலை ஏற்படவே செய்யும்.

அத்துடன் இவ் உலர் உணவு நிவாரண விநியோகத்தில் பல மட்டங்களிலும் ஊழல் மோசடி வெட்டுக் கொத்துகள் இடம்பெற்று வருவது புதிய விடயமல்ல. தரமற்ற அரிசி, பருப்பு, பால்மா போன்றன இந்நிவாரணத்திற்கு கொழும்பிலிருந்து கட்டி ஏற்றி அனுப்பப்படுகின்றன. முன்பு அம்மா பச்சை என்ற காலம் கடந்த அரிசிகளின் கலவை வழங்கப்பட்டது. இப்போது நாற்றத்துடன் கூடிய நாட்டரிசி வழங்கப்படுகிறது. இவை யாவும் இந்த உலர் உணவு நிவாரணத்தின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இவற்றையும் பொறுத்துக் கொண்டே மக்கள் இதனைப் பெற்று வந்தனர். அதையும் குறைப்பது பின்பு நிறுத்துவது என்றால் மக்கள் அதனைத் தாங்கிக் கொள்ளும் நிலையில் இல்லை. எனவே முற்றுமுழுதான இயல்பு வாழ்க்கை திரும்பும் வரை தொடர்ந்து உலர் உணவு நிவாரணம் வடபுலத்து மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும் என்பதை அரசாங்கத்திற்கு பல தரப்பிலிருந்தும் வற்புறுத்தப்படல் வேண்டும். அதேவேளை அதில் இருந்து வரும் ஊழல் மோசடிகள் மூலமான தரமற்ற உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

# வ/பண்டாரிக்குள விவசாயிகள் கோரிக்கை

உதவி ஆணையாளர் அவர்கட்கு,

வவுனியா, பண்டாரி குளம் கமக்காரர் ஆகிய நாங்கள் உங்களிற்கு 30.07.2003 அன்று எழுதிய கடிதத்திற்கு 13.08.2003இல் ஒரு பிரதி அனுப்பியிருந் தீர்கள். கடிதம் அனுப்பியதற்கு எமது நன்றிகள். ஆனால் பண்டாரிக்குளம் குளத்தை புனரமைப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்க வில்லை. பின் மழை பெய்து நீர் நிரம்பியது. தற்போது நீர் வற்றிவிட்டது. அதற்குள் உள்ள குழிகளை நிரவி மட்டப்படுத்தி குளத்திற்கு நீர்வரும் அளைகள், பாலங்கள் அடாவடித்தனமாக குடியிருப்பவர்கள் சுற்றுமதில் கட்டி தடுத்திருக்கிறார்கள். வவுனியா நகரசபையில் அனுமதி எடுத்தார்களோ தெரியவில்லை. மேலதிக நீரை வெளியேற்றவாண் கட்டித்தர வேண்டும். வாண் கட்டாததால் குளக்கட்டையும் வெட்டுகிறார்கள். குளத்தில் நீர் தேங்க வழியில்லை. பண்டாரிக்குளம் கிழக்குப் பக்கமும் தண்ணீர் இல்லை. அலகரைப் பக்கம் தோணிக்கல்லிலும் நீர் இல்லை. இதனால் கால் நடைகளிற்கும் நீர் கிடைப்பதில்லை. இதனை இவ் ஆண் டிலாவது சீர் திருத்தி தருமாறு தாழ்மை யுடன் கேட்டுக் கொள்கின் றோம்.

இப்பிரதி அரசாங்க அதிபரிற்கும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பியுள்ளோம். நாம் விவசாயிகள் இதனால் சிலர் இப் புணரமைப்பைச் செய்யத் தடுப்பதாகவும், நடவடிக்கை எடுப்பதாகவும் அறிந்துள்ளோம். எனவே இப் புனரமைப்பை மேற்கொள்ள அனுசரணை வழங்குமாறும் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு மேற்படி கடிதத்தை பண்டாரி க்குளம் பங்காளர்கள் எனப் பாதிக்கப் பட்ட கமக்காரர்கள் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ளனர்.

# ஒரு தாயின் மறைவுக்கு
## புதிய பூமியின் அனுதாபம்

புதிய ஜனநாயக கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் வடபிரதேச செயலாளரும் கலைமதி சனசமூக நிலையத்தின் காப்பாளருமான தோழர் . கா. கதிர்காமநாதன் (செல்வம்) அவர்களின் அன்புத்தாயார் திருமதி இலட்சுமி கார்த்திகேசு கடந்த 07.05.2004 அன்று இயற்கையெய்தினார். அவரது மறைவுக்கு புதிய பூமி தனது இதயபூர்வ அஞ்சலியைத் தெரிவித்து தோழர் செல்வத்திற்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத் தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

திருமதி இலட்சுமியின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் அவரது புத்தூர் இல்லத்திலும் கலைமதி சனசமூக நிலைய மக்கள் மண்டபத்திலும் இடம் பெற்றன. அவற்றில் புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல், அரசியல் குழு உறுப்பினர் சோ. தேவராஜா, தேசிய கலை இலக்கியப் பேரவை சார்பில் க. தனிகாசலம் கலைமதி சனசமூக நிலையத் தலைவர். பொ. முருகேசு உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். எவ்வித சமயக் கிரிகைகளும் இன்றி இறுதி நிகழ்வுகள் மிக எளிமையாகவும் மலர் அஞ்சலி யுடனும் இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

# நாலு நடக்கும் நற்குணன் உலகிலே

## வேறு வழி இல்லாததால் தான்!

ஜே.வி.பி. இப்போது சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதை எதிர்க்கவில்லை. அது வேறு வழியில்லாததால் என்று விளக்கியுள்ளார்கள் ஜே.வி.பி. தலைவர்கள். வேறு வழி இல்லாமல் தான் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டார்களா? வேறு வழி இல்லாததால் தான் அமைதிப் பேச்சு என்றால், வேறு வழி கிடைத்தால் போரைத் தொடங்குவார்களா? அவர்கள் நாடும் வேறு வழி என்ன? அல்லது, எல்லாவற்றிலும் முக்கியமாக வேறு வழி இல்லாததால் தான் சந்தர்ப்பவாத ஜே.வி.பி. தலைமை இன்னமும் அரசியலில் இருக்கிறதா?

## கோள்மூட்டியாரின் பெட்டிசம்!

கோள்மூட்டியார் இன்னொரு நோட்டீஸ் அடித்து விட்டிருக்கிறார். புதிய ஜனநாயகக் கட்சி தேர்தலைப் பகிஷ்கரிக்கச் சொன்னது தமிழ் மக்களின் தேசிய ஒற்றுமையைக் குலைப்பதற்காக என்று அவர் உளறிக் கொட்டியிருந்தார். அவரிடமிருந்து உண்மையை எதிர்பார்ப்பது கடினம். அவ்விடயத்தில், அவருக்கும் அமைச்சர் கதிர்காமருக்கும் நிறைய ஒற்றுமை உண்டு.

யாழ்ப்பாண மக்களில் கணிசமானோர் புதிய ஜனநாயகக் கட்சி எடுத்த நிலைப்பாடு புலிகள் எடுத்திருக்க வேண்டிய நிலைப்பாடு என்று புலிகளிடமே கூறியுள்ளதாகவும் அறிகிறேன். அவர்களைப் பற்றியும் கோள்மூட்டியார் அடுத்த நோட்டீஸில் எழுதுவாரா?

## இன்னொரு அரசியல் கழைக்கூத்தாடி

கால்நூற்றாண்டுக்கு முன்னர் ஒரு இடதுசாரித் தொழிற்சங்கத் தோழராக மதிக்கப்பட்ட ஓ.ஏ. ராமையா இப்போது சர்வசாதாரணமாகவே அரசியல் குத்துக்கரணமடிக்கிறார்.

இப்போது ஜே.வி.பியை ஒரு இடதுசாரிக் கட்சி என்றும் ஜே.வி.பியின் பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை கூடியிருப்பது நல்ல விடயம் என்றும் அவர் பேசியும் எழுதியும் வருகிறார். 1972ம் ஆண்டு முதல் துரிதமடைந்த ராமையாவின் சீரழிவு அவர் தலைமைப் பதவியிலிருந்த "உழைக்கும் மக்கள் கட்சி"1980 அளவில் சிதறிப் போன பிறகு, செங்கொடிச் சங்கப் பதாகையை தன் அரசியலுக்காகப் பாவித்த ராமையா தன் பேரில் இருந்த செங்கொடிச் சங்க அச்சகத்தை விற்றுத் தனக்குக் காசாக்கவும் பயன்படுத்தியது அவரது தனிப்பட்ட நேர்மை பற்றிய விடயம். திரிபுவாதிகளுடன் சேர்ந்து கொண்ட ராமையா நடுவே தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோருடனும் ஒரு 'இந்திய வம்சாவழிக்' கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிட்டு ஏமாந்தார்.

1970 களிலும் 1980களிலும் பிற்பகுதியிலும் அண்மை வரையும் ஜே.வி.பியை இனவாதப் பண்புள்ள கட்சியாக அடையாளங்கண்ட ராமையா, இப்போது ஜே.வி.பியின் இனவாதம் முற்றிய நிலையில் அதை ஒரு இடதுசாரிக் கட்சியாகப் போற்றுகிறார்.

விக்கிரமபாகு ஏமாந்த இடத்தில் ராமையாவும் எதையோ செய்து எதையோ பெறத் துடிக்கிறார். என்ன நடக்குமென்று பொறுத்திருந்து பார்ப்போம்.

## நான் ஏச நினைப்பதெல்லாம் நீ ஏச வேண்டும்

ஞாயிறு தினக்குரலில் வருகிற "மறுபக்கம்" என்ற பத்தியைப் புதிய ஜனநாயகக் கட்சி பிரமுகர் ஒருவர் எழுதுவதாகக் 'கண்டு பிடித்துள்ள' கோள்மூட்டியார், அந்தப் பத்தியை எழுதுபவரது கட்சி அங்கத்துவ அட்டை பற்றியும் விசாரணைகளை விரைவில் நடத்தி அதை ஆதாரபூர்வமாக நிறுவுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

'மறுபக்கம்' புலி எதிர்ப்புப் பத்தி என்று கோள்மூட்டியார் அலறுகிற அதேவேளை, இன்னொரு தரப்பு 'புலி ஆதரவுப் பத்தி' என்று முறைப்படுகிறது. இவர்களுக்கெல்லாம் தாங்கள் பேச நினைப்பதையே பிறர் எழுத வேண்டும். அதுகூடப் பரவாயில்லை. 'மறுபக்கத்தில்' என்ன எழுதலாகாது என்றல்லவா கோள்மூட்டியார் திட்டி அழுது வடிக்கிறார். பதினைந்து இருபது வருடம் முன்பு யாழ்ப்பாணத்தில் அவருடைய காட்டில் மழை பெய்தபோது, தனது பத்தி மூலமும் வேறு வழிகளாலும் தான் அடித்த கொட்டம் அவருக்கு நினைவிராது. பாவம், ஏச்சு ராசா என்று பேரெடுத்தவரல்லவா. எவரையாவது தூற்றாவிட்டால் அவருக்கு பொழுது விடியாது.

## உலகப்புளுகர் போட்டிக்கு ஆள் தேவை!

இப்போதெல்லாம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கலை, இலக்கியம் போன்ற விடயங்களில் ஆழமான அக்கறை காட்டுவதில்லை என்று யாரும் முறைப்படலாம். ஆனால் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கு உள்ள நகைச்சுவை உணர்வை யாருமே குறைவாக எடைபோடக் கூடாது. இன்னமும் அவர்கள் "அப்பன் குதிருக்குள் இல்லை", "சோற்றுக்குள் மறைந்த முழுப் பூசனி", "பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லுதல்" என்று தங்களுடைய நிகழ்ச்சிகட்கு மறுபேர் சூட்டவில்லை என்றாலும் நிகழ்ச்சிகளில் வரும் செய்தி ஆய்வாளர்கள், காலை விடியும் வேளை முதல், இரவு தேசியக் கண்ணோட்டம் வரை, விளாசித் தள்ளுகிறார்கள்.

## மாதிரிக்கு ஒன்றிரண்டு:

ஜே.வி.பி. அமைச்சர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து பதவியேற்கத் தவறியதற்கு ஏதோ தகராறு தான் காரணம் என்று சொல்கிறவர்கட்கு அரசியலே தெரியாது என்ற ஒரு பிரகடனம் ஒரு நிபுணரால் வெளியிடப்பட்டது. பற்றிப் பலரும் சிரித்திருக்கலாம். இந்த அரசாங்கத்தின் நல்ல பேரைக் கெடுப்பதற்காகவே மலையக வன்முறைச் சம்பவங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன என்று ஆராய்ந்து அறிந்த ஒரு முடிவு மலையகத் தமிழரைச் சிரிக்க வைக்காததற்கு அவர்களுக்கு நகைச்சுவை உணர்வு இல்லாதது ஒரு காரணமாகாது.

என்றாலும் இந்த மாதிரியான ஆய்வாளர்கட்கு ஆட்பஞ்சம் அதிகம். எனவே கைவசம் உள்ள ஒன்றிரண்டு பேருடன் எப்படியோ தம் காலத்தைச் கடத்துகிறார்களே. அது ஒரு வகையான சாதனை தான்! என்றாலும், உலகப் புளுகர் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன என்று ஒரு விளம்பரம் போட்டால் பயனிருக்கும்.

## சக்தி மிக்கது எது?

ஸிம்பாப்வேக்கும் இலங்கைக்குமிடையிலான முதலாவது கிரிக்கட் போட்டி "சக்தி" தொலைக்காட்சிக்கான அலை வரிசையில் ஒளிபரப்பானது. அந்த ஆட்டம் நடந்த இரண்டரை நாட்களும் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு அரோகரா தான். செய்தியைக் கூட ஒளிபரப்பாத அளவுக்கு கிரிக்கட்டைக் காட்டுவது முக்கியமாகி விட்டது. ஸிரஸ சிங்கள ஒளிபரப்பு அலைவரிசையில் ஏன் காட்ட மாட்டார்கள் என்று தெரியாது. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்கிற மாதிரித் தமிழ் நிகழ்ச்சி தான் எப்போதும் எல்லாக் கூத்துக்கும் பலி. அரசாங்கமானாலும் தமிழருக்கு உரிய தனியார் அமைப்பானாலும் இது தான் உண்மையான நிலைமை.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் ஆதிக்க அரசியல் சக்திகளின் யூ.என்.பி. மீதான வர்க்க பாசம்

தமிழ் மக்கள் மத்தியில் அன்றிலிருந்து அரசியல் ஆதிக்க சக்தியாக இருந்து வந்தவர்கள் நிலவுடமை மேட்டுக்குடி வந்த ஆங்கிலம் படித்த குடும்பத்தவர்கள் தான். இவர்களது அரசியல் நிலைப்பாடு ஆண்டபரம்பரை ஆதிக்க கருத்தியலை மையமாகக் கொண்டதாகும். அதன் காரணமாகவே தெற்கின் நிலவுடமை மேட்டுக்குடி வழிவந்த சிங்கள அரசியல் தலைமைகளுடன் வர்க்க உறவு பூண்டு நிற்க முடிந்தது. அந்த வகையில் யூஎன்.பி என்பது அன்றிலிருந்து இன்றுவரை அவர்களுக்கு சகோதர பாசத்திற்குரியதாகவே இருந்து வந்தது. இது வர்க்க பாசமாகவும் பிணைப்பாகவும் இருந்த காரணத்தால் அந்த யூ.என்.பி என்ன தான் அட்டகாசம் புரிந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது தமது உறவை முறிக்கவோ எதிர்க்கவோ முடியாதவர்களாக இத்தமிழ் ஆதிக்க அரசியல் சக்திகள் இருந்தும் வந்துள்ளன.

பேரினவாதத்தின் மூத்த சொந்தக்காரரான யூ.என்.பி தலைவர்கள் அன்றிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்து வந்தவற்றை வரிசைப் படுத்தினால் அவற்றின் கனமும் காத்திரமும் அழிவுகளின் பாரதூரத் தன்மையும் புரியும். ஆனால் அவற்றை தமிழ் ஆதிக்க அரசியல் தலைமை மறந்தும் மீட்டுச் சொல்வ தில்லை. கனவில் கூட யூஎன்.பி விரோதம் காண்பதில்லை.

பண்டாரநாயக்கா மற்றொரு பேரினவாதக் கட்சியைத் தோற்றுவித்த போதிலும் அன்று முதல் தமிழ்த் தலைமைகள் அதனுடன் கிட்ட நெருங்கவில்லை. காரணம் பண்டார நாயக்கா ஆண்டபரம்பரையில் இருந்து வந்தவராக இருந்த போதிலும் அவரது போக்கு இடதுசாரிகளை அணைத்துச் செல்வதாகவும் ஏகாதிபத்தியத்தை சில தளங்களில் எதிர்ப்பவராகவும் இருந்து வந்ததை தமிழ் மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் தலைமைகளால் உள்வாங்கிக் கொள்ளமுடியவில்லை. அவ்வாறே பண்டார நாயக்காவின் மனைவியின் ஆட்சியோடும் தமிழ்த்தலைமை நடந்து கொண்டது. ஆனால் கூறப்பட்ட காரணம் தமிழர் விரோதக் கட்சி என்பதாகும். அதேவேளை யூஎன்.பி அதைவிட தமிழர் விரோதமாக நடந்த போதிலும் அது இவர்களால் பொறுத்துக் கொள்ளப்பட்டது.

இன்றும் கூட இரண்டு சிங்கள பௌத்த பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகளை இதய பூர்வமாக எதிர்த்து நிற்பது என்பது அவர்களுக்கு இயலாததாகும். அவர்கள் எவ்வாறு ஆனாலும் யூஎன்.பியின் பக்கமே தங்களை வைத்துக் கொள்வார்கள். இதனை அண்மைய சபாநாயகர் தெரிவின் போது அப்பட்டமாகக் காணமுடிந்தது. பண்டாரநாயக்கா தனிச்சிங்களத்தை சட்டமாக்கியது பற்றி ஜீ.ஜீ. செல்வநாயகம் தலைமை எதிர்த்து நின்றது. அது சரியானதும் எதிர்க்கப்பட வேண்டியதும் தான். ஆனால் அதன் முன்னோடி ஜே.ஆரும் யூஎன்.பியும் தான் என்பதை இவர்கள் வெளியில் கூறியது கிடையாது. இவற்றை எல்லாம் மறந்தே 1977ல் ஜே.ஆர் - யூ என்.பி வென்ற போது அமிர்தலிங்கம் ஜனநாயகத்தின் காவலர் ஜே.ஆர் என்று வாழ்த்துக் கூறினார். ஆனால் அதே ஜே.ஆர் தான் ஆறாவது திருத்தச் சட்டம் கொண்டு வந்து அமிர்தலிங்கத்தையும் கூட்டணி யையும் பாராளுமன்றத்தி லிருந்து அப்புறப்படுத்தினார் என்பது பற்றி தமிழர் தலைமைகள் அடக்கியே வைத்திருக் கின்றனர்.

இப்பொழுது யூஎன்.பி தமிழர்களின் நெருங்கிய நட்பு சக்தி என்றே இவர்களால் கொள்ளப்படுகிறது. ஆயுதம் ஏந்தி தமிழர் விடுதலைக்குப் போரிடு இன்று பாராளுமன்றம் மூலம் பதவிகள் பெற்ற கட்சிகளும் அதே பழைய ஆதிக்க சக்திகளின் யூஎன்.பி பாசப் பிணைப்புடனேயே நடந்தும் வருகின்றன. இரண்டு பேரினவாதக் கட்சிகளையும் அவற்றின் வர்க்க இன ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாடுகள் கொண்டு மதிப்பிடத் தவறும் போக்கு இன்றும் நீடிக்கின்றன. இது அடிப்படையில் வர்க்க பாசமும் ஆகும். விடுதலை என்பதற்கு எதிரான ஆதிக்க கருத்தியல் கண்ணோட்டமும் கொண்டதாகும். இதிலிருந்து விடுபடும் ஒரு சூழல் தோன்றும் போதே தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கு சரியான மார்க்கத்தில் செல்ல முடியும். இதற்கு யூ என்.பி மீதான பற்றும் பாசமும் வர்க்க ஐக்கியமும் ஏகாதிபத்திய சார்பும் அற்றுப் போதல் வேண்டும்.

# அமைச்சர் பதவி இன்மையால் அவதியுறும் தலைவர்கள்

மலையகத்தின் தலைவர்களான ஆறுமுகம் தொண்டமானுக்கும் பெ. சந்திரசேகரனுக்கும் இருப்புக் கொள்ள முடியவில்லையாம். அந்தளவுக்கு அவர்கள் இருவரையும் ஆட்டிப் படைக்கும் பிரச்சினை எதுவாக இருக்கும் என்று யாரும் அதிகம் யோசிக்க வேண்டியதில்லை. அவர்களை அலைக்கும் பிரச்சினை அமைச்சர் பதவி இல்லாமையேயாகும். எந்தப் பேரினவாத ஆளும் வர்க்க கட்சி பதவியில் அமர்ந்தாலும் எவ்வித கூச்ச நாச்சமின்றி அமைச்சர் பதவி பெறுவது அவர்களது வழமையாகும். அதற்கு ஏதாவது காரணமும் சோடித்து அறிக்கைகள் பேச்சுகள் வெளியிடுவார்கள். அதனை மலையக மக்களும் நம்பிக் கொள் வார்கள்.

இப்பொழுது இந்த அமைச்சர் பதவி பெறும் விடயம் சற்று கடினமாகி விட்டது. சந்திரசேகரன் எவ்வளவோ வழிகளால் முயன்றும் அது சரிவரவில்லை என்றே கொழும்பில் அவரது வட்டாரத்திலிருந்து அறிய முடிகிறது. அதனால் விட்டேனோ பார் என்று அறிக்கைகள் அடுத்தடுத்து விட்டும் வருகிறார். பாராளுமன்ற பம்மாத்து அரசியல் ஸ்ரண்டு விளையாட்டில் சந்திரசேகரனுக்கு நிகர் அவரே தான். அண்மையில் தமிழகம் சென்ற போது கலைஞர் கருணாநிதியைச் சந்தித்து போஸ் கொடுத்த படம் மலையகத்தில் அவரது ஆதரவாளர் களைக் கூட மலைக்க வைக்க வில்லை யாம். அண்ணன் இப்படி எத்தனை போஸ் கொடுப்பார் என்பது எங்களுக் கல்லவா தெரியும் என்றே கூறுகிறார் கள். ஏற்கனவே கிளிநொச்சி சென்று வந்தால் இப்படிச் செய்வது வழக்கமாம். அண்மைய பாராளுமன்ற கறுப்புப்பட்டிப் போராட்டமும் அத்தகையது தானாம். என்னதான் சொன்னாலும் அமைச்சர் பதவி இல்லாமையால் கைகால் அரிக்கவே செய்கிறது என்றே மலையகத்தில் பேசப்படுகிறது.

இதுபோன்ற நிலையில் தான் இல்லை என்பதை நிலைநிறுத்திக் காட்டவே ஆறுமுகம் தொண்டமான் இன்றைய அரசில் அமைச்சராவதற்கு கடுமையான அலுவல்களில் ஈடுபட்டு வருவதாக அறிய முடிகிறது. இதற்கு இந்தியத் தூதரகமும் தனது செல்வாக்கை செலுத்தி வருகின்றது எனவும் பேசப்படுகிறது. எனவே விரைவில் அமைச்சர் பிரதி அமைச்சர் பதவிக ளுடன் அரசாங்கத்தில் வீற்றிருப்பார் என்றே நம்பப்படுகின்றது. ஏனெனில் அமைச்சர் பதவி இல்லாது இருப்பது என்பது அவர்களுக்கு இயலாத ஒன்றேயாகும். அனுபவித்தவர்களுக்கு மட்டும் தான் அதன் அருமை பெருமை தெரியும் என்பது அர்த்தமுள்ள வாக்கியம் தான்.

# யாழ் - பொதுசன நூலகத்தில் அமெரிக்க தகவல் பிரிவு இல்லையாம். யாழ் மாநகர ஆணையாளர் கடிதம் கூறுகிறது

யாழ் - பொதுசன நூலகத்தில் அமெரிக்க தூதரக தகவல் பிரிவு அமைப்பதற்கு அழைப்பும் கோரிக்கையும் நூலக ஆலோசனைக் குழுவால் விடுக்கப்பட்டதாக பத்திரிகைச் செய்தி மூலம் அறியப்பட்டது.

இதனையொட்டி கடந்த 06-05-2004 அன்று புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேல் யாழ் மாநகர சபையின் ஆணையாளருக்கு விரிவான கடிதம் எழுதினார். அக்கடிதம் நாளிதழ்களில் முக்கியத்துவத்துடன் வெளிவந்தது. அக்கடிதத்தில் இன்று மூன்றாம் உலக நாடுகள் மீது தலையீடும் மேலாதிக்கமும் செலுத்தி வரும் உலகத் தனி வல்லரசான அமெரிக்காவிற்கு மக்களின் பொதுச் சொத்தான யாழ் பொதுசன நூலகத்தில் எவ்வாறு தூதரக தகவல் பிரிவுக்கு இடம் கொடுக்க முடியும் எனக் கேட்கப்பட்டிருந்தது. இவ்வாறான தகவல் பிரிவு 1968ல் யாழ் பொது நூலகத்தில் திறக்க முற்பட்ட வேளை மக்களும் எமது கட்சியும் கடும் எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்து நின்றமையும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப் பட்டிருந்தது.

மேற்படி கடிதம் சார்பாக யாழ் - மாநகர சபை ஆணையாளர் திரு. இ. இராமலிங்கம் புதிய ஜனநாயக கட்சியின் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அக் கடிதத்தில் யாழ் பொதுசன நூலகத்தில் அமெரிக்க தூதரக தகவல் பிரிவு ஆரம்பிக்க கோரிக்கை விடப்படவில்லை என்றும், அவ்வித நோக்கம் நூலக ஆலோசனைச் சபைக்கு இல்லை யென்றும், அமெரிக்க தூதரக அதிகாரிகள் தமது நூலகப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த விரும்புவதாகவே தெரிவித்தனர் என்றும் மேலும் தனித்தனி நாடுகளினதும் நிறுவனங்க ளினதும் நூலகப் பிரிவுகளை ஏற்ப தில்லை என்றும் விரும்பினால் நூல்கள் ஆவணங்கள் கிடைக்கும் பட்சத்தில் அவற்றை ஏனைய நூல்களுடன் சேர்த்துக் கொள்ளலாம் என்ற முடிவே எடுக்கப்பட்டதாகவும் ஆணையாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆணையாளர் கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்கள் சாதகமானவையும் வரவேற்கக் கூடியவைகளாகும்.

# மலையகத்தின் அண்ணனும் தம்பியும்

மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை எதிர்த்து வெகுஜனப் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் ஒரு மக்கள் நடவடிக்கையாளரிடம் எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிட்டால் கோடீஸ்வரராவதற்கு உதவி செய்வதாக "மலையகத் தலைவரொருவர்" தெரிவித்துள்ளார்.

அத்திட்டத்தை எதிர்க்காது தன்னுடன் ஒத்துழைத்தால் அத்திட்டத்திற்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்களை (ஜூனஉரசவைள புரயசனள) வழங்கும் ஒப்பந்த வேலையை பெற்றுத்தருவதாகவும் அதன் மூலம் 5 வருடகாலத்துக்குள் கோடீஸ்வரராகிவிடலாம் என்றும் அத்தலைவர் கூறியுள்ளார்.

கோடீஸ்வரராவதை விட சூழலுக்கும், மக்களுக்கும் வரவிருக்கும் அழிவைத் தடுத்து நிறுத்துவதே தனது நோக்கம் என்று அம்மக்கள் செயற்பாட்டாளர் பதில் கூறியுள்ளார்.

மக்களை அழிக்கும் அத்திட்டத்திற்கு ஆதரவு கொடுத்துவருபவர் அந்த ஒரேயொரு தலைவர் என்பதால் வெளிப்படையாகப் பெயரை கூற வேண்டியதில்லையே! அவர் ஆதரிப்பதற்கு காரணமே கோடிகளுக்காகத்தானே.

தம்பிக்கு சீமெந்து கமிஷன் கிடைத்தால் போதும் மேல்கொத்மலை திட்டத்திற்கான நிர்மாணத்திற்கு சீமேந்தை வழங்கும் ஏகபோக ஒப்பந்த உரிமையை இந்திய சீமெந்து கம்பனியொன்றுக்கு வழங்கினால் அத்திட்டத்திற்கு தெரிவித்துவரும் எதிர்ப்பை கைவிடுவதாக "இன்னொரு பெரிய மலையகத்தலைவர்" கூறியுள்ளாராம். இந்தியாவுடன் தொடர்புடைய அவருக்கு அந்த இந்திய சீமெந்து கம்பெனியுடன் வியாபாரத் தொடர்பும், இரத்த உறவுத் தொடர்பும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர் மேல்கொத்மலை திட்டத்தை எதிர்ப்பதற்கு காரணமும் இந்த குறுக்குவழிக் கோடிகளை கமிஷனாக பெற்றுக்கொண்டு மக்களின் எதிர்ப்பை காட்டிக்கொடுப்பதற்குத்தானா என்று வினா எழுப்புகிறார்கள் மக்கள்.

ஐ.தே.மு. அரசாங்கத்தைப் போன்று ஐ.ம.சு முன்னணியும் அத்திட்டத்தை அமுல் படுத்துவதில் ஆர்வமாகவே இருக்கிறது. கந்தப்பொளையில் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடுவழங்கும் போது ஜனாதிபதி சந்திரிகாவிடம் மேல் கொத்மலை திட்டத்திற்கான எதிர்ப்புப் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலளித்த அவர் எப்படியும் அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறியுள்ளார்.

மக்கள் ஏமாறாமல் இருந்தால் எதிர்ப்பு போராட்டத்தைத் தொடரலாம். அழிவு நிறைந்த அத்திட்டத்தை தடுத்தும் நிறுத்தலாம். யாவும் மலையக மக்களின் கைகளில்தான்.

# சாதிய இழி தொழில்கள் ஒழிக்கப்படல் வேண்டும்.

கடந்த மாதம் புதிய பூமியில் பறைமேளக் கலையைப் பாதுகாப்பது யார்? என்ற தலைப்பில் ஒரு விடயம் வெளிவந்திருந்தது. கிழக்கு மாகாணத்திலிருந்து அன்புமணி என்பவர் மல்லிகை சஞ்சிகையில் எழுதிய கட்டுரை ஒன்றுக்கு பதில் தருவதாகவே அப்புதிய பூமி எழுதுக்கு காணப்பட்டது. அதில் கூறப்பட்ட விடயங்கள் நியாயமான வையும் தர்க்க பூர்வமானவைகளுமாகும்.

இன்றைய சூழலில் சாதிய அடையாளம் என்பது விதிவிலக்கின்றி எல்லாரிடமும் இருந்து வருகின்றன. அதே வேளை சாதியக் தொழில்கள் என்பன குறைவடைந்துள்ளன. சில தொழில்கள் சாதிகளுக்குரிய எல்லைகளைக் கடந்து வேறும் பலரால் செய்யப்படுகின்றன. ஆனால் சில தொழில்கள் இழி தொழில்களாகக் கருதப்பட்டு அந்தந்தச் சாதியினர் மட்டும் செய்வதாக இருந்து வருகின்றன. அதனாலேயே அத்தகைய தொழில்கள் பண்பாட்டு அம்சங்கள் பொருந்தியதாகவோ, கலைத்துவம் கொண்டவையாகவோ, தொழில் திறன் மிக்கதாகவோ அன்றி வருமானம் தருவதாகவோ இருந்த போதிலும் அதனை பரம்பரையாகச் செய்து வந்தவர்களின் புதிய தலை முறையினர் நிராகரிப்பதில் நியாயம் முழுமையாக உண்டு. அத்தகைய தொழில்கள் இழி தொழில்களாகவும் அதனைச் செய்வோர் இழிசனராகவும் நடாத்தப்பட்ட சமூகச் சூழலில் அத் தொழில்கள் கைவிடப்படுவது வரவேற்கத் தக்கதாகும். சாதிய அடையாளத்துடன் குறிப்பிடப்பட்ட சாதியினர் எனக் கொள்ளப்படுவோரால் செய்யப்படும் அனைத்து அடிமை குடிமைத் தொழில் களும் இழி தொழில்களாக அச்சாதிய இளம் தலைமுறையினரால் கைவிடப் படுவதை வரவேற்க வேண்டியது இன்றைய தேவைகளில் ஒன்றாகவே கொள்ள முடியும். எனவே மல்லிகையில் வெளிவந்த அன்புமணி என்பவரின் கட்டுரை பிற்போக்கானதும் புதியபூமியில் எடுத்தப்பட்டவை நியாயமானதும் தேவை யானதுமாகும்.

மேலும் தமிழகத்தில் இது போன்ற இழிதொழில் கைவிடப்படும் இயக்கம் முன்பிருந்தே நடாத்தப்பட்டு வருவதையும் நினைவூட்ட விரும்பு கின்றேன். அதற்கு உதாரணமாக தமிழக சஞ்சிகையான காலச் சுவடு (இதழ் 52- 2004) வந்த ஒரு படத்தை இத்துடன் அனுப்புகின்றேன். அதனைப் பிரசுரித்தால் பயன் உள்ளதாக இருக்கும் என நம்புகின்றேன்.

**கி. அருந்தவச்செல்வம்**
யாழ்ப்பாணம்



துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட பாண்டியன் காட்டுமன்னார்குடி பேருந்து நிலைய முகப்பில் வைக்கப்பட்டுள்ள பாண்டியனின் உருவச் சிலை

தமிழகப் போலீஸால் சுட்டுக்கொல்லப்பட்ட பாண்டியன் ஒரு பயங்கரவாதியோ கொள்ளைக்காரரோ அல்ல. பறையடிக்கும் இழிதொழிலைச் செய்யமாட்டோம் எனத் தன்மானத்தோடு போராடிய ஆயிரக்கணக்கான தலித்துகளில் ஒருவர்.

படம் நன்றி : காலச்சுவடு

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மலையகப் படித்தவர்களுடன் சில வார்த்தைகள்

## தோழர் இ. தம்பையா

மலையகத்தமிழ் தேசிய இனத்தின் மீது புரியப்படும் அடக்குமுறைகள் ஒடுக்கு முறைகள். இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக மலையகத்தின் படித்தவர்கள் கோபம் கொண்டவர்களாக இருக்கின்றனர். மலையக படித்தவர்களில் அதிகமானோர் ஆசிரியர்களாகவும் சிலர் அதிகாரிகளாகவும், சட்டத்தரணிகளாகவும், வைத்தியர்களாகவும், பத்திரிகையாளர்களாகவும் வர்த்தகம் செய்பவர்களாகவும், வர்த்த கத்துறையில் வேலை செய்பவர்களா கவும் இருக்கின்றனர். அவர்களிடையே அரசியல் வித்தியாசங்கள் இருந்த போதும் அவர்களில் பெரும்பாலோனோர் பிற்படுத்தப்பட்டிருக்கும் மலையக சமூகம் பற்றி அக்கறை கொண்டவர்களாகவும், மலையகத் தலைமைகள் எனப்படும் தற்போதைய தொழிற்சங்க, பாராளு மன்றத் தலைமைகள் மீது அதிருப்தி கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். அடக்கப்படும் ஒரு தேசிய இனத்தை சேர்ந்தவர்கள் என்பதனால் அவர்களது தேசிய அபிலாஷைகள் மறுக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வர்க்க உணர்வு அவர்களின் தொழிற்சங்க தலைமைத்துவங்களாலும். தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்ட நிலைமையில் பெருந்தோட்டக் கம்பெனிகளின் அடக்கு முறைகளினாலும் சீரழிக்கப்பட்டிருக்கிறது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களினால் தான் இன்று மலையக சமூகத்திற்கு சில விடயங்களாவது உரித்தாக்கப்பட்டிருக்கின்றன. அவர்களின் போராட்ட பலத்தைக் கொண்ட மலையக சமூகத்தின் ஏனைய வர்க்கப் பிரிவுகள் அவற்றின் இருப்பை பேணி வருகின்றன. அவ்வாறான தொழிலாளர்களின் வரக்க உணர்வு சீரழிக்கப்பட்டிருப்பதால் தற்போது மலையக சமூகத்தின் உரிமைக் கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப் படுவதில்லை.


பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வர்க்க உணர்வை வளர்க்காத, ஒருங்கிணைக்காத அரசியல் தலைமைகள் மலையகத்தமிழ் தேசிய இனத்திற்கு தலைமை வகிப்பதற்கு தகுதியற்றன ஆகின்றன. இதனாலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். மலையக மக்கள் முன்னணி உட்பட பல தொழிற் சங்கங்களும் அமைப்புகளும் முட்டுச் சந்தியில் விடப்பட்டுள்ளன. அவை மலையகத்தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிப்பனவாக இல்லை. தொண்டமான்களுக்கு பதிலாக சந்திர சேகரன்கள் வருவதாலன்றி தொழிலாளர்களை அடிப்படையாக கொள்ளும் அரசியலினாலேயே சரியான தலைமைத்துவத்தை கொடுக்க முடியும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்றன முதலாளித்துவ தலைமைகளை கொண்டிருப்பதுடன் முதலாளித்துவ பேரினவாத சக்திகளுடன் சமரசம் செய்வதனாலேயே அவர்களின் அரசியல் மக்களுக்கானதாக இல்லை. எனவே அவற்றின் தலைமை போன்ற தலை மைகள் மலையகத்தமிழ் மக்களுக்கான மாற்று தலைமைகளாக இருக்க முடியாது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்றவற்றில் அதிருப்தியடைந்துள்ள அல்லது விமர்சனங்களை செய்துவரும் மலையகப் படித்தவர்கள் புதிய அரசியல் தலைமையை கட்டிவளர்க்க வேண்டும். அல்லது புதிய அரசியல் தலைமையை கட்டி வளர்ப்பதில் பங்கெடுக்க வேண்டும் அல்லது அப்புதிய தலைமையை கட்டிவளர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த மூன்றில் ஒன்றை யாவது செய்ய முன்வராத மலையகப் படித்தவர்கள் தற்போதைய மலையக அரசியல் தலைவர்கள் பற்றி வெறும் விமர்சனங்களை வைப்பதால் மட்டும் பயனில்லை.

மக்களுடைய நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டியதும் சமூக அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டியதும் அடிப்படையானதாகும். அவற்றை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பின்னால் சென்று முழுமையாக உறுதி செய்து கொள்ள முடியாது. மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டாலும் தெரிவு செய்யப்படுபவர்கள் மக்களின் பிரதிநிதிகளாவன்றி ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகளாகவே இருக்கின்றனர். அதற்கு காரணம் அவர்களின் அரசியலாகும். இதற்கு தனிநபர்களை மாற்றுவது தீர்வாகாது. இந்த அடிப்படையிலேயே இருக்கின்ற தலைமைத்துவத்தை மதிப்பிடவும் வேண்டும். புதிய அரசியல் மார்க்கத்தை தலைமைத்துவத்தை கட்டி வளர்ப்பதில் அக்கறை செலுத்தவும் வேண்டும்.

### ★ மலையகத் தலைமைகள் மீதான அதிருப்தி வெறும் பேச்சளவில் இருப்பதால் பயன் இல்லை.



புதிய-ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி தோழர் இ. தம்பையா மலையகம் வேண்டி நிற்கும் அரசியல் தலைமைத்துவம் பற்றிக் கூறுகிறார்.

மலையத்தமிழ் அரசியல் வேலைகளை முன்னெடுக்கின்ற மாக்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியான புதிய-ஜனநாயக கட்சியின் தோழர்கள் கடுமையான சவால்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். வெகுஜனப் போராட்டங்களில் எங்கோ ஒரு மூலையிலன்றி முன்னணியில் முன்னணிப் படையாக இருந்து வருகின்றனர். மக்களின் உரிமைக் கோரிக்கைக்குரிய சரியான குரலாக இருந்து வருகின்றனர். மலையகத்தமிழ் மக்களிடையே சரியான தலைமைத்துவத்தை கட்டி வளர்ப்பதில் அடையாளம் காணக் கூடிய சக்தியாக புதிய - ஜனநாயக கட்சி இருக்கிறது.

பல படித்தவர்களும் - மலையக தலைமை எனப்படுவதில் அதிருப்தியடைந்தவர்களும் புதிய - ஜனநாயக கட்சியினூடாக உரிமைக்குரல் எழுப்பப் படுவதையும், வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படு வதையும் விரும்பு கின்றனர். அவர்கள் புதிய - ஜனநாயக கட்சியினூடாக ஆறுமுகம் தொண்ட மான், சந்திரசேகரன் ஆகியோரின் தலைமைத்துவத்திற்கு அழுத்தங் களையும் நிர்ப்பந்தங்களையும் கொடுக்க முயற்சிக்கின்றனரேயன்றி புதிய - ஜனநாயக கட்சியுடன் இணைந்து மலையகத்திற்கான புதிய தலைமைத் துவத்தை கட்டி வளர்ப்பதிலோ, அல்லது புதிய தலைமைத்துவத்தை கட்டிவளர்ப் பதில் பங்கெடுப்பதிலோ அல்லது புதிய ஜனநாயக கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதிலோ ஆர்வம் காட்டுவதாக இல்லை. அது அவர்களின் மாறுபட்டுள்ள வர்க்க குணாம்சமாகும்.

ஆனால் சமூக அநீதிகளை கண்டு அதிகமாகவே கொதித்தெழும் குணாம்ச மும் அவர்களின் வர்க்க குணாம்சம் தான். கொதித்தெழும் குணாம்சம் வெற்றி பெற வேண்டுமெனின் மாற்றம் வேண்டி செயலில் இறங்க வேண்டும். அதாவது கொதித்தெழுவதற்கான சமூகக் காரணியை மாற்றும் பணியில் ஈடுபடுதல் வேண்டும்.

படித்தவர்களில் அதிகமானோர் அவர்களின் தனிப்பட்ட மேனிலையாக்கத் திற்கு தடைகள் ஏற்படும் போது மட்டும் சமூகம் பற்றியும், அரசியல் தலைமைகள் பற்றியும் விமர்சிப்பவர்களாக இருக் கின்றனர். ஏற்றத் தாழ்வுள்ள சமூக அமைப்பில் ஒரு சில தனிநபர்களை விட படித்தவர்கள் என்பதற்காக அனைவருமே மேனிலையடைவ தில்லை. அத்துடன் மேனிலையாக்கம் என்பது பணம், அந்தஸ்து, வீடு, வாகனம் என்று பரம்பரைபரம்பரையாக தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் வசதிவாய்ப்புகளாகும். சமூக ஒடுக்குமுறை என்பதை அடிப்படை வாழ்வாதார வசதிகளுக்கு அப்பாற்பட்ட மேனிலையாக்கத் திற்கு ஏற்படும் தடையாக மட்டும் அடையாளம் காணமுடியாது லட்சக்கணக்கான மக்கள் வாழ்வாதார வசதிகளே இல்லாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு வாழ்வாதார வசதிகள் கூட மறுக்கப்படுவது தான் சமூக அநீதி. அது தான் சமூக ஒடுக்குமுறை. ஒவ்வொரு படித்தவருக்கும் தனிப்பட்ட எம்.பியோ அமைச்சரோ மேனிலையாக்கத்திற்கு உதவுவது என்பது வெறும் எதிர்பார்ப்பாகும். ஒரு சிலரின் தனிப்பட்ட மேனிலையாக்கத்திற்கு உதவுவதையே அரசியல் வாதிகள் செய்ய வேண்டும் என்றால் அரசியல் தலைவர்களை மாற்றிக் கொண்டு அவர்களுக்கு பின்னால் கண்மூடித்தனமாக சென்று, அவர்களின் மக்கள் விரோத நடவடிக்கை களுக்கு துணைபோய் ஒரு சிலர் மட்டும் சலுகைகளை பெற்றுக் கொள்ள முடியும். புதிய அரசியல். அரசியல் தலைமைத்துவம் என்பன அந்த சலுகைகளை பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட பிற்போக்கு அரசியல் தலைவர்களை "பிளக்மெயில்" பண்ணுவதற்கான வழிமுறைகளல்ல.

மாறாக சமூகத்தின் சகலருக்கும் சமத்து வமான வாய்ப்புகளையும் சமநீதியையும் உறுதி செய்வதற்கான அடிப்படை களாகும்.

தற்போதைய அரசியல் தலைமைகள் மீதான விமர்சனம் என்பது தனிப்பட்ட மேனிலையாக்கத்தை குறிவைத்ததா அல்லது முழு சமூகத்தின் அபிவிருத்தி பற்றியதா என்பதிலேயே அவ்விமர்சனத்தின் சரி பிழைகளை தீர்மானிக்கும் விடயமாகும். மலையகத்தின் படித்தவர்கள் முழு சமூகத்தின் அபிவிருத்தி பற்றியே கவலைப்படுவர்களாக இருந்தால் தற்போது மலையகத் தலைமைகள் திருத்தப்படக் கூடியதல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அத்துடன் புதிய தலைமை என்பது தனிப்பட்ட சிலரின் மேனிலையாக் கத்திற்கு உதவுவது என்பதாகாது.

### ★ புதிய அரசியல் மார்க்கமும் புதிய தலைமைத் துவமும் மட்டுமே மலையக மக்களுக்கு விமோசனம் தரக் கூடியதாகும்.

புதிய அரசியல், புதிய அரசியல் தலைமைத்துவம் என்பன எங்கோ இருந்து பூமிக்கு கொண்டு வரப்படுவன வல்ல. மக்கள் மத்தியிலிருந்து தான் வரவேண்டும். அதற்காக மலையக மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட காலகட்டங்களிலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் புதிய ஜனநாயக கட்சியின் முயற்சிகளே இன்னும் உறுதியாக மக்களுக்கு சார்பானதாக இருக்கின்றன.

போட்டி நிறைந்த சமூகத்தில் பொறாமைகள் காழ்ப்புணர்வுகள், வக்கிரங்கள் கோலோச்சுவனவாக இருக்கும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் படித்தவர்கள் என்ற ரீதியில் மலையகப் படித்தவர்கள் திறந்த மனத்துடனான ஜனநாயக ரீதியான கலந்துரையாடல்களின் மூலம் சமூக மாற்றத்திற்கான அரசியல், பொருளாதாரம், பண்பாடு பற்றி சிந்திக்க வேண்டும். அதற்காக அர்ப்பணித்து செயல்படும் புதிய - ஜனநாயக கட்சி தோழர்களை பலப்படுத்த வேண்டும்.

அவர்கள் தலைமை தாங்கியும், வழிகாட்டும் வெகுஜனப் பாராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது மட்டுமன்றி, பல படித்தவர்கள் அப்போராட்டங்களில் பங்கெடுத்தும் வருகின்றனர். மக்களின் பங்கெடுப்புடனான அரசியல் தலைமைத்துவத்தை கட்டிவளர்ப்பதற்கான பங்கெடுப்பும், ஒத்துழைப்பும் அதிகமாகவே தேவைப்படுகிறது.

### ★ மலையகத்தின் எதிர்காலம் பற்றிய சிந்தனையுடன் மலையக படித்தவர்கள் தூர நோக்கில் செயல்பட முன்வரல் வேண்டும்.

வெகுஜனப் போராட்டங்களில் பங்கெடுப்பது போன்று புதிய - ஜனநாயக கட்சி பங்கெடுக்கும் தேர்தல்களில் அக்கட்சியை பலப்படுத்த வேண்டும். புதிய அரசியலை முன்னெடுக்கும் புதிய - அரசியல் மார்க்கத்திற்கான தலைமைத்துவத்தை கட்டி வளர்க்கும் முயற்சிகளில் மக்களை அணி திரட்டுவதற்காகவே அக்கட்சி தேர்தல்களில் போட்டியிடுகிறது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். இவற்றையிட்டு மலையப் படித்தவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

---

## மரத்துப் போன மனமே!

மறந்துவிடு என்
மரத்துப் போன மனமே
நினைப்பதை விட
மறப்பது இலகு என்றால்
மறந்து விடு என்
மரத்துப் போன மனமே.

83 இன்
ஏழாம் மாத கசப்புக்களை,
பறிக்கப்பட்ட நாட்டுப் பிரஜை
என்னும் உரிமையை,
சின்னாப் பின்னப்படுத்தப்பட்ட
எங்கள் எதிர்காலக் கனவுகளை
மறந்து விடு என்
மரத்துப் போன மனமே.

புதைத்து மண்ணோடு
மண்ணான
எங்கள் தேசப் பக்தியை,
மலையகத் தமிழன் என்ற
அடையாளம்
மாற்ற நினைக்கும்,
இந்திய விஸ்தரிப்புவாத
எண்ணங்களை,
தொலைந்துப் போய்க்
கொண்டிருக்கும்
எமது கலாச்சாரத்தை,
மறந்து விடு என்
மரத்துப் போன மனமே.

உலக மயமாக்கலின்
கோரத்தை,
வந்து குவிந்து கொண்டிருக்கும்
ஆயுதங்களை,
ஏகாதிபத்திய ஏமாற்றங்களின்
நாளைய குள்ள நரித்தனத்தை
மறந்துவிடு என்
மரத்துப் போன மனமே.

செம்மணியின்,
பிந்தனுவெவவின்,
தலவாக்கெல்லையின்
கந்தப்பொளையின்,
இரத்தினபுரியின்,
இது மட்டுமா?
அமெரிக்க, பிரித்தானிய
சிறைச்சாலைக் கைதிகளையும்,
கொடுமைகளையும்.
மறந்துவிடு என்
மரத்துப் போன மனமே.

வாழ்க்கையை தொலைத்து
விட்டு
தடவிக் கொண்டிருக்கும்
மானங்கெட்ட மனமே
மறப்பதை நிறுத்திவிட்டு
இனிமேலாவது
அடக்கு முறைகளுக்கும்
அநீதிகளுக்கும்
எதிராக
நினைக்கவாவது
துணிந்துவிடு என்
அருமை மனமே.

– சை கிங்ஸ்லி கோமஸ் –

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 11 | யூன் 2004 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 69

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.:2435117, 2335844 பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## இரு தரப்பிற்கும் விட்டுக்கொடுப்பு அவசியம்

தேர்தலுக்கு முன்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செய்த பிரசாரங்களை பார்த்து மீண்டும் ஒரு யுத்தம் வெகுவிரைவாக திணிக்கப்பட்டு விடலாம் என்றே எண்ணப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை அமைத்த பிறகு புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நோர்வே தூதுவர்களுக்கூடாக ஜனாதிபதி சந்திரிகா எடுத்த நடவடிக்கைகளும், பேச்சுவார்த்தை தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களும் யுத்தம் உடனடியாக திணிக்கப்பட மாட்டாது என்று நம்புவதற்கு இடமளித்துள்ளது.

நோர்வே ஏற்பாட்டினூடாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்றும் வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பான விடயங்களிலிருந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். இது ஜனாதிபதியின் முன்னைய நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்ட புதிய முடிவாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஒரு கட்சியான ஜே.வி.பி புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதையோ தமிழ் மக்களுக்கு அதிகாரப்பங்கீட்டின் அடிப்படையில் அரசியல் தீர்வு வழங்கப்படுவதையோ ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் விடுதலை புலிகள் இயக்கத்துடனான பேச்சுவார்த்தை பற்றி ஜனாதிபதி அறிவித்ததற்கு ஜே.வி.பி எதிர்ப்புகளை தெரிவிக்கவில்லை. மாறாக அதனை ஏற்றுக் கொள்வது போன்றே கருத்துக்களை அடக்கி வாசித்து வருகிறது. இதன் மூலம் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக ஜே.வி.பியினுடைய இறுக்கமான நிலையில் தளர்வு ஏற்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகிறது. ஆனால் பௌத்த மத அடிப்படைவாத கட்சியான 'ஹெல உறுமய' மட்டுமே பேச்சுவார்த்தைகளை நடத்தக் கூடாது என்ற கடும் நிலைப்பாட்டில் இருக்கிறது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கையை தொடர்ந்து ஆண்டு வந்த இரண்டு பெரிய கட்சிகளுக்கும் சரியானதோ ஸ்திரமானதோ நிலைப்பபொதுவும் இருந்ததில்லை. ஏனெனில் அவை பேரினவாத, முதலாளித்துவ கட்சிகள் ஏகாதிபத்திய சார்புடையவை. இரண்டு கட்சிகளும் தமிழ் மக்கள் மீது யுத்தத்தை தொடர்ந்து நடத்தியுள்ளன. இடையிடையே "சமாதான நடவடிக்கைகளையும்" முன்னெடுத்துள்ளன.

ஆனால் ரணில் விக்கிரமசிங்ஹா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மேற்கொண்ட "சமாதான நடவடிக்கைகளின்" தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு மேலாக யுத்த நிறுத்தம் தொடர்கிறது. வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதற்கான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அதன் யோசனையை சமர்ப்பித்துள்ளது. அதனடிப்படையில் பேச்சுவார்த்தையை தொடரலாம் என்று ஐக்கிய தேசிய முன்னணி கூறிவந்தது.

அவற்றை விமர்சித்து வந்த ஜனாதிபதி சந்திரிகா நோர்வேயின் ஏற்பாட்டுடன் பேச்சுவார்த்தைகளை ஐக்கிய தேசிய முன்னணி விட்ட இடத்திலிருந்து தொடரக் கூடிய சாத்தியக் கூறுகளை தற்போது வெளிப்படுத்தியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கான விருப்பத்தினை புலிகள் இயக்கமும் வெளிப்படுத்தியுள்ளது. தமிழ்த் தலைவர்கள் என்றழைக்கப்படும் சிலர் ஐக்கிய தேசிய கட்சியின் 'சமாதான நடவடிக்கைகளை' ஒரு அளவுகோலைக் கொண்டும் ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளை இன்னொரு அளவுகோலைக் கொண்டும் மதிப்பிடுகின்ற போக்கை கொண்டிருக்கின்றன. அதாவது ஐக்கிய தேசிய கட்சியினுடைய நடவடிக்கைகள் தான் நேர்மையானவை என்றும், ஜனாதிபதியின் நடவடிக்கைகள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இது பேரினவாத கட்சிகளில் ஒன்றை அனைத்து மற்றயதை நிராகரிப்பதாகும். இனப்பிரச்சினைக்குரிய தீர்வுகள் காணப்படுமிடத்து அவற்றை தற்போதைய அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள் அமுல்படுத்த முடியாது. முழுமையான இடைக்கால நிர்வாகத்தை கட்டி எழுப்புவதற்கு முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்ட ஏற்பாடுகளின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை கொண்டியங்காத போது ஜனாதிபதி அவருக்குள்ள அதிகாரங்களைக் கொண்டு அதிகாரசபையொன்றை அமைத்து நிர்வாகத்தை நடத்தலாம். அவர் ஒரு பிரகடனத்தை செய்து அவ்வதிகாரசபையை ஏற்படுத்தலாம்.

அவரின் பிரகடனத்தை ஒரு தீர்மானமாக நிறைவேற்றி பாராளுமன்ற அங்கீகாரத்தை பெறவேண்டும். அதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியப்படாது. எனவே ஜனாதிபதி வடக்கு கிழக்கிற்கு ஒரு அதிகாரசபையை கொண்டுவர முடியும்.

எனவே இதயசுத்தியுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளையும் சாமாதான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க விரும்பினால் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பாரிய தடைகள் இருக்கப்போவதில்லை. இறுதித் தீர்வு எய்தப்பட்டு அரசியலமைப்பு மாற்றத்துடன் அவை இணைக்கப்படும்போது மக்கள் அங்கீகாரம் தேவைப்படலாம். ஆனால் அதனை நோக்கி நடவடிக்கைகளை முன்னெடுக்க தடைகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

அதேவேளை சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்ட கடன் உதவிகள் வழங்கப்படும் என சம்மந்தப்பட்ட நாடுகளும் நிறுவனங்களும் கூறி வருகின்றன. இது அவர்களது உலகமயமாதலின் கீழான தாராளமயம் தனியார் மயத்துடன் இணைந்த தேவைகளாகும்.

மேலும் ஜனாதிபதியின் இப்புதிய அணுகுமுறையினைத் தடுக்கவும் திசை திருப்பிக் குழப்பவும் ஐ.தே.கட்சி தருணம் பார்த்து உள்ளூரத் தயாராகி வருவதாகவே அறிய முடிகிறது. அவர்கள் ஒரு புறத்தால் அரசாங்கத்திற்குள் உள்ள கருத்து முரண்பாட்டை பயன்படுத்தவும் மறுபுறத்தில் ஹெல உறுமயவை முன் தள்ளிக் கொள்ளவும் திரைமறைவில் முயன்று வருகிறார்கள்.

எனவே சந்திரிகா அம்மையாருக்கு கிடைத்துள்ள இரண்டாவது சந்தர்ப்பத்தை தனது விவேகம் நிறைவேற்று அதிகாரம் என்பனவற்றைத் தூரநோக்குடன் பயன்படுத்திப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து இடைக்கால நிர்வாகச் சபையைச் சாத்தியமாக்குவது உடனடித் தேவையும் கடமையும் ஆகும். இதில் புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் இடம்பெறல் வேண்டும். இது ஒரு புறத்திற்கு மட்டுமன்றி பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இரு தரப்பிற்கும் அவசியமானதாகும்.

- ஆசிரியர் குழு -

# இந்திய ஆட்சி மாற்றமும் இலங்கை மீதான அதன் தாக்கமும்

இந்தியாவின் மத்திய நாடாளுமன்றத்திற்கான 14வது பொதுத் தேர்தல் முடிவுற்று காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணி பதவிக்கு வந்துள்ளது. இந்திய ஜனநாயகம் பற்றி எவ்வளவுக்கு நீட்டி அலங்கரித்து வாசித்தாலும் அதன் சாராம்சம் நிலவுடைமை முதலாளித்துவ ஏகாதிபத்திய நலன் காக்கும் நாடாளுமன்ற ஜனநாயகம் தான் என்ற உண்மையைப் புரிந்து கொண்டே அதன் செயற்பாடுகளைக் காணுதல் வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் ஏனைய இடது சாரிக் கட்சிகளும் இத் தேர்தலில் வழமையை விடவும் கூடுதல் வாக்குகளையும் ஆசனங்களையும் பெற்றிருந்த போதிலும் அவற்றினால் முதலாளித்துவ ஜனநாய கத்தின் சொத்து சுகம் படைத்தவர்களுக் கான சார்பு நிலைப்பாட்டில் எந்தவித தாக்கத்தினையும் மாற்றத்தினையும் செய்ய முடியாது என்பதை அடிப்படையில் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

வாஜ்பாயி - அத்வானி தலைமையிலான இந்துத்துவா ஃபாஸிச மதவெறி ஆட்சியை அகற்றுவதில் மக்கள் தமது வாக்கு வலிமையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். மத்திய ஆட்சியை மட்டுமன்றி மாநில சட்டசபை தனிலும் மக்கள் தமது விருப்பு வெறுப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மக்களது ஆகக் கூடிய நடவடிக்கை வாக்களிப்பது தான் என்றும் அதற்கு மேல் எதுவும் செய்யக் கூடாது என்றுமே முதலாளித்துவ ஜனநாயகம் எல்லை வகுத்து வரையறை செய்துள்ள உண்மையைக் கண்டு கொள்ள வேண்டும். தமது அதிருப்திக்கும் வெறுப்புக்கும் உரிய ஒரு ஆளும் வர்க்க கட்சியை மாற்றி மற்றொரு ஆளும் வர்க்க கட்சியை பதவியில் அமர்த்தி வெறும் எதிர்பார்ப்புகளுடன் மக்களை காத்திருக்கச் செய்து காலத்தைக் கடத்துவதே முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் கைதேர்ந்த வித்தையாகும்.

அந்த வகையிலே தான் இந்திய பாராளு மன்ற முதலாளித்துவ ஆட்சி அதிகார அரங்கிலே மற்றொரு ஆளும் வர்க்க கட்சியான காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைந்துள்ளது. இந்துத்துவா மதவெறி பிடித்த ஃபாசிச பாரதிய ஜனதா ஆட்சி தோல்வி கண்டதில் ஜனநாயக முற்போக்கு சக்திகளுக்கும் பரந்து பட்ட இந்திய மக்களுக்கும் மகிழ்ச்சியேயாகும். ஆனால் அன்றாடப் பொருளாதார சமூக நெருக்கடிகளின் பன்முகப் பிடிகளுள் சிக்கித் தவிக்கும் கோடானு கோடி இந்திய மக்களின் வாழ்வு நிலை மாற்றத்திற்கு புதிய காங்கிரஸ் ஆட்சி எந்தவித பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றப் போகின்றது என்பதே மையப் பிரச்சினையாகும். மத சார்பற்ற ஆட்சி என்ற மகுடத்தின் கீழ் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி மத்தியில் ஆட்சியில் அமர்வதால் இந்திய மக்கள் எதிர் நோக்கும் எந்தவொரு பிரச்சினைக் கும் தீர்வு கண்டு விட முடியாது.

சோனியா காந்தி வெளிநாட்டில் பிறந்த பெண் என்றும் அவர் பிரதமராவது இந்தியர்களின் தன்மானத்திற்கு விடுக்கப்படும் சவால் என்றும் இந்துத்துவ பாராதிய ஜனதாக் கட்சியினர் மிகவும் இழிவானதும் மலிவானதுமான பிரசாரத்தைச் செய்து வந்தனர். அதன் மறைவில் தமது இந்துத்துவ ஃபாஸிசத் திட்டங்களையும் நாட்டின் பொருளாதாரத்தையும் ஏகாதிபத்திய உலக மயமாக்கலுடன் இணைத்தும் வந்தனர். ஆனால் இவற்றுக்கு இந்திய மக்கள் ஏமாந்துவிடாது கிடைத்த சநதர்ப்பத்தில் தமது ஜனநாயக உணர்வுகளை வெளிக்காட்டியுள்ளனர்.

இத் தேர்தலில் இந்துத்துவா மதவெறி பிடித்த ஃபாசிச சங்கப் பரிவாரங்களின் பாராளுமன்ற முன்னணியான பாரதிய ஜனதாக் கட்சி பலத்த தோல்விக்கு உள்ளாகி உள்ளது. இந்தத் தோல்வி அயோத்தி பாபர் மசூதி இடிப்புக்குத் தலைமை தாங்கிய அத்வானி - உமாபாரதி கும்பலுக்கும் ஜாதி வெறியனும் இந்துத்துவ இனமத வெறியனுமான பால்தக்கரே கூட்டத்திற்கும் முகங்களில் வீழ்ந்த பலமான குத்துக்களாகும். குஜராத்தில் நரபலி எடுத்த நரேந்திர மோடிக்கும் ஹைதரபாத்தை அமெரிக்க நகரமாக்கியதாகக் கூறி நின்ற சந்திரபாபு நாயுடுவிற்கும் தமிழகம் தன் காலடியில் எனத் திமிராடிய ஜெயலலிதாவிற்கும் நிமிர முடியாத முதுகடிகளை இந்திய மக்கள் கொடுத்துள்ளனர்.

**வெகுஜனன்**

மேலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக மயமாக்கலுக்கு நாட்டின் கதவுகளை பூரணமாகவே திறந்து விட்டு விவசாயிகளை தற்கொலை புரியவும் தொழிலாளர்களை நடுவீதியில் கைவிடவும் செய்த பொருளாதாரக் கொள்கைகளுக்குப் போட்ட தலையடியேயாகும்.

> **ஒரு ஆளும் வர்க்க கட்சியை மாற்றி மற்றொரு ஆளும் வர்க்க கட்சியை பதவியில் அமர்த்தி எதிர்பார்ப்புகளுடன் மக்களைக் காத்திருக்கச் செய்து காலத்தைக் கடத்துவதே முதலாளித்து ஜனநாயகத்தின் கைதேர்ந்த வித்தையாகும்.**

இத்தகைய அடிகளை வெறுமனே வாக்குச் சீட்டுக்களால் போட்டு இந்திய மக்களது அடிப்படைப் பிரச்சினைகளை மாற்றிவிட முடியாது. எனவே இனிமேல் தான் இந்தியக் கம்யூனிஸ்டுக்கள் இடதுசாரிகள் முன்னால் சவால்களும் கடமைகளும் காத்து நிற்கின்றன. தேர்தல்களுக்கு அப்பால் பரந்த புரட்சிகர வெகுஜன இயக்கங்களும் போராட்டங்களும் அவசியமாகின்றன. மக்கள் நிச்சயம் தயாராகவே இருப்பர். தலைமைகள் தயாராக வேண்டும்.

அதே வேளை சோனியா இந்தியாவின் நிலவுடமை முதலாளித்துவ ஆளும் வர்க்க குடும்பமான நேரு குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதும் அதன் எதிர்கால ஆளும் தலைமைத்துவ வாரிசுகளை அரசியல் அரங்கிற்கு இத் தேர்தல் மூலம் முன்னுக்கு கொண்டு வந்திருக்கிறார் என்பதும் கவனிக்க வேண்டியதாகும். அவரது தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி எத்தகைய பொருளாதாரக் கொள்கையையும் அயல் உறவு நடவடிக்கைகளையும் செய்யப் போகின்றது என்பது புதிய விடயமாக இருக்க மாட்டாது. ஏனெனில் இந்தியாவை புதிய பொருளாதாரக் கொள்கையின் ஊடாக ஏகாதிபத்திய சக்திகளுக்கு தாரை வார்ப்பதில் தொடக்கி வைத்தவர்களே அவர்கள் தான். சீக்கியர் படுகொலைகள், இந்து முஸ்லீம் மோதல், அயோத்தி பாபர் மசூதி இடிப்பு போன்றன இதே காங்கிரஸ் ஆட்சியில் தான் நடைபெற்றன என்பதை எவரும் மறக்க நியாயமில்லை. காஷ்மீர் பிரச்சினையில் அந்த மக்களது சுயநிர்ணய உரிமையை மறுத்து ராணுவ ஒடுக்கு முறையை ஆரம்பித்து வைத்தவர்களும் காங்கிரஸ் ஆட்சியினர் தான். வட கிழக்கு மாநிலங்களில் இடம் பெற்று வரும் சுயநிர்ணய உரிமை கோரிய போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதில் முன்னின்றவர்களும் இதே காங்கிரசினர் என்பது கடந்த கால விடயங்களாகும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைச் சிக்கலாக்கி அதன் மீது தலையிட்டு அதற்கு ஊடாகத் தமது பிராந்திய மேலாதிக்க நோக்கங்களை அடைய முற்பட்டவர்கள் இதே நேரு குடும்பத்தைச் சேர்ந்த ஆளும் வர்க்கத் தலைமையினர் என்பதும் வரலாற்றுப் பதிவுகளாகும். சோனியாவினதும் அவரது பிள்ளைகளினதும் ஏனைய காங்கிரஸ் மூத்த தலைவர்களதும் நோக்கும் போக்கும் இதுவரை இந்திய ஆளும் வர்க்க கொள்கை வகுப்பாளர்களது பாதையில் தான் என்பது தெளிவானதாகும். சில பெயர் மாற்றங்களும் நடைமுறைத் தோற்றங்களும் இடம் பெறலாமே தவிர அடிப்படையான சீர்த்திருத்தங்களோ மாற்றங்களோ இடம் பெறப் போவதில்லை. இதனை முன் உணர்ந்து கொண்டதினாலேயே காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற சேர்ந்து நின்ற இந்தியாவின் இரண்டு பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஆட்சியில் பங்கேற்காது ஆதரவை மட்டும் வழங்கி நிற்கும் முடிவிற்கு வந்துள்ளன. ஆட்சியில் பங்கேற்று தங்களைத் தாழ்த்திக் கொள்ளாது தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொண்டமை இலங்கையின் சீரழிந்து சிதைந்து போய் கிடக்கும் பாராளுமன்ற இடதுசாரிகளுக்கு நல்ல உதாரணச் செய்தியாகும். ஆளும் வர்க்கப் பதவிப் போதையில் அமிழ்ந்து கரைந்து போன அந்த ஜடங்களுக்கு இதனை உணர்ந்து கொள்ளும் திறன் எங்கே இருக்கப் போகிறது.

காங்கிரஸ் ஆட்சியில் அயல் உறவுகளில் பெரும் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது என்றே நம்பலாம். பாகிஸ்தான் பங்காளதேஷ், நேபாளம், இலங்கை ஆகியவற்றுடன் இந்தியா வைத்திருக்கும் உறவு பிராந்திய மேலாதிக்க உள் நோக்கம் கொண்ட உறவு என்பதில் சந்தேகம் இல்லை. இதனை ஒரு கட்சியோ தலைவரோ தீர்மானிப்பதில்லை. இது நேரு காலத்திலிருந்து வகுக்கப்பட்ட "பெரிய அண்ணன்" ஆதிக்க நோக்கிலிருந்து வளர்ந்து வந்த ஒன்றாகும். இலங்கையின் இனப் பிரச்சினை விடயத்தின் ஊடாக இந்திரா காந்தியும் பின்பு ரஜீவ்காந்தியும் தங்களது இந்திய மேலாதிக்கத்தை பரீட்சித்துப் பார்த்தனர். இப்போது மீண்டும் அக்குடும்பத்தின் தலைமை பதவிக்கு வந்துள்ளது. அவர்களைச் சுற்றி பழமையும் இந்திய ஆதிக்கத் திமிரும் கொண்ட கொள்கை வகுப்பாளர்களும் நடைமுறைப் படுத்திய ராஜதந்திரிகளும் புதிய மிடுக்குடன் நிற்கின்றனர். இதனைப் பயன்படுத்துவதற்கு இலங்கையின் ஆளும் வர்க்க தலைமைகளும் தயாராகவே இருக்கின்றன. இதன் பிரதிபலிப்பை எதிர் வரும் மாதங்களில் காண முடியும் என்றே நம்பலாம்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# அமைதிக்கான முன்னகர்வா? புயலுக்கான முன்னறிவித்தலா?

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இடைக்காலத் தீர்வுக்காக விடுதலைப் புலிகள் ஒரு வருடம் முன்பாக முன் வைத்த இடைக்கால நிர்வாக ஆலோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளைத் தொடக்க ஆயத்தமாக இருப்பதாக அறிவித்ததை அடுத்து மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தை களைத் தொடங்கும் வாய்ப்பு வலுப் பெற்றுள்ளது. பேச்சுவார்த்தைகளின் முடிவில் என்ன கிட்டும் என்பது இன்னொரு விடயம். எனினும் கடந்த சில ஆண்டுகளாகச் சனாதிபதி எடுத்த நிலைப்பாட்டுடன் ஒப்பிடுகையில் இது வரவேற்கத்தக்க மாற்றம்.



எந்த அடிப்படையிற் பேச்சுவார்த்தை கள் முன்னெடுக்கப் பட வேண்டும் என்பதில் உடன்பாடு இல்லாமல் பேச்சுவார்த்தை கள் தொடர இயலாது. இது வரை காலமும் மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளியில் இன்னொன்றைப் பேசுவது தான் ஒவ்வொரு பேச்சு வார்த்தையிலும் ஒவ்வொரு அரசாங்கமும் மேற்கொண்ட அணுகுமுறையாக இருந்தது.

சனாதிபதி என்ன நோக்கத்துடன் மிகவும் இறங்கி வந்து, இடைக்கால நிருவாக சபைகளைப் பற்றிய ஆலோசனைகளை முன்வைத்துப் பேச உடன்பட்டுள்ளார் என்பது பற்றிய ஐயங்கள் நமக்குள் இருக்கலாம். இன்று எந்தப் பாராளுமன்ற அரசியல் வாதியினதும் சொற்களையும் மிகுந்த ஐயத்துடனேயே கருத்திற் கொள்கிறோம். எனவே, சனாதிபதியின் நோக்கம் கபடமானது என்றாலுங் கூட, இதற்கு முந்திய எந்தப் பேச்சுவார்த்தையையும் விட வரப்போகும் பேச்சு வார்த்தைகள் பயனோ நம்பகத் தன்மையோ அற்றதாகாது.

இதுவரை அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஊக்குவித்ததாகப் பெருமை பேசிய யூஎன்.பி தான் ஆட்சியிலிருந்து இறக்கப்பட்ட பின்பு, அமைதியை ஊக்குவிக்க என்ன செய்யும்? இப்போது யூ.என்.பி ஆதரவான ஊடகங்கள் சனாதிபதியும் அவரது கட்சியனரும் சமாதான முயற்சிக்கான தனது எதிர்ப்பை சிறிது அடக்கி வாசிக்கிற ஜே.வி.பியும் தமது பழைய பேரினவாத நிலைப்பாட்டிலிருந்து மாறி நிற்பதை ஏளனஞ் செய்கின்றனவே ஒழிய அதை ஒரு வரவேற்கத் தக்க மாற்றமாக ஊக்குவிக்கவில்லை.

எந்த நிலைமைகளின் கீழும் இந்த அரசாங்கம் அமைதிப் பேச்சுவார்த்தைகட்கு எடுக்கும் முயற்சிகளை ஆதரிப்போம் என்று யூ.என்.பி தெட்டத் தெளிவாக அறிவிக்குமா? அல்லாது போனால், முன்பு பொதுசன முன்னணி அவர்கள் மீது குற்றஞ் சாட்டிய விதமாக, "விடுதலைப் புலிகளுக்கு அதிகம் விட்டுக் கொடுத்து விட்டார்கள்" என்று குற்றஞ் சாட்டிக் குழப்ப முயலுமா? இது நடக்க இயலாத விடயமல்ல. யூஎன்.பியின் கடந்த காலம் ஒன்றும் அப்பழுக்கற்ற தல்ல. இது தமிழ்த் தலைமைகள் வெளியே கூற விரும்பாத ஒரு உண்மை. இன்று வரை 1977, 1983 வன்முறைகட்கும் 1983க்குப் பிறகு தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட போருக்கும் மன்னிப்புக் கேட்க யூஎன்.பி முன்வர வில்லை. யூ.என்.பியைக் கண்டித்துக் கொண்டே பொதுசன முன்னணி போரை மேலும் மும்முரமாக்கியது.

**மோகன்**

பேச்சு வார்த்தைகட்கு இணங்கிவரக் காரணம் நல்ல நோக்கமாக இருந்தால் மட்டுமே பேச்சுவார்த்தைகளை நடத்த இயலும் என்பது செல்லாது. ஏனெனில் சூழ்நிலைகளின் கட்டாயமும் வெளி நெருக்குவாரமுமே ஒவ்வொரு அரசாங்கத்தையும் அமைதி பற்றிப் பேசுவதற்குத் தூண்டியுள்ளன.

யூஎன்.பி பேச்சுவார்த்தைகட்கு உடன் பட்ட போது யூஎன்.பியும் விடுதலைப் புலிகளும் அந்தரங்க சுத்தியுடனும் விட்டுக் கொடுப்பு மன பாவத்துடனும் பேச வேண்டும் என்று தான் நாம் வற்புறுத்த முடிந்தது. எவரும் அவ்வாறு நடக்குமாறு நம்மாற் தீர்மானிக்க இயலாது. அதே வேளை, எந்த நேர்மையீனமும் பேச்சுவார்த்தைகட்குக் கேடு விளைவிக்கும் என்பது பற்றி நாம் தெளிவாக அறிவோம்.

யூஎன்.பியுடனான பேச்சுவார்த்தைகள் முன்னேறாததற்குப் பொதுசன முன்னணியோ ஜே.வி.பியோ கூடக் காரணமில்லை. விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதில் இல்லாவிடினும் முன்னேறாது கவனித்துக் கொள்வதில் யூஎன்.பி முக்கியஸ்தர்களது பங்கு பற்றிய ஐயங்கள் இருந்து வந்துள்ளன. ஏற்கப்பட்ட எந்த முக்கியமான முடிவும் ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதற்கு, இன்று வரை, நல்ல விளக்கம் எதுவுமே கிடைக்கவில்லை. கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பிளவும் மோதலும் அயல் நாடு ஒன்றின் தூண்டுதலால் நடந்தது என்பது உண்மை. அந்த அயல் நாட்டுக்கு நெருக்கமான ஒரு யூஎன்.பி பிரமுகர் பற்றிய பல கேள்விகள் எழுந்துள்ளன. இவற்றையெல்லாம் யாரும் பூசி மெழுகக் கூடாது.



பேச்சுவார்த்தைகள், தெளிவாக அடையாளங் காணப்பட்டு ஏற்கப்பட்ட அடிப்படைகளின் மீதே ஒழுங்குகாகத் தொடர முடியும். இதையே நாம் மீண்டும் வற்புறுத்த வேண்டியுள்ளது.

1994ல் சந்திரிகா குமாரதுங்கவின் தேர்தல் வாக்குறுதிகளும் சமாதானத்துக்காக எடுத்த முதல் முயற்சிகளும் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தின. எனினும் அரசிடமிருந்து எந்தவிதமான தெளிவான தீர்வு ஆலோசனையுமற்றுப் பயனற்றுப்போன பேச்சுவார்த்தைகள் பிரச்சனையை மேலும் மோசமாக்கின. வஞ்சகமான நோக்கத்துடனேயே அமைதி பற்றிய பேச்சுக்கள் மூலம் தீர்வு பற்றிய திட்டமேதும் இல்லாமல் அரசாங்கம் காலத்தைக் கடத்துவதாகக் கருதியே விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தைக் கைவிட்டுக் தாக்குதலைத் தொடங்கினர்.

ஜனாதிபதி பழைய அனுபவங்களிலிருந்து எதையாவது கற்றிருப்பார் என்பது நமது நம்பிக்கை. இன்னொரு முறை போர் ...ளுவது போர் வெறியர்களுக்கும் ...ரால் பணம் திரட்டுவோருக்கும் ...ழ்வூட்டலாம். சில அயல் ஆதிக்க ...திகள் அதிற் குறுகிய கால நன்மை ...டலாம். நாட்டின் எந்த ஒரு தேசிய ...த்துக்கும் அது நல்லதல்ல. எனவே ...ன் நாம் அரசாங்கத்தின் ...நோக்கங்கள் எத்தகையன என்பது பற்றிய எந்த விதமான மயக்கமுமின்றி அரசாங்கம் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க முன்வந்ததை வரவேற்க வேண்டும்.

அதே வேளை, அமைச்சர் கதிர்காமர் போன்றோரது குட்டையைக் குழப்புகிற முயற்சிகள் பற்றியும், முஸ்லிம் தலைமைகளது உள் முரண்பாடுகளைப் பாவித்துப் பேச்சுவார்த்தைகளைத் திசை திருப்புவது பற்றியும், அயல் தலையீடுகள் பற்றியும் நாம் எச்சரிக்கையாக இருப்பதுடன் அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் முனைப்பாக இறங்க வேண்டும்.

பொது மக்கள் நடுவே கட்சி வேறுபாடற்று அமைதிக்கான ஒரு பிரசார இயக்கத்தை முன்னெடுப்பதன் மூலமே அமைதியைக் குழப்ப முயலும் விஷமிகளை மக்களிடமிருந்து தனிமைப் படுத்தி அமைதியான நியாயமான தீர்வொன்றை வந்தடைய முடியும்.

# இன்றைய அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும்!

**– நமன் –**

அண்மைய தேர்தலின் போதும் அரசாங்கம் அமைத்த பின்பும் ஜனாதிபதி வற்புறுத்திக் கூறி வரும் ஒரு விடயம் அரசியலமைப்பை மாற்றியமைப்பது பற்றியதாகும். இதனால் அரசியல் அரங்கில் இது பற்றிய விவாதம் எழுந்துள்ளது. இன்று எதிர்க்கட்சி வரிசைக்கு மாறியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசியலமைப்பு மாற்றத்தை எதிர்த்து நிற்கின்றது. அவ்வாறே சில தமிழ் முஸ்லீம் தலைமைகளும் அரசியலமைப்பு மாற்றப்படுவதை எதிர்க் கின்றன. அதேவேளை ஜனாதிபதியுடன் அணி சேர்ந்துள்ள கட்சிகள் அரசிய லமைப்பு மாற்றத்தை ஆதரிக்கின்றன. இந் நிலையில் இவ் அரசியலமைப்பு மாற்றப்படவேண்டுமா? இல்லையா என்பது பற்றிக் கருத்துக் கூற வேண்டி யுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இன்றைய அரசியலமை ப்பை மாற்றியமைக்க வேண்டும் என்று கூறி வருவது இப்போது தான் முதல் தடவையல்ல. 1994ம் ஆண்டிலிருந்தே கூறிவருபவர். அவ்வாறு கூறிக் கொண்டே அந்த அரசியலமைப்பின் கீழான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இறுகப் பற்றி வந்தவர். அந்தப் பதவியை ஆண்டு அனுபவித்த அவர் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத இன்றைய சூழலில் எவ்வாறு அரசியலமைப்பை மாற்றப் போகிறார் என்பது மிகவும் சிக்கலானதும் நெருக்கடி மிக்கதாகவும் இருக்கப் போகின்றது.

சந்திரிகா அம்மையார் அடுத்த தடவை ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிட முடியாது. அரசியலமைப்பின் படி இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் பதவி வகிக்க முடியாது. எனவே அரசிய லமைப்பை மாற்றி பாராளுமன்ற பிரதமர் பதவி என்பனவற்றுக்கு அதிகாரங் களைக் கூட்டும் புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதன் மூலம் தொடர்ந்து அதிகாரக் கடிவாளக் கயிற்றை தன்கையில் வைத்து தமது குடும்ப ஆதிக்கத்தைத் தொடர வழிவகை தேடுகிறார் சந்திரிகா என்பதில் உண்மை இருக்கவே செய்கிறது.

அவரது அரசியலமைப்பு மாற்ற நோக்கங்கங்கள் வேறாக இருந்த போதிலும் இன்றைய அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும் என்பதற்கான மக்கள் சார்பு நியாயங்கள் அவசியமான வையாகும். 1978ல் இவ் அரசியலமை ப்பை ஜே.ஆர்.ஜெயவர்த்தன மிக மூர்க்கத்தனமாகக் கொண்டு வந்து நிறைவேற்றிய போது இதனால் நாடும் மக்களும் ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமை விரோத நடைமுறைகளையும் பலத்த அழிவுகளையும் அனுபவிக்க வேண்டி வரும் என்பதை நாம் எடுத்துக் கூறினோம். அன்று ஜே.ஆருக்கு பாராளுமன்றத்தில் இருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு இதனைச் செய்து முடித்தார். தானே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் மாறி இரு தடவைகள் தொடர்ந்து அதிகாரத்திலிருந்து ஒரு இருண்ட கால ஆட்சியை நடாத்தினார். அவரைத் தொடர்ந்து பிரேமதாச, டி.பி. விஜயதுங்க ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ஆட்சி நடாத்தினர். அதன் பின்பே சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியானார்.



**ஜே.ஆர். முதல் சந்திரிகாவரை தனிநபர் சர்வாதிகார ஜனாதிபதி பதவியை ஆண்டு அனுபவித்தவர்களாவர்.**



கால் நூற்றாண்டைக் கடந்து நிற்கும் இன்றைய அரசியலமைப்பு இதுவரை பெரு முதலாளிகள் நிலவுடைமை யாளர்கள் பௌத்த சிங்களப் பேரின வாதிகள் ஆளும் வர்க்க அதிகார சக்திகள், அந்நிய மூலதனக்காரர்கள், பல்தேசியக் கம்பனிகள், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத் திமிங்கிலங்கள், சமூகச் சீரழிவுக் கும்பல்கள், ஏகாதிபத்திய வாதிகள் போன்றவர்களுக்கே பயனும் பாதுகாப்பும் வழங்கி வந்துள்ளது. அதேவேளை தொழிலாளர்கள் விவசாயிகள், அரசாங்க தனியார் துறை ஊழியர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் என்போருக்கும் குறிப்பாக தேசிய இனங்களுக்கும் இவ் அரசியலமைப்பு பாதகமானதாகவும் எதிரானதாகவும் இருந்து வந்திருக்கிறது.

இன்றைய அரசியலமைப்பின் கீழ் தான் பொருளாதாரச் சுரண்டல் பல தளங்களிலும் தாராளமாக்கப்பட்டது. அரசாங்க பொது உடமைகள் தனியார் மயமாக்கப்பட்டன. திறந்த கதவுக் கொள்கை மூலம் பொருளாதார இறக்குமதிப் பெருக்கமும் கல்வி சமூகப் பண்பாட்டுக் கூறுகளும் சீரழிக்கப்பட்டன. நாடு ஒட்டு மொத்தமாக நவ கொலனித் துவமாக்கப்பட்டது. உழைக்கும் மக்களின் உரிமைகள் நசித்து மறுக்கப்பட்டன. ஜனநாயக தொழிற்சங்க உரிமைகள் மறுதலிக்கப் பட்டு செல்லாக்காசுகள் ஆக்கப்பட்டன. யாவற்றுக்கும் மேலாக சிங்கள மக்கள் மத்தியில் ஆயுத ஒடுக்கு முறைகள் மூலம் இரத்த ஆறு ஓடவைக்கப்பட்டது. அதே வேளை வடக்கு கிழக்கில் இன ஒடுக்கு முறை ராணுவ மயமாக்கப்பட்டு யுத்த சூழலில் தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர். இடம் பெயர்ந்து இன்றும் திரும்ப முடியாது இருந்தும் வருகின்றனர். இவை அனைத்திற்கும் இன்றைய அரசியல மைப்பு க்கும் எவ்வித தொடர்போ உறவோ இல்லை என எந்த அரசிய லமைப்பு நிபுணரும் வாதிட முடியாது.

இத்தகைய அரசியலமைப்பிற்கு இதுவரை 17 திருத்தங்கள் செய்யப் பட்டன. இதில் ஒன்று தான் ஆறாவது திருத்த சட்ட மூலமாகும். அச்சட்டத்தின் மூலம் பிரிவினை கோருவதற்கு எதிரான சத்தியப் பிரமாணம் செய்வது கட்டாய மாக்கப்பட்டது. இதனால் அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது பதவிகளை இழந்தனர். அ. அமிர்த லிங்கம் பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாகப் பெற்றுக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இதனால் இழக்க வேண்டியதாயிற்று. இவ்விடயத்தில் பல தமிழ் அரசியல் வாதிகள் மறந்து போன விடயம் என்னவெனில் ஜே.ஆர் கொண்டு வந்த அரசியலமைப்பிற்கான ஆறாவது திருத்தத்தின் கீழ்தான் இன்றும் பதவிப் பிரமாணம் செய்யப்படுகின்றது என்பதாகும். பிரிவினையை நிரா கரிக்கும் வாசகத்தின் கீழ் தான் அதே தமிழர் விடுதலைக் கூட்டணியும் அ. அமிர்தலிங்கமும் அடுத்த தடவை பாராளுமன்றம் சென்றனர். இன்றைய 22 தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட அதே ஆறாவது திருத்தத்தின் கீழ்தான் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர் என்பதும் நினைவுபடுத்த வேண்டிய ஒன்றாகும். இத்தகைய தமிழ்த் தேசிய இன விரோத விதிகளை உள்ளடக்கிய ஒரு அரசியலமைப்பை மாற்றக் கூடாது என தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பேசி வருவது தான் விநோதமாக உள்ளது.

தனிநபர் சர்வாதிகாரம் செலுத்தவும் நாட்டுக்கும் மக்களுக்கும் குறிப்பாகத் தேசிய இனங்களுக்கும் தீங்கிழைப் பதற்கு காரணமாகவும் தொழிலாளர்கள் விவசாயிகள் உழைக்கும் மக்களுக்கு விரோதமாகவும் நாட்டு வளங்கள் கொள்ளையிடுவதற்கு வாய்ப்பளிப்ப தாகவும் இருந்து வரும் இன்றைய அரசியலமைப்பு முற்று முழுதாகவே மாற்றியமைக்கப் படல் வேண்டும்.

அதே வேளை புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப் பானது நாட்டிற்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் உரிய உரிமைகளை உத்தரவாதம் செய்யும் ஜனநாயக அம்சங்கள் நிறைந்ததாக இருப்பது அவசியம். ஆளும் வர்க்கத்தினரின் அதிகார வேட்கைக்கு புதிய அரசியலமைப்பு பலியாக்கப்படல் கூடாது. ஆளும் வர்க்க ஆதிக்க அரசியல் குடும்பங்களின் அதிகார இருப்புக்கும் நீடிப்பிற்கும் புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பு தளமாக இருக்கக் கூடாது.

எந்தவொரு அரசியலமைப்பும் அடிப்படையில் வர்க்க நலன்களும் தேவைகளும் சார்ந்தே உருவாக்கப் படுகின்றன. சோஷலிச அமைப்பின் கீழான அரசியலமைப்பு மட்டுமே ஏகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் தேசிய இனங்களின் உரிமைகளை ஜனநாயக அடிப்படையில் உத்தரவாதப்படுத்தி பாதுகாக்கும் அரசியலமைப்பாக இருக்க முடியும். ஆனால் அத்தகைய நிலை வென்றெடுக்கப்படும் வரை சும்மா இருக்க முடியாது. முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழான அரசியலமைப்புகளில் தொழிலாளர்கள் விவசாயிகள் தேசிய இனங்கள் மற்றும் உழைக்கும் மக்களின் ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தி கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுவது தவிர்க்க முடியாத தேவையுமாகின்றது. இந்த அடிப்படையிலேயே நம் அரசியலமைப்பு மாற்றத்தைக் கோருகின்றோம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும்

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

பேராசிரியர் சி. சிவசேகரம் (9)

முற்றாக முதலாளிய முறைக்கு உட்பட்ட சமூகத்தில் கல்வி அச் சமூகத்தின் உற்பத்தி முறைகளின் வளர்ச்சிக்கு ஏற்ற விதமாக விருத்தியடைய வேண்டியிருக்கிறது. தொழில் நுட்ப அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சி வெறுமனே நவீனமான முறையில் அமைந்த அதிக வேகத்தில் உற்பத்தி செய்யும் ஆற்றலைக்கொண்ட கருவிகளில் மட்டுமே தங்கியிருக்க இயலாது. அவற்றை இயக்கும் ஆற்றல் உடைய ஒரு பெரிய தொழிலாளர் படையையும் அது வேண்டி நிற்கிறது. இதன் விளைவாக மொழி ஆற்றல், கணித அறிவு, விஞ்ஞான அறிவு போன்றவை படிப்படியாகக் கூடிய முக்கியம் பெறுகின்றன. படிப்பால் உயர்வது என்பது முதலாளியத்தின் தேவையல்ல. அது முதலாளியத்தின் லாபத்தைப் பெருக்குவதற்காக இயங்குகிற நிருவாக மட்டத்திலும் பிற நடுத்தர வர்க்கத்தினர் நடுவிலுமே ஒரு அவசியமான தேவையாக இருந்து வந்துள்ளது.

கொலனியச் சூழலில் அந்நிய ஆதிக்கம் தன்னைத் தக்க வைத்துக் கொள்வதற்காக உருவாக்கிய அதிகார அடுக்கு, கொலனிய நாட்டில் இருந்த ஏற்றத்தாழ்வான சமூக அடிப்படைய ஆதாரமாகக் கொண்டே நிறுவப்பட்டிருந்ததெனலாம். தன் தேவைக்கு உதவாத முறையிலோ தனக்குத் தீங்கிழைக்காத எதையும் வீணாகக் குழப்பும் நோக்கிலோ கொலனி ஆதிக்கம் கொலனிகளின் சமூக அமைப்பில் குறுக்கிட்டது மிகக் குறைவே. இதனால் இலங்கையின் கல்வி முறை கொலனியத்துக்குச் சேவை செய்து சமூகத்தில் தம்மை உயர்த்திக் கொள்ளும் நோக்குடைய ஒரு பரந்த நடுத்தர வர்க்கத்தையும் உருவாக்கியது. இந்த நடுத்தர வர்க்கத்தினுள் இருந்த அதிகார அடுக்குகள் கணிசமான அளவுக்கு அந்த வர்க்கத்தின் ஒவ்வொரு பிரிவினதும் சமூக அந்தஸ்துடனும் வேறு சமூக ஏற்றத் தாழ்வுகளுடனும் உறவு கொண்டிருந்தன. இது கல்வி முறையிலும் கல்வியின் நோக்கத்திலும் நேரடியான ஒரு பாதிப்பைக் கொண்டிருக்கிறது.

**இலங்கையின் கல்விமுறை கொலனித்துவத்திற்கு சேவை செய்து சமூகத்தில் தம்மை உயர்த்திக் கொள்ளும் நோக்குடைய ஒரு பரந்த நடுத்தர வர்க்கத்தையும் உருவாக்கிக் கொண்டது.**

கொலனியச் சிந்தனையின் ஆதிக்கம் நமது கல்வி முறையில் ஏற்படுத்திய தாக்கத்தினின்று விடுபட வேண்டும் என்ற தேவையை வெளிவெளியாக ஒப்புக் கொள்ளக் கூட நமக்கு நீண்ட காலம் எடுத்தது. நாம் கொலனியத்தினின்று முற்றாக விடுபடவில்லை என்பதுடன், நவகொலனியத்துக்குள் சிறைப்பட்டுள்ளோம் என்பதும் நமது கல்வி முறையில் ஏற்பட்டு வந்த மாற்றங்களிலும் அடையாளங் காணப்படக் கூடியதாக உள்ளது.

கொலனி ஆட்சியின் கீழ் கல்வியின் நோக்கம் பிரித்தானிய அதிகாரத்துக்குச் சேவகம் செய்யும் ஒரு பரம்பரையும் கூலி உழைப்பாளர்களுடன் கொலனிய எசமானர்களது நேரடி உறவைத் தவிர்க்கும் விதமாக ஒரு இடைநிலை வகுப்பையும் கட்டியெழுப்புவதாகவே இருந்தது. இவ்விடயத்தில் இருந்த அதிகார அடுக்குக்கள் பறங்கியர், ஆங்கில மயப்பட்ட கிறிஸ்துவ சமயத்தவர் என்று தொடங்கிக் கிறிஸ்தவரல்லாத உயர் வர்க்கத்தினர், உயர் சாதியினர் என்று படிப்படியாகக் கீழிறங்கி வந்தது.

நகரஞ் சார்ந்த வாழ்க்கை கொலனியப் பண்பாட்டின் கூறுகளை அதிகளவில் உள்வாங்கி இருந்த காரணத்தால் நகரின் நடுத்தர வர்க்க எதிர்பார்ப்புக்களும் அவர்கள் வேண்டி நின்ற கல்வி முறையும் உயர் அரச பதவிகளையே இலக்காகக் கொண்டிருந்தன. இவ் விடயத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் குறுக்கீடும் இதே இலக்குகட்கு வசதியான முறையில் நடந்தது. மதமாற்றத்தின் மூலம் கல்வி, கல்வி மூலம் வசதியான உத்தியோகம் என்பது கிறிஸ்தவ மத மாற்றத்திற்கு ஒரு தூண்டுகோலாக இருந்தன. கொழும்பை மையமாகக் கொண்டும் பின்னர் சில அரசியற் சூழ்நிலைகளால் யாழ்ப்பாணத்திலும், அதினுங் குறைவாக இருந்தாலும், கண்டி, காலி, திருகோணமலை, மட்டக்களப்பு என்று மேல் மாகாணக் கரையோர நகரங்கள் என்று மிஷனரி மாரின் பாடசாலைகள் விரிவு பெற்றன.

இவற்றின் மூலம் கல்வி பெற்றவர்களும் கொலனிய ஆட்சியுடனான சமரசங்கள் மூலம் சமூக உயர்வு பெற்றவர்களுமே அடுத்த தலைமுறைகளில் தம்மைத் தேசியத் தலைவர்களாக்கிக் கொண்டார்கள். இவர்களுக்குள் இருந்த இரண்டக நிலை ஒருபுறம் வெள்ளையர் முன் பணிந்து நிற்கிற நிலை பற்றிய சிறிதளவான மனச் சங்கடத்தாலும் மறுபுறம் நாட்டின் ஒடுக்கப்பட்ட பெரும்பான்மையினரை விடத் தம்மை உயர்வாகக் கருதுகிற ஒரு மன நிலைமையாலும் அமைந்தது. இவர்கள் ஆங்கிலத்திலேயே செயற்பட விரும்பியதற்கான காரணங்கள் பலவும் இருக்கலாம். தமது சமூக உயர்நிலையைத் தொடர்ந்தும் பேணுவதில் ஆங்கிலத்தின் பங்கை அவர்கள் நன்கறிந்திருந்தனர்.

இதனாலேயே தாய்மொழிக் கல்வி என்பது ஆங்கிலக் கல்விக்கு மாற்றீடாகவும் சிங்களத்தையும் தமிழையும் வளமான நவீன மொழிகளாக மாற்றுவதையும் தவிர்த்த அரசியல் நோக்கங்களைக் கொண்டிருந்தது என ஐயுற வேண்டியுள்ளது. கொலனிய முறையின் கீழ் ஆங்கில மொழிக் கல்வி மூலம் சமூக உயர்வு கண்டிராத ஒரு மேல்தட்டு வர்க்கத்தைக் கொண்டிருந்த கிழக்காசிய நாடுகளில் தாய்மொழிக் கல்வி எல்லா மட்டங்களிலும் விருத்தி பெற்ற அளவுக்கு இந்தியாவிலோ இலங்கையிலோ பிற தென்னாசிய நாடுகளிலோ விருத்தி பெறாததற்கு ஆங்கிலம் படித்த ஒரு உயர் நடுத்தர வர்க்கத்தின் குறுக்கீடு ஒரு முக்கிய பங்களித்தது.

ஆங்கிலத்தையே நவீன அறிவுக்குரிய மொழியாகக் கருதுகிற ஒரு பலவீனம் கொலனி ஆட்சியைத் தொடர்ந்த ஆண்டுகளிலும் மிகவும் வலுவாக இருந்தது. இத்தகைய ஒரு பின்புலத்திலே பலவேறு சமூக அழுத்தங்கள் தாய்மொழிக் கல்வியை மேலும் விரிவுபடுத்துமாறு வேண்டி நின்றதால் பாடசாலைக் கல்விக்கு வரையறைப்பட்டிருந்த தாய்மொழிக் கல்வியைப் பல்கலைக்கழகத்துக்கும் விரிவுபடுத்தும் தேவை ஏற்பட்டது.

1956ம் ஆண்டை அண்டிய மாற்றங்கள் தாய்மொழிக் கல்விக்கு அளித்த முக்கியத்துவம் பெரிது. எனினும் அந்த மாற்றத்தைக் கொண்டுவந்த சக்திகள் தேசிய பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு வலிமை போதாத ஒரு தேசிய முதலாளி வர்க்கத்தைச் சார்ந்தவை. எனவே கல்வி பற்றிய பார்வை ஒரு புறம் கொலனிய யுகத்து விழுமியங்கட்கும் அரசாங்கப் பதவிகள் பற்றிய எதிர்பார்ப்புகட்கும் நடுவிலும் மறுபுறம் தேசிய உணர்வு, தேசியவாதம், தாய்மொழிப்பற்று என்பனவற்றின் நடுவிலும் செயற்பட்டவர்களிடையிலான இழுப்பறியாயிற்று.

பின்னைய சக்திகளின் தலைமை பேரினவாதிகளதும் குறுகிய தேசியவாதிகளதும் கைவசமே இருந்ததால் அடிப்படையிற் சரியான சில கல்விக் கொள்கைகள் சமூக நடைமுறையுடன் இணங்கிப் போவது இயலாது போயிற்று.

**தாய்மொழிக் கல்வியின் போதாமைகளும் தோல்விகளும் மொழிகளின் பலவீனத்துடன் மட்டுமன்றி வர்க்க நலன் காக்கும் சக்திகளினாலும் ஏற்பட்டவைகளாகும்.**

இன்றுங்கூட இலங்கையிலும் இந்தியாவிலும் தாய்மொழிக் கல்வியின் போதாமைகளும் தோல்விகளும் அந்தந்த மொழிகளின் பலவீனமாகவே காணப்படுமளவுக்கு, அவை குறிப்பிட்ட வர்க்க நலன்களது மோதலின்போது பெரும்பான்மையான மக்களது நலன் சார்ந்த முயற்சிகள் கண்ட தோல்விகளாகக் காணப்படுவதில்லை.

அதேவேளை, தாய்மொழிக் கல்வியை வலுப்படுத்த எடுக்கப்பட்ட நேர்மையான ஆர்வமிக்க முயற்சிகள் பற்றியும் குறிப்பிடாமல் விட இயலாது. நாற்பது வருடங்கட்கு முன்பு எடுக்கப்பட்ட இந்தச் சீரிய முயற்சிகள் ஏன் தோல்வி கண்டன என்ற கேள்விக்கான விடை கல்வியின் நோக்கம் என்ன என்ற கேள்வியுடன் நெருக்கமான தொடர்புடையது.

தாய்மொழிக் கல்வியுடைய தோல்வி மட்டுமன்றி நாட்டின் கல்வி முறையினது தோல்வியும் கல்வி பற்றிய ஆளும் வர்க்கத்தினது பார்வையின் தெளிவீனத்துடனும் வர்க்க நலன்களுடனும் அவ் வர்க்கத்தை அண்டி நின்ற ஒரு நடுத்தர வர்க்கச் சமூகப் பார்வையுடனும் சேர்த்து நோக்கப்பட வேண்டும்.


# ஸ்டாலினைக் கண்டு அஞ்சுவோர் யார்?

ட்ரொட்ஸ்கிக்கும் ஸ்டாலினுக்கும் இடையேயான பகை அதிகாரப்போட்டியில் ஆரம்பித்தது தான். அடுத்தசோவியத் அதிபராக வரும் வாய்ப்பை இழந்த பின்னர் தான் ட்ரொட்ஸ்கி தனக்கென தனித்துவமான கொள்கைகளை வகுத்துக் கொண்டார். இவ்வாறு எழுதினார் ஒரு மேற்குலகப் பத்திரிகையாளர். ஸ்டாலினுக்குப் பதிலாக ட்ரொட்ஸ்கி அதிபராக வந்திருந்தாலும் வெறும் ஒரு ஸ்டாலினிச வாதியாகத் தான் இருந்திருப்பார். ஏனெனில் ஸ்டாலினிச ஆட்சிமுறை என்றழைக்கப்படும் பல நடவடிக்கைகள் அனைத்தும் லெனின் ட்ரொட்ஸ்கி ஆகியோர் அதிகாரத்தில் இருந்த காலத்திலேயே வந்து விட்டன. லெனின் காலத்திலேயே போல்ஷேவிக்குகளுக்கு எதிராக சமூக – ஜனநாயக நிலையெடுத்த மென் ஷெவிக்குகளும் தீவிர இடது சாரிகளான அனார்க்கிஸ்டுகளும் (அராஜகவாதிகள்) அடக்கப்பட்டனர். ஸ்டாலினுக்கு அந்த வேலை மிச்சமாகப் போய்விட்டது. இன்றும் கூட அராஜகவாதிகள் லெனினையும் ட்ரொட்ஸ்கியையும் தமது வில்லன்களாகப் பார்க்கின்றனர்.

அன்றைய சமூக ஜனநாயகவாதிகளின் சித்தாந்தியாகவிருந்த கௌட்ஸ்கியின் போக்கை லெனின் திரிபுவாதம் எனக் கண்டித்தார். அதேநேரம் ரஷ்யாவில் சமூகஜனநாயகவாத இயக்கமாக விருந்து பாராளுமன்ற அரசியலுக்கும் முதலாளித்துவ சுதந்திரத்திற்கும் ஆதரவாக இருந்த மென்ஷெவிக்கு களையும் லெனின் கடுமையாக விமர்சித்தார். அப்போதெல்லாம் ட்ரொட்ஸ்கி லெனின் சொன்னதற்கெல்லாம் ஒத்துப் போனார். ரஷ்யா முழுவதும் போல்ஷேவிக்குகளின் அதிகாரம் ஆயுதம் மூலம் (எதிர்புரட்சிப் படைகளுடனான போரின் போது) நிலைநாட்டப்பட்ட போது அது அன்று ட்ரொட்ஸ்கிக்கு தான் சார்ந்த கட்சியின் அதிகாரம் மேலேயிருந்து நிலைநாட்டப்பட்டதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அந்த அதிகாரத்தை செம்படையின் தளபதியாகவிருந்து கொண்டுவந்ததே ட்ரொட்ஸ்கிதான். அக்டோபர் புரட்சிக்காலத்தில் போல்ஷவிக் கட்சியின் செல்வாக்கு அதிகமாகவிருந்த ரஷ்யாவின் சில பகுதிகளில் மட்டும் தான் தொழிலாளர் விவசாயிகளின் எழுச்சி காணப்பட்டது. பரந்து விரிந்திருந்த ரஷ்ய சாம்ராஜ்யத்தில் குறிப்பாக மத்திய ஆசியப்பகுதிகளில் எதிர்ப் புரட்சியாளருடன் நடந்த போரின் பின்னர் தான் சோஷலிசத்தை அந்தப்பகுதி மக்களுக்கு சொல்லமுடிந்தது. இதையெல்லாம் கீழேயிருந்து வந்த சோஷலிசப் புரட்சியென்று சொல்ல முடியாது. ஒரு நாட்டின் அனைத்து மக்களும் ஒரேநேரத்தில் அரசியல் உணர்வு பெறுவார்கள் என்பது சாத்தியமன்று.

கம்யூனிசம் என்பதை சர்வதேசியம் என்றும் அர்த்தப்படுத்தலாம். மாவோ கூறியது போல கம்யூனிஸ்டுகள் அனைவரும் சர்வதேசவாதிகள் தான். தனது தாய்நாட்டில் மட்டுமல்லாது பிறநாட்டு போராட்டங்களில் பங்கு பற்றிய இன்றும் பங்குபற்றும் ஏராளமான கம்யூனிஸ்டுகள் உள்ளனர். ட்ரொட்ஸ்கியின் "சர்வதேசியம்" சமூகஜனநாயக கருத்தியலை அடிப்படையாகக் கொண்டது. அவருக்கும் முன்பே மென்ஷெவிக்குகள் இதுபற்றி கதைத்து வந்தனர். அவர்கள் புரட்சியின் ஆரம்ப காலத்தில் ரஷ்யாவில் இப்போது சோஷலிசத்தை கொண்டு வருவது சாத்தியமன்று என வாதிட்டனர். லெனின் அதற்கு மாறாக சோஷலிசப் புரட்சி ஒரு நாட்டில் (ரஷ்யாவில்) சாத்தியமே என்று சொன்னதுடன் நில்லாது தமது வாதங்களை எழுதியும் வைத்துள்ளார். தம்மை லெனினிச வாதிகளாக கூறிக்கொள்ளும் ட்ரொட்ஸ்கிச வாதிகள் இவற்றையெல்லாம் படித்திருப்பார்களா என்பது சந்தேகம். அப்படிப் படித்திருந்தால் ஒரேநாட்டில் சோஷலிசம் என்பது ஸ்டாலின் அறிமுகப் படுத்தியது அல்ல அது லெனினின் கோட்பாடு தான் என்பது புரியும்.

சோஷலிசப் புரட்சி நடைமுறைச் சாத்தியம் என்ற எண்ணத்தை உலக உழைக்கும் மக்களின் மனதில் ஏற்படுத்தியது. இதற்கு முன்பும் இதே காலத்திலும் சில புரட்சிகள் வேறு நாடுகளில் இடம்பெற்றன. 1918ல் ஜேர்மனியில் வெடித்த புரட்சி பற்றியோ அல்லது 1920ல் ஹங்கேரியில் புரட்சி வெற்றி பெற்று தொழிலாளர் அரசு ஒரு சில நாட்களுக்கு மட்டும் நிலைத்தது பற்றி எத்தனை பேருக்குத் தெரியும்? அதற்கு காரணம் புரட்சியை பாதுகாப்பதற்காக தொடர்ந்து போராடக் கூடிய அமைப்பெதுவும் அங்கே இருக்கவில்லை. ட்ரொட்ஸ்கியவாதிகள் நினைப்பது போல வெறும் பாட்டாளி



### - ஐரோப்பாவிலிருந்து ஆசியன் எழுதுவது -

ரஷ்யப் புரட்சியின் பின்னர் லெனினால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் ஸ்டாலினால் தலைமை தாங்கப்பட்ட மூன்றாவது அகிலம் உலகின் பல நாடுகளிலும் உருவாகிய கம்யூனிஸ்ட் கட்சிகளை உறுப்பினர்களாக சேர்த்துக் கொண்டதுடன் அவர்களுக்கு உதவி செய்தும் வந்தது. ஸ்பெயினில் பாஸிசத்திற்கு எதிராக போராடிய ஆயுதக்குழுக்களுக்கு வந்த ஒரேயொரு வெளிநாட்டு உதவி ஸ்டாலினிடம் இருந்து வந்ததை ஸ்டாலினிஸ எதிரிகளும் மறுப்பது கிடையாது. அப்போது பிற ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் இருந்து வந்த கம்யூனிஸ்டு களின் "வெளிநாட்டு தொண்டர் படையணி" கூட இயங்கி வந்தது. இறுதியாக பூகோள அரசியல் சதுரங்கத்தில் ஸ்டாலின் மீது அழுத்தம் கொடுத்து வெளிநாட்டு படைகள் வாபஸ் வாங்கப்பட்ட பின்னர் தான் பாஸிசம் ஸ்பெயினில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. அதேபோல கிரேக்கத்தில் வெற்றிபெறும் நிலையில் இருந்த கம்யூனிஸ கெரில்லாக்களுக்கு உதவி கிடைக்காததற்கும் மேற்குலக நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தான் காரணம்.

போல்ஷிவிக்குகளின் அக்டோபர் புரட்சி முதலாளித்துவ உலகில் அதிர்வலைகளை தோற்றுவித்தது. அது

மக்களின் எழுச்சி மட்டுமே சோஷலிசத்தை கொண்டு வந்து விடாது. அதனை சரியான வழியில் வழிநடத்தக் கூடிய அமைப் பொன்றின் பங்கும் அங்கே அவசியமா கின்றது. ஒரு நாட்டிலேயே எத்தனை யோ தடைகளை கடக்க வேண்டியுள்ள புரட்சியாளர்கள் சர்வதேச அளவில் சர்வதேச முதலாளித்துவத்திற்கெதிராக போராடுவதென்பது இன்னும் சிக்கலான சிரமமான விடயம். அதனால் சோவியத்யூனியன் போன்றதொரு நாட்டைத் தளமாகப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை ஸ்டாலின் உணர்ந்திருந்தார். ஒரு நாட்டில் சோஷலிசத்தை கட்டியெழுப்புவது காலத்தின் தேவையானது இப்படித்தான். இன்று மூன்றாம் உலக நாடுகளின் விடுதலைப் போராளிகள் சோவியத்யூனியனை இழந்து விட்டோம் என கவலைப்படுகின்றனர்.

“மேற்கு ஐரோப்பாவில் புரட்சியை ஏற்படுத்துவது என்ற லெனின் - ட்ரொட்ஸ்கியின் திட்டம்” பற்றி ட்ரொட்ஸ்கிஸ்டுகள் தமது சர்வதேச புரட்சிக்கு உதாரணமாக எடுத்துக் காட்டுவர். இந்தத் திட்டம் சரித்திரத்தில் தோல்வியைத் தழுவிக் கொண்ட லெனினின் தவறாக விமர்சிக்கப் படுகின்றது. ஜேர்மனியை முக்கியமாகக் கருதி ஜேர்மன் தொழிலாளருடன் சேர்ந்து புரட்சியை உண்டாக்கும் நோக்கத்துடன் அனுப்பப்பட்ட சோவியத் இராணுவம் போலந்தில் நடந்த யுத்தத்தில் தோல்வியைத் தழுவியது. போலந்தின் தொழிலாளர் விவசாயிகள் மத்தியில் வர்க்க உணர்வை விட தேசிய உணர்வே மேலோங்கியிருந்ததும் அதனை லெனின் சரியாக எடை போடத்தவறியதுமே தோல்விக்கு காரணம். இதனை அந்நேரம் ஸ்டாலின் சரியான தருணத்தில் சுட்டிக்காட்டினார். பின்னர் இரண்டாம் உலகப் போரின் பின்பு போலந்தை கைப்பற்றிய செஞ் சேனை அங்கே சோஷலிச ஆட்சியை நிறுவிய காலத்தில் கூட ஸ்டாலினுக்கு போலந்தைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இருந்ததில்லை. “போலந்துக்காரர்கள் கத்தோலிக்க தேசிய வாதிகள் அவர்கள் எம்மோடு ஒத்துழைக்க மாட்டார்கள். ஆனால் பூகோள அரசியலில் போலந்து முக்கியமான நாடு” என்று ஸ்டாலின் கூறியதாக சொல்லப்படுகிறது. பின்னர் எண்பதுகளில் வழமைக்கு மாறாக தெரிவு செய்யப்பட்ட போலந்து பாப்பரசர் ஜான் பால் சி.ஐ.ஏ யுடன் கூட்டுச் சேர்ந்து கம்யூனிசத்தை முடிவுக்கு கொண்டு வந்த போது ஸ்டாலினின் தீர்க்கதரிசனம் நிதர்சனமானது.


- வளரும் -

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியத் தேர்தல் முடிவுகள் இந்துத்துவ பாரதிய ஜனதாவுக்கு பலத்த அடியாகும்!

நரசிம்மா



## காங்கிரஸ் பயணிக்கப் போகும் பாதை எது?

"இந்தியா ஒளிர்கிறது'' என்ற சுலோகத்துடனும் "ஃபீல்குட்" என்ற சுலோகத்துடனும் பாரதிய ஜனதா கட்சியும் அதன் கூட்டாளிக் கட்சிகளும் தேர்தலில் குதித்தன. நகர நடுத்தர உயர் நடுத்தர வர்க்கத்தினரில் கணிசமான பகுதியினருக்குக் கிடைத்துள்ள சில சொகுசுகள் காரணமாக ஏற்பட்டிருந்த சுக உணர்வை முன்வைத்து பாரதிய ஜனதா கட்சி பெரும் வெற்றி பெறும் என்று சிலரால் எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன், அந்த வெற்றி வாய்ப்புப் பற்றிய பிரசாரத்தின் மூலம் வெற்றியை மேலும் வலுப்படுத்தும் முயற்சிகளும் பாரதிய ஜனதா கட்சி சார்பான ஊடகங்களினால் முன்னெடுக்கப்பட்டன. எனினும் இந்தியக் கிராமப் புறங்களில் வாழ்க்கை மேலும் மோசமாகி வந்துள்ளதைப் பற்றி எவரும் பெரிது படுத்திக் கொள்ளவில்லை. இதனா லேயே பாரதிய ஜனதா கட்சி கண்ட தோல்வி நமது அரசியல் நிபுணர்களை வியக்க வைத்தது.

தனது வெற்றியை மேலும் உறுதிப் படுத்தும் நோக்கில், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி அந்நிய நாட்டவர் என்பதை மிகவும் முக்கியப்படுத்திப் பிரசாரம் மேற் கொள்ளப்பட்டது. நேரு பரம்பரையில் வராத ஒரு அந்நிய நாட்டுப் பெண்ணை வெற்றி பெறச்செய்து இந்துத்துவ ஃபாஸிஸவாதிகளின் முகத்தில் இந்திய மக்கள் கரி பூசி விட்டனர். அது மட்டுமில்லாமல், தமிழகத்தில் அரசியல் அடாவடித்தனத்தின் எல்லைக்கே போய்விட்ட ஜெயலலிதா தலைமையிலான அணியின் பூரணமான தோல்வி தமிழகத்தின் அரசியலில் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இதனால் காங்கிரஸ் இந்தியாவின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்றோ நாளை தி.மு.க. ஆட்சி வந்தால் தமிழகம் தலை நிமிரும் என்றோ நான் நம்பவில்லை. இத் தேர்தல் முடிவுகள் இந்திய மக்களுடைய ஒரு முக்கியமான வெற்றி. ஏனெனில் அவர்கள் முறியடித்த சக்தி மதவெறியர்களின் அரசியல் ஆதிக்கம் மிக்க ஒரு ஆட்சி. மதவெறியையும் அதன் படுகொலை நோக்கத்துக்காக அமெரிக்காவுடன் சமரசம் செய்து கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை அந்நிய ஊடுருவல், தனியார் மயமாக்கல், தாராளமயமாக்கல் என்பன மூலம் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்குப் பலியாக்கி வந்துள்ள ஒரு தேச விரோத சக்தி.

பாரதிய ஜனதா கட்சியின் இனத்து வேஷ மதவாத அணுகுமுறைகளை மூடி மறைக்க வாஜ்பாய் என்கிற "நல்ல மனிதரின்" போலி வேடம் பயன்பட்டது. அந்த "நல்ல மனிதரைக்" காட்டி நாட்டு மக்களிடம் இரட்டை வேடம் போட்ட பாரதிய ஜனதா கட்சி பாடநூல்களையும் கண்டிக்காததுடன் மேலும் தூண்டிவிட்டு அவை பற்றிப் பெருமை கொள்ளுகிற ஒரு கேவலமான கூட்டத்தின் ஆட்சி. உள்ளூரில் தேசிய வாதம், பழமை வாதம், மரபு என்பன பற்றிப் பேசி மதவாதத்தைக் கிளறிவிட்டுக் கொண்டே அயல் உறவுகளில் இந்தியாவை அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கும் மேலாதிக்கத்துக்கும் நெருக்கமாக்கிக் கொண்டுள்ள ஒரு இரகசியமான தரகு முதலாளிய சக்தி. பிராந்திய மேலாதிக்க



முதல் வரலாற்று ஆய்வு வரையிலான ஒவ்வொரு துறையிலும் தமது மதவாத இந்துத்துவ வெறியையும் திரிப்புக்களையும் புகுத்தத் தவறவில்லை.

பாக்கிஸ்தானுடனான பகைமையைக் காட்டி முஸ்லிம் விரோதத்தைக் கிளறிவிட்டுக் கொண்டே அமெரிக்க எடுபிடியாக உள்ள பாக்கிஸ்தான் சனாதிபதி முஷாரஃபுடன் சமரசம் செய்கிற ஒரு அரசியல் நாடகம் எந்தவித மான பயனையும் அளிக்கவில்லை. பாக்கிஸ்தானிய 'உளவாளிகளைக்' காரணங் காட்டி இந்தியாவில் உள்ள அரசியல் எதிரிகளையும் முற்போக்குச் சக்திகளையும் முடக்குவதற்காகப் 'பொடா' என்ற அடக்கு முறைச் சட்டத்தைக் கொண்டு வந்த கட்சிதான் இந்த பாரதிய ஜனதா கட்சி. அதைப் பாவித்துத் பாரதிய ஜனதா கட்சியின் அரசியல் கூட்டாளிகளில் ஒருவராக இருந்த கோபாலசாமியை ஜெயலலிதா சிறைக்குள் தள்ளிய போதும், அதுபற்றி எதுவுமே செய்யாமல், ஜெயலலிதாவுடன் இரகசிய உடன்படிக்கைகள் செய்து கொண்டிருந்த கட்சிதான் பாரதிய ஜனதா கட்சி.

மதமாற்றத் தடைச்சட்டம் தமிழகத்தில் வந்ததற்கு ஜெயலலிதாவுக்கு பாரதிய ஜனதா கட்சி அளித்த ஊக்குவிப்பே முதன்மையான காரணமாகும். எனவே பாரதிய ஜனதா கட்சி பெற்ற தோல்வி எல்லா வகைகளிலும் மக்களுக்குக் கிடைத்த வெற்றி தான்.

ஆந்திர மாநிலத்தில் சந்திரபாபு நாயுடு பொருளாதார விந்தைகள் செய்து ஐதரா பாத்தை ஒரு அமெரிக்க நகரத்தைப் போல நவீன தகவற் தொழில் நுட்பத்தால் உயர்த்தியுள்ளதாகப் பேசப்பட்டது. அந்த விதமான உயர்வு தேவையில்லை என்று இந்திய மக்கள் நமக்கு அறிவித்துள்ளார்கள். உலக மயமாதலுக்கு உடந்தையாகச் செயற்பட்டு வந்த சந்திரபாபு நாயுடுவின் படுதோல்வி உலகமயமாதலுக்கு எதிராக மக்களின் ஒரு பிரகடனமே ஆகும்.

காங்கிரஸிடம் மாற்றுத் திட்டங்கள் அதிகம் இருப்பதாக நாம் கருத இடமில்லை. உலகமயமாதல், அமெரிக்கச் சார்பு என்ற விடயங்களில் 1980களின் பிற்பகுதியிலேயே காங்கிரஸ் அத்திசை யிற் பயணமாகத் தொடங்கி விட்டது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். எனினும், காங்கிரஸை மிஞ்சி அதே திசையில் பயணமான பாரதிய ஜனதா ஆட்சி போன வழியிலேயே மீண்டும் காங்கிரஸ் போக முடியுமா? அப்படிப் போவதானால் காங்கிரஸின் வெற்றி குறுகிய காலத்திற்குள்ளேயே மறுதலிக்கப்பட்டுவிடும்.

இடதுசாரிக் கட்சிகளின் அணி சென்ற முறையை விட அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளதும் ஒரு முக்கியமான விடயமாகும். எனினும் இடதுசாரிகள் இன்னமும் பல முக்கியமான மாநிலங்களில் வேரூன்றி நிலைக்க வேண்டியுள்ளது. பாராளுமன்ற மூலம் இந்திய ஆட்சியை இடதுசாரிகள் பிடிக்கும் வாய்ப்பு கண்ணுக் கெட்டுகிற தொலைவில் இல்லை. எனினும் இந்தியா உலக மயமாதலுக்குள் மேலும் அமிழாமற் தடுக்க அவர்களது பாராளுமன்ற அரசியல் வலிமையை அவர்கள் பயன்படுத்த இடமுண்டு.

மதவாதிகள், இனத்துவவாதிகள் போன்றவர்களது சமூக ஆதிக்கத்தை நீக்குவதற்கு இடதுசாரிகள் அரசாங்கத்திற்கு அழுத்தங் கொடுக்க வேண்டியுள்ளது. மதச் சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடிகள், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் போன்றவர் களது நலனுக்கும் உரிமைகட்குமாக இடது சாரிகள் துணிந்து குரல் கொடுக்க வேண்டும்.

இந்திய சமுதாயத்தை எதிர் நோக்குகிற பெரிய சவால்களுள்

1. உலக மயமாதலும் அந்நிய மூலதன ஊடுருவலும் ஆதிக்கமும்
2. கிராமிய பொருளாதாரத்தின் சிதைவு.
3. மதப் பூசலும் மதவாத வன்முறையும்.
4. சாதியமும் சாதிப் பகைமையும் ஒடுக்கு முறையும்.
5. பல் வகைப்பட்ட தேசிய இன ஒடுக்கு முறைகள் என்பன முக்கியமான சில இவற்றுக்கு பாராளுமன்ற அரசியல் மூலம் தீர்வு காண இயலாது.

மதவாதத்துக்கும் உலக மயமாக்கற் பொருளாதாரக் கொள்கைகட்கும் எதிரான பிரசாரம் பாரதிய ஜனதா கட்சியின் தோல்விக்கு ஒரு முக்கியமான பங்களித்துள்ளதெனில், இந்திய மக்களிடையே ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டுள்ளது என்பது தான் அதன் சாரம். அந்த விழிப்புணர்வுக்குச் செயல் முறையில் வடிவங் கொடுப்பது என்பது பாராளுமன்றப் பாதைக்குள் மதவாத, ஏகாதிபத்திய எதிர்ப்புப் பணிகளை வரையறுத்துக் கொள்ளும் போது பிற்போக்கு வாதிகளால் ஒவ்வொரு முயற்சிக்கும் குழிபறிக்க இயலுமாகி விடும். அதன் விளைவாக மக்களின் நம்பிக்கையை இடதுசாரிகள் இழப்பர். எனவே நேர்மையான இந்திய இடதுசாரிகள் ஓர் தேர்தலில் தமக்குக் கிட்டியுள்ள புதிய நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தி, ஒற்றுமையான சக்திமிக்க வெகுஜன இயக்க மொன்றை ஏகாதிபத்திய விரோத இந்துத்துவ. ஃபாஸிஸ விரோத நோக்கிற் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

---

# 1966 ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சி தமிழ் இளைஞர்களை சிந்திக்கவைத்தது

## பாரிஸ் நிகழ்வில் கருத்துரை

"வடபகுதியில் சாதிய தீண்டாமைக்கு எதிராக எழுந்த 1966 ஒக்ரோபர் 21 எழுச்சி உருவாக்கிய போராட்டங்கள் தமிழ் இளைஞர்களை சிந்திக்கத் தூண்டியதுடன் ஆயுதப் போராட்டப் பாதையையும் முன்னெடுக்க வழிகாட்டியது.''

பாரிஸ்- சமூக - விஞ்ஞான கல்வி வட்டத்தின் ஆதரவில் "ஒரு சமூகப் போராளியின் அரசியல் அனுபவங்கள்'' எனும் தலைப்பில் கடந்த 04-04-2004 அன்று பாரிஸ் நகரில் நடைபெற்ற நினைவுப் பகிர்வில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கும் போது தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க செயற்பட்டாளராக செயற்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் கே. தங்கவடிவேல் குறிப்பிட்டார்.

தோழர் வை. வண்ணியசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து தங்கவடிவேல் உரையாற்றுகையில், இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிவந்த சாதிய-தீண்டாமை வரலாறு நெடுங்கால வரலாறாகும். இவ்வரலாற்றில் ஒடுக்கப்பட்ட மக்கள் காலத்திற்கு காலம் அன்றைய தேசகால வர்த்தமான நிலைமைகளுக்கு ஏற்ப போராட்ட இயக்கங்களை முன்னெடுத்தனர்.

1915-18ம் ஆண்டு காலப்பகுதியில் அமைப்புக்கள் எதுவுமின்றித் தனி நபர்களே சாதியத்தை எதிர்த்து பத்திரிகைகள் வாயிலாக கருத்துக்களைக் கூறி வந்தனர். அவர்களில் சுன்னாகம் வி.எம். கந்தையா என்பவர் "ஆதிதிராவிடர்'' பத்திரிகையூடாகவும், சூ.ஓ. சின்னப்பு என்பவர் ''மேல் நோக்கம்'' என்ற பத்திரிகையூடாகவும் சாதியத்திற்கு எதிரான கட்டுரைகளை எழுதினர். இதை அண்மித்த காலப்பகுதியில் சாதிய எதிர்ப்பு இயக்கத்தில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்தியவர் யோவல் போல் ஆவார். இவர் 'ஜனதர்ம போதினி' என்ற பத்திரிகையையும் 'ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்கம்'' என்ற அமைப்பையும் உருவாக்கினார்.

1930ம் ஆண்டு தொடக்கப்பகுதியில் ஹண்டி பேரின்பநாயகம் , பி.நாகலிங்கம், ஒறேற்றர் சுப்பிரமணியம், ஏ.எஸ். கனகரத்தினம் போன்றவர்களால் உருவாக்கப்பட்டஇளைஞர் காங்கிரஸும் சம ஆசனம் - சம போசனம் என்ற கொள்கையை முன் வைத்து பிரச்சாரங்களை முன்னெடுத்தது.

1956ம் ஆண்டில் ஒடுக்கப்பட்ட மக்கள் பல கிராமங்களில் சிற்சில முன்னேற்றங்களை அடைந்தனர். இதற்கு கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் வடபிரதேச தலைமையின் வேலை



தோழர் கே. தங்கவடிவேல் கருத்துரை வழங்குவதையும் தோழர் வை. வன்னியசிங்கம் தலைமை தாங்குவதையும் த. தர்மகுலசிங்கம் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

முறையும் காரணமாகிறது. இக்கட்டத்தில் பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பொன். கந்தையா அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு செய்த சேவைகள் அவர்களின் மேம்பாட்டிற்கு ஓர் மைல்கல்லாக அமைந்தது. வடபகுதியின் பிற்படுத்தப்பட்ட கிராமங்கள் சிலவற்றை மாதிரிக் கிராமங்களாகவும் பல இடங்களில் பாடசாலைகளையும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அமைத்துக் கொடுத்தார்.

இதை அண்மித்த காலங்களில் சிறுபான்மை தமிழர் மகாசபை மூலம் ஒடுக்கப்பட்ட மக்கள் பல எதிர்ப்பு இயக்கங்களையும் முன்னெடுத்தனர். இவ்வியக்க முன்னெடுப்புக்களால் சில முன்னேற்றம் ஏற்பட்டபோதிலும் பெரும் மாற்றம் எதையும் பெறவில்லையென்றே சொல்ல வேண்டும்.

1960களில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட பிளவும், பாராளுமன்ற சகஜீவனம் என்ற கொள்கையை நிராகரித்து நா. சண்முகதாசன் தலைமையிலான மாக்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிகரமான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கட்சியின் வழிகாட்டலின் கீழ் நடாத்தப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், சாதியமைப்புக்கு எதிராக சமத்துவ நீதி கோரிய போராட்ட இயக்கங்களை முன்னெடுத்தது. இவ்வியக்கம் ஒடுக்கப்பட்ட மக்களை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தாது, தொழிலாளர் விவசாயிகள் நல்லெண்ணம் கொண்ட உயர்சாதி மக்களையும் ஐக்கியப்படுத்திப் போராடியது. இப்படியான ஐக்கிய முன்னணிப் போராட்ட வெகுஜன எழுச்சியே ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்கான ஓர் பாதையை திறந்து வைத்தது. இவ்வெழுச்சி தமிழ் இளைஞர்களை தமிழ்த் தேசிய விடுதலையின் பால் சிந்திக்க தூண்டியதுடன் ஆயுதப்போராட்டப் பாதையை முன்னெடுக்கவும் வழிகாட்டியது.

சாதியப் போராட்டத்தைத் தொடர்ந்த அடுத்த காலகட்டத்தில் முதன்மை பெற்ற பிரச்சினை தேசிய இனப் பிரச்சினையாகும். இப்பிரச்சினைக்கும் இப்பேர்ப்பட்ட ஐக்கிய முன்னணிப் போராட்டத்தையே கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியது. சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக ஒடுக்கப்பட்ட சகல இனமக்களின் புரட்சிகர வெகுஜனப் போராட்ட மார்க்கமே தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் என சண்முகதாசன் அவர்கள் தமிழ் தேசியத் தலைவர்களோடு பொதுமேடைகளிலும், பொதுக்கூட்டங்களிலும் விவாதித்தார். தமிழ்த் தேசியத் தலைமை இப்பேர்ப்பட்ட ஐக்கிய முன்னணிப் போராட்டத்தை முன்னெடுக்காது விட்டால், எதிர் காலத்தில் தமிழ் மக்களுக்கு

தொடர்ச்சி 11ம் பக்கம்


www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தமிழர் விடுதலைப் போராட்டம் பேரினவாதத்தை மட்டுமன்றி நிலவுடைமை-ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து நிற்கவேண்டும்

## யாழ்ப்பாண மேதினத்தில் தோழர் செந்தில்





கடந்த இரண்டரை வருட சமாதான முயற்சிகளின் போது எதிர் நிலைப் பாட்டை எடுத்து நின்றவர்களும் அதற்கு முட்டுக்கட்டைகள் போட்டவர்களுமான ஜே.வி.பி. - சிறிலங்கா கூட்டு முன்னணியே புதிய ஆட்சிக்கு வந்துள்ளனர். இதனால் யுத்தம் வந்துவிடுமோ என நாட்டு மக்கள் அச்சத்துடனும் குழப்பத்துடனும் காணப்படுகின்றனர். எனவேதான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை யும் யுத்த நிறுத்தத்தையும் தொடர வேண்டும் என வற்புறுத்துகின்றோம். அதேவேளை பேச்சுவார்த்தையை விட்ட இடத்திலிருந்து தொடர்வதுடன் புலிகள் இயக்கம் முதல் தடவையாக முன் வைத்த இடைக்கால நிர்வாகத்திற்கான ஆலோசனையினை புரிந்துணர்வு விட்டுக் கொடுப்புகளுடன் பேசி நடைமுறைக்கு கொண்டு வரல் வேண்டும் எனச் சுட்டிக் காட்டுகின்றோம். இதேவேளை பொருட்களின் விலைகளைக் குறைக்கவும் சம்பள உயர்வு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். முன்பு தொடராகப் பின்பற்றப்பட்டுவந்த தாராளமயம் தனியார்மயம் தடுக்கப்பட வேண்டும். அந்நியத் தலையீடுகளை நிராகரித்து தூர நோக்குடன் நாட்டு மக்கள் அனைவரினதும் நலன்களுக்கான திட்டங்களுடன் அரசாங்கம் செயலாற்ற முன்வரல் வேண்டும். இதனை தொழிலாளர்கள் விவசாயிகள் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் சார்பாக எமது கட்சி இம் மேதினத்தில் வற்புறுத்தி நிற்கின்றது.

இவ்வாறு புதிய- ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல் கூறினார். யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்க கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி மேதினக் கூட்டத்திற்கு தோழர் சி. நவரத்தினம் தலைமை தாங்கினார்.

தோழர் செந்தில் தொடர்ந்து உரையாற்றுகையில் இருபது வருடப் போராட்டத்தினால் பெற்ற சாதகமான அம்சங்களைப் பாராளுமன்ற மோகத்தினால் இழந்துவிடக் கூடாது. தமிழ்த் தேசியத்தை வெறும் மந்திரம் போன்று உச்சரித்து நின்று பரந்த தமிழ் மக்களின் நலன்கள் புறக்கணிக்கப் படக் கூடாது. வர்க்க, சாதிய, பெண ஒடுக்குமுறைகள் மறைக்கப்படவோ மறுக்கப்படவோ கூடாது. தமிழத் தேசியம் முதலாளித்துவ வசதிபடைத் தோரினதும் மேட்டுக்குடியினரதும் அந்நிய சக்திகளது அடிவருடிகளினதும் பாதுகாப்புக் கவச மாக அமையக் கூடாது. உழைக்கும் மக்களின் அபிலாஷைகளுக்கு விரோதமாக அது பயன்படுத்தப்படக் கூடாது.

அதேவேளை இரண்டு பேரினவாதக் கட்சிகளில் ஒன்றை ஆதரித்து மற்றயதை எதிர்ப்பதானது தமிழர் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு குந்தகமானதாகும். அவ்வாறே அமெரிக்காவையோ அன்றி இந்தியாவையோ அரவணைத்துச் செல்வதால் தமிழர் விடுலைக்கு சாதகமாக எதுவும் அமைந்துவிடாது. எனவே சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டம் பேரினவாதத்தை எதிர்க்கும் அதே வேளை அப்பொழுதுதான் பரந்து விரிந்த தளத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் முழுமை பெற்று வெற்றி பெறமுடியும் எனவும் கூறினார். நிலவுடைமை முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டிலும் முன் செல்லுதல் வேண்டும். ஜனநாயகம் மனித உரிமைகளை மதித்துப் பேணி சகல மக்களையும் சக்திகளையும் ஐக்கியப்படுத்தி முன்னெடுக்க வேண்டும்.

மேலும் இம் மேதினக் கூட்டத்தில் தோழர்கள் சோ. தேவராஜா, க. தணிகாசலம், கா. கதிர்காமநாதன், கா. பஞ்சலிங்கம், மு. தியாகராசா, க. ஆனந்தகுமாரசுவாமி ஆகியோர் உரையாற்றினர்.

# கம்யூனிஸக் கொடியின் கீழ்!

## யூலியஸ் ஃபியூசிக் எழுதியது



"கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தனி வார்ப்பு; தனித் தாதுக்களால் ஆக்கப்பட்டவர்கள்; உலகப் பாட்டாளி வர்க்கப் படையின் நேர் நிகரற்ற போர்த்தந்திரியான தோழர் லெனின் அணியில் அங்கத்தினர்கள். இந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதைவிட, சிறந்த பெருமை எங்களுக்கு வேறெதுவும் இல்லை. தோழர் லெனினால் அமைக்கப் பெற்று, அவரது தலைமையில் இயங்கிய கட்சியில் உறுப்பினன் என்பதைவிட, சிறந்த பெருமை வேறொன்றும் இல்லை" இப்படித் தொடங்குகிறது! லெனின் மறைந்த காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரால் தோழர் ஸ்டாலின் எடுத்த சபதம். ஆம், நாங்கள் தனி வார்ப்புத் தான். ஏனென்றால், நாங்கள் மக்கள்.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் வாழ்க்கையை நேசிக்கிறோம். எனவே தான், மகிழ்ச்சியும் நிறைவும் சுதந்திரமும் கூடிய இலட்சிய வாழ்வுக்கான பாதையை அமைக்கும் பொழுது, குறுக்கீடும் தடைகளைத் தகர்த்தெறிவதில், எங்கள் உயிரையும் தியாகம் செய்ய எந்நேரத்திலும் நாங்கள் தயங்குவதில்லை. அடிமைத்தனம், சுரண்டல் என்னும் சங்கிலிகளால் பிணைக்கப் பெற்று, முழந்தாளிட்டு வாழ்தல் வாழ்க்கை ஆகாது. தாவரங்களைப் போல் வாழ்வது வாழ்க்கை அல்ல. அது மனிதன் என்ற பெயருக்கே அவமானமாகும். இந்த அவல வாழ்வில் ஒரு கம்யூனிஸ்ட் ஒரு உண்மையான மனிதன் திருப்தி அடைய அவனுக்கு உரிமை இருக்கிறதா? சுரண்டலுக்கும் அடிமைத்தனத்திற்கும் அடி பணிய அவனுக்கு உரிமை இருக்கிறதா? இல்லை ஒரு போதும் இல்லை. எனவே தான், கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் உண்மையான வாழ்வுக்காக நடை பெறும் போராட்டத்தில் எத்தகைய தியாகத்தையும் செய்யப் பின்வாங்குவ தில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் மனிதரை நேசிக்கிறோம், மனிதத் தன்மையுள்ள எதுவும் எங்களுக்குப் புறம்பானதல்ல, மிகச் சாதாரண மனித இன்பங்களின் மதிப்பையும் நாங்கள் அறிவோம். அவற்றிலும் நாங்கள் மகிழ்ச்சி காணமுடியும். எனவேதான் மனிதன் உழைப்பை மனிதன் பறிக்கும் அராஜக அமைப்பின் கொடுமைகளிலிருந்து, அதாவது, பயங்கரப் போரின் துன்ப துயரங்கள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய கொடுமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, மகிழ்ச்சியும் நிறைவும், ஆரோக்கியமும் சுதந்திரமும் உள்ள மனிதனுக்கு, இந்தப் பரந்த உலகில் ஒரு இடம் அளிப்பதற்காக, எங்கள் சுகபோகங்களைத் தியாகம் செய்ய நாங்கள் ஒரு போதும் தயங்குவதில்லை. லாபம், லாபம், மீண்டும் லாபம்! இதையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு அமைப்பு, மக்களுக்கிடையே நேச உறவு நிலவுவதற்குப் பதிலாக, பண உறவையே அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பு, மனிதனைக் காட்டிலும் பணத்திற்கே அதிக மதிப்பைத் தருகிற ஒரு அமைப்பு மனிதத் தன்மை அற்றதாகும். மனிதனை நேசிக்கிற ஒரு மனிதனுக்கு, ஒரு கம்யூனிஸ்டுக்கு, மக்களின் மனிதத்தன்மை பறிக்கப்படுகின்ற பொழுது, சும்மா இருக்க உரிமை உண்டா? இல்லை எனவேதான், நிறைவும் சுதந்திரமும் பண்பும் பொருந்திய மனிதனுக்காகப் போராடு வதில் தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் பின் வாங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சுதந்திரத்தை விரும்புகிறோம். எனவேதான், உண்மையான சுதந்திரத்தை, விரிவான சுதந்திரத்தை சுதந்திரம் என்ற வார்த்தைக்கு உரிய இலட்சணத்தோடு கூடிய சுதந்திரத்தை, மனித குலம் முழுமையும் பெறுவதற்காக எங்கள் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு, இஷ்டபூர்வ மாகப் பணிவதற்கு நாங்கள் ஒரு விநாடியும் தயங்குவதில்லை. ஒரு சிலருக்கு மட்டும் சுதந்திரம் - கொள்ளையடிக்க ஒரு தரத்தாருக்குச் சுதந்திரம்; மற்றவர்களுக்குப் பட்டினியால் மடிய சுதந்திரம், இவை சுதந்திரம் அல்ல. அடிமைத்தனம் இந்த நிலைமைகளைக் கண்ட பிறகும் வாளா இருக்க ஒரு கம்யூனிஸ்டுக்கு உரிமை உண்டா? சில தனி நபர்களுக்கு இதயகீதமாக விளங்கும் அத்தகைய சுதந்திரத்தால் திருப்தி அடைய அவனுக்கு உரிமை இருக்கிறதா? இல்லை, ஒரு போதும் இல்லை. எனவேதான் உண்மையான சுதந்திரத்திற்காகப் போராடுவதில், தங்களுடைய முழுவலிமையைப் பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஆக்க வேலையை நேசிக்கிறோம், எதிர்கால மனிதகுலத்தை உருவாக்கும் நிர்மாண வளர்ச்சியை நேசிக்கிறோம். எனவே தான், மனிதனின் மகத்தான சிருஷ்டி சக்திகளுக்குக் குறுக்கே நிற்பவற்றை, அவற்றை மட்டும்தான், தகர்த்தெறிய ஒரு விநாடியும், தயங்குவதில்லை.

ஆயிரம், பல்லாயிரக்கணக்கான திறமை யுடைய மனிதர்கள் மனித கலாச்சாரத் தைப் பலமடங்கு பெருக்கியிருக்க முடியும்; மனித ஸ்தாபனத்தைச் சீர்திருத்தியிருக்க முடியும்; மனிதனின் தொழில் நுட்ப சாதனைகளை, கற்பனை க்கு எட்டாத அளவுக்கு உயர்த்தி யிருக்க முடியும். அத்தகைய திறமைகள் இன்று பாழ்பட்டுக் கிடக்கின்றன, மனித குலத்திற்குத் தேவையுள்ள அனைத்தையும் ஏராளமாக அளிக்கும் திறமையும் வலிமையும் படைத்த ஆயிரம் ஆயிரம் கரங்கள், இன்று வேலையின்றிச் சோம்பிக் கிடக்கின்றன. அடிக்கடி நிகழ் கின்ற நெருக்கடியான காலங்களில், அத்தகைய கரங்கள் சோம்பிக் கிடக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இதனால் மனித சமுதாயத்திற்கு நேரிடுகின்ற பயங்கர நஷ்டத்தைத் தடுக்காமலிருக்க ஒரு கம்யூனிஸ்டுக்கு உரிமை உண்டா? இல்லை, எனவேதான் மனிதகுல சிருஷ்டி சக்தி முழுமையையும் பயன்படுத்தி முழுவளர்ச்சி அடையும்படி செய்யும் ஒரு அமைப்பைப் பெறுவதற்கான போராட்டத்தில், தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சமாதானத்தை நேசிக்கிறோம். எனவே தான் நாங்கள் போராடுகிறோம். போர் மூள்வதற்கான சூழ்நிலைகள் அனைத்தையும் நாங்கள் எதிர்த்துப் போராடுகிறோம். சில தனி நபர்களின் சொந்த நலன்களுக்காக நடைபெறும் பயங்கரப் போரில், கோடிக் கணக்கான மக்கள் மாண்டுமடிவதற்கும், மனித வாழ்வுக்கு அவசியமான செல்வங்கள் அழிக்கப்படு கின்றன. ஒரு குற்றவாளி கூட இல்லாத உலக அமைப்புக்காக, நாங்கள் போராடுகிறோம். ஒருவாய்ச் சோற்றுக்காக, மனிதனை எதிர்த்து மனிதன் சண்டை போடவேண்டிய நிலைமை எங்கே இருக்கிறதோ, அங்கே சமாதானம் இல்லை, இருக்கவும் முடியாது. எனவே தான், உண்மையான சமாதானத் திற்காக, இறுதிச் சமாதானத்திற்காக, மனித சமுதாயத்தின் புதிய அமைப்பால் உத்தரவாதம் செய்யப்படும் சமாதானத்திற்காகப் போராடுவதில், தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எங்கள் நாட்டை நேசிக்கிறோம்; ஏனென்றால், ஒரு நாடுகூட அடக்கி ஒடுக்கப் பட்டாலும் மனிதனின் ஆக்க சக்திகள் அனைத்தும் சுயேச்சையாக வளர்ச்சி அடையமுடியாது. இறுதியான சமாதானத்திற்கு உத்தரவாதம் இருக்காது. ஒரு நாடு மற்றொரு நாட்டை அடக்கி ஆண்டால் உண்மையான சுதந்திரம் இருக்க முடியாது. நமது மாபெரும் லட்சியங்களை நாட்டின் வாழ்க்கை அமைப்புக்குள்ளேயே அடைய விரும்புகிறோமே தவிர, அதற்கு அப்பாற்பட்டதல்ல, இல்லாவிட்டால், அவை எதார்த்தமாக முடியாது. உண்மையான புதல்வர்களின் நேசத்தோடு நாங்கள் தாய்நாட்டை நேசிக்கி றோம். எனவேதான், மனிதகுல மேன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் எங்கள் நாடு வழங்கிய, இன்றும் வழங்குகிற எல்லாக் காரியங்களுக்காகவும், அதனால் அதன் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் உதவியாகவுள்ள அனைத்திற்காகவும், நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். எங்கள் நாட்டின் இரத்தத்தை உறிஞ்சுகிற, அதைப் பலவீனப்படுத்துகிற அனைத்தையும் நாங்கள் அழித்துவிட விரும்புகிறோம். எனவேதான், உலகில் சுதந்திரம் பெற்ற சமத்துவ நாடுகளின் மத்தியில், சம அந்தஸ்தோடு சுயேச்சையாக வாழும் போராட்டத்தில், எங்கள் முழு வலிமையை ஈடுபடுத்தவோ சர்வ பரித்தியாகம் செய்யவோ நாங்கள் தயங்குவதில்லை.

நாங்கள் நிறைவேற்ற வேண்டிய வேலைகள் மகத்தானவை, மகிமை வாய்ந்த உலகப் பாட்டாளி வர்க்க போர்த்தந்திர நிபுணரின் படையை, தோழர் லெனின் படையைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், இப்பொறுப்புக்களை நிறைவேற்ற நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த படையின் ஒற்றுமையும் தூய்மையும், கம்யூனிஸ்ட்க் கட்சியின் ஒற்றுமையையும் புனிதத் தன்மையையும், கண்ணின் கருமணியைப் போன்று பாதுகாப்பது; மனிதகுலத்தில் சிறந்தவர்களையும், நாட்டின் சிறந்த சக்திகளையும் மேலும் மேலும் ஒன்று திரட்டுவது; எங்கள் நண்பர்களின் எண்ணிக்கையை மேலும் மேலும் அதிகரிப்பது; வரலாற்றின் வளர்ச்சி எதை நோக்கிச் செல்லுகிறது? தங்களின் ஜீவாதார நலன்களுக்காக அது அவர்களுக்கு இடைவிடாது உணர்த்தி மக்களுடன் ஒன்று

தொடர்ச்சி 11ம் பக்கம்

யூலியஸ் ஃபியூசிக் செக்கோஷ்லவாக்கிய நாட்டைச் சேர்ந்தவர். எழுத்தாளர். பத்திரிகையாளர், தேசபக்தர். இவற்றுக்கும் மேலால் அவர் ஒரு கம்யூனிஸ்ட். செக் நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர். ஹிட்லருடைய ஆக்கிரமிப்பை எதிர்த்து செக் மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் போராடியபோது தோழர் ஃபியூசிக்கும் அவரது துணைவியாரும் கைது செய்யப்பட்டு நாஜிகளின் சித்திரவதை முகாமில் கொடிய சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். இறுதியில் 1943ல் ஃபியூசிக் தூக்கிலிடப்பட்டார். அவரது வீர நினைவுகள் நூலில் இருந்து இக்கட்டுரை தரப்படுகிறது. யூலியஸ் ஃபியூசிக்கின் நினைவை முன்னிறுத்தியே வருடா வருடம் சர்வதேசப் பத்திரிகையாளர் தினம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஆர்)

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்




# அமெரிக்க – இஸ்ரேலியப் பயங்கரவாதிகளின் மனித வதைகளும் பலியெடுப்புக்களும்



அமெரிக்க பிசாசுகளால் அபு கிராப் சிறைச்சாலையில் நிர்வாண சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட ஈராக்கியர்

உலகம் பூராவும் மனிதர்களை வதைப்பதும் பலி கொள்வதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொழிலாகி நிற்கிறது. அவ்வாறே அமெரிக்காவின் மூத்த சகோதரனான இஸ்ரேல் அருகை வேட்டை நாயாக வளர்ந்து பாலஸ்தீன மக்களை அன்றாடம் வெறி கொண்டு கடித்து குதறிக் கொன்றழித்து வருகின்றது. இத்தகைய அமெரிக்கா வும் இஸ்ரேலும் ஒன்றையொன்று தழுவி நிற்கின்றன. அண்மையில் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் பலஸ்தீன மக்கள் மீது கொலை வெறி புரிந்து வரும் இஸ்ரேலுக்கு எதிராக ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது அமெரிக்கா வெட்கம் கெட்ட முறையில் அதில் கலந்து கொள்ளவில்லை. இதில் மட்டுமன்றி முன்னைய தீர்மானங்களின் போதும் இஸ்ரேலுக்காக தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி இஸ்ரேலின் ஆக்கிரமிப்பையும் ராணுவ தாக்குதல் களையும் நியாயப்படுத்தி வந்துள்ளது.

அதேவேளை அமெரிக்கா ஈராக்கில் இன்று செய்து வரும் மனிதவதையும் பலியெடுப்பும் காறித் துப்பப்படுகிறது. ஈராக்கை ஒரு வருடம் முன்பாக ஆக்கிரமித்த அமெரிக்கப் படைகள் வாங்கி வரும் அடி கொஞ்ச நஞ்சமல்ல. அதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கேடு கெட்ட வகையில் ஈராக்கியர் களைத் தாக்கியும் கொலைகள் புரிந்தும் வீடுகளை அழித்தும் வருகிறது அமெரிக்கா. அண்மையில் பாக்தாத் திற்கு அருகே உள்ள அபுகிறாப் சிறையில் கைதிகள் மீது அமெரிக்க ராணுவம் செய்த நிர்வாணப்படுத்திய சித்திர வதைகள் உலகை வெட்கித் தலை குனிய வைத்தது. வர்ணிக்க முடியாத இந்த நிர்வாண சித்திரவதை பற்றிய 1600 படங்கள் எடுக்கப்பட்டமை போதிய ஆதாரங்களாகி உள்ளன. வாயால் வர்ணிக்க முடியாத அளவுக்கு அமெரிக்க ராணுவ ஆண் பெண் சிப்பாய்களும் அதிகாரிகளும் இதில் மானவெட்கம் இன்றி ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து ஒரு திருமண வீட்டின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடாத்தி வயது வேறுபாடின்றி நாற்பது பேரைக் கொன்று குவித்தது அமெரிக்க ராணுவம். இவ்வாறே ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்க ஆக்கிரமிப்பு இராணுவம் நடந்து கொள்கிறது.



இஸ்ரேலிய இராணுவத்தால் கசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனியர்

இவ்வாறு மனித வதையிலும் பலியெடுப்பதிலும் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஏன் முன்னிற்கின்றன? ஜனநாயகம் மனித உரிமைகளைப் பாது காக்கவும் பயங்கர வாதத்தை தோற் கடிக்கவும் என்று கூறப்படுவதை இன்னும் சுயசிந்தனை யுள்ள எவரும் ஏற்றுக் கொள்ள முடியுமா? இதற்குப் பின்னால் உள்ள பாரிய விடயங்களைப் புரிந்து கொள்வதே சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொருவரின் கடமையாகும்.

பொருளாதாரச் சுரண்டலும் சொத்து சுகம் தேடுவதும் சுயநலப் பேராசையும் தனிநபர் சுதந்திரம் என்ற பெயரில் முதலாளித்துவத்தால் ஏகாதிபத்தியத் தால் முன்னெடுக்கப்படுகிறது. சொந்த நாட்டில் இதனை நடைமுறைப்படுத்தி அதன் வளர்ச்சியானது உலக நாடுகளையும் வளங்களையும் கொள்ளையிடுவதற்கு வழகோலி நிற்கிறது. இந்தக் கொள்ளையை நடைமுறைப்படுத்த அரசியலில், ராஜதந்திர தலையீடுகள் செய்கிறது. அதற்கு இணங்க மறுக்கும் சூழலில் ராணுவ ஆக்கிரமிப்பு நடாத்தப்படுகிறது. இவற்றை மறைக்கும் வலுவான திரைகளாக ஜனநாயகம் உச்சரிக்கப்படுகிறது. இந்த உண்மைகளின் அடிப்படையிலேயே அமெரிக்க ஏகாதிபத்தியமும் இஸ்ரேலிய சியோனிச வாதிகளும் மனித வதைகளிலும் படுகொலைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதைக் காணுதல் வேண்டும்.

# அமெரிக்காவின் புதிய ஆயுதக்கருவி

## ஈராக்கில் பரீட்சார்த்தம்

அமெரிக்கா புதிதாகக் கண்டுபிடிக்கும் எந்த ஆயுதமானாலும் அதைத் தமது நாட்டுக்கு வெளியே பரீட்சித்துப் பார்ப்பதில் கை வந்தவர்கள். அணு ஆயுதங்களை ஹிரோஷிமா – நாகசாகியில் போட்டு அதன் பெறுபேறுகளை கணிப்பீடு செய்த பெருமை அமெரிக்காவிற்கே உண்டு. விடுதலைக்காகப் போராடும் நாடுகளில் எல்லாம் ஏதோ ஒரு வகையான புதுவகை ஆயுதங்களை அமெரிக்கா பரீட்சித்துள்ளது. குறிப்பாகச் சொல்லப்போனால் வியட்நாமில் நேபாம் குண்டுகளை பரீட்சித்து அதனைப் பயன்படுத்தி போராளிகளைப் பணிய வைக்கப் முயன்றனர். இப்போது இந்த வகையான பரீட்சைத் தளமாக ஈராக் விளங்குகிறது. பயங்கர அழிவு தரும் ஆயுதங்கள் சதாம் ஹுசைன் வசம் இருப்பதாக அமெரிக்காவும், பிரிட்டனும் கூறி அந்த நாட்டின் அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆக்கிரமிப்பு ஆட்சியை நடாத்துகிறது. ஈராக்கிய மக்கள் அமெரிக்கரை வெளியேற்றும் கடும் போராட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். விடுதலைக்காகப் போராடும் ஈராக்கிய மக்களுக்கு உலக மக்களின் தார்மீக ஆதரவுண்டு. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களும் அவர்களது அடிவருடிகளும் கொல்லப்படாத நாளே ஈராக்கில் இல்லை.

அமெரிக்கா ஈராக்கில் பயன்படுத்தவுள்ள ஒரு கருவிதான் "நீண்ட தூர ஒலிக் கருவி" டுசுயுனு. இந்த ஆயுதமானது மரணத்தை ஏற்படுத்தாத ஆயுத வகையில் ஒன்றாகவே வகைப்படுத்தப் பட்டுள்ளது. 2000ம் ஆண்டில் யெமனு க்கு அப்பால் கடற்பரப்பில் அமெரிக்க யுத்தக் கப்பல் களை சிறு படகுகள் அண்மிக்காமல் இருப்பதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டதே இந்த டுசுயுனு எல்ஆர் ஏ டீ எனப்படும் நீண்ட தூர ஒலிக்கருவியாகும். இந்தக் கருவிகள் அண்மைக்காலங்களில் அமெரிக்க கப்பல்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஈராக்கின் பலூஜா நகரம் பக்தாத்தின் மேற்குப் புறத்தில் உள்ளது. இது அமெரிக்கப் படையினருக்கு எதிரான போராளிகள் அதிகம் உள்ள இடம். ஈராக்கில் மத்திய பகுதிகளில் மக்கள் கூட்டத்துடன் போராளிகள் கலந்து விடுகிறார்கள். மக்களை உடனடியாகக் கொல்லாமல் மக்களை விரட்டவே இந்தக் கருவி எனப்படும் ஆயுதம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றே கூறப்படுகிறது.

சான்டியாகோவில் அமெரிக்கன் ரெக்னோலோஜி கோப்பறேசன் என்ற நிறுவனமே இந்த டுசுயுனு யை உற்பத்தி செய்கிறது. அண்மையில் பதினொரு இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதி யான கொள்வனவுக் கட்டளையை அமெரிக்க கடற் படைப்பிரிவு போட் டுள்ளது. இவை ஈராக்கில் உள்ள படை யினருக்கு வழங்கப்படும். வாகனங்களில் பரீட்சிப்பதற்காக இந்தக் கருவியின் ஒரு தொகுதி ஈராக்கிற்கு அனுப்பப்பட்டுள்ள தாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஒலி அலை ஆயுதமானது முப்பத்தி மூன்று (33") அங்குல விட்ட முடையது. எடை 45 இறாத்தல். டிஷ் வடிவமுடையது. வார்த்தைகளால் விடுக்கப்படும் எச்சரிக்கைகளை கூட்டத்தினர் அசட்டை செய்தால் உச்ச தொனியில் வான் பிளக்கும் ஓசையுடன் இறுக்கமாக ஒருங்கிணைக் கப்பட்ட மின் அலைகள் கூட்டத்தை நோக்கிச் செலுத்தப்படும். அதன் ஓசை அளவு 150 டெசிபல்களாகும். இதன் வேகம் 2100ல் இருந்து 3100 ஹேகட்டாகும் என செவிப்புலன் நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். இந்தப் பயங்கர ஒலி கிளப்பப்பட்டால் 100 யார் தூரத்தில் ஒருவருமே நிற்கமுடியாது ஓடுவார்கள். இந்தக் கருவியானது 300 யார் தூரத்திற்குப் பயன்படுத்தக்கூடியது எனச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சத்தத்தை ஒரு தடவைக்கு ஒரு சில வினாடிகளே அமெரிக்கப் படையினர் உபயோகிப்பார்களாம். ஒரு நிமிடத்திற்கு மேல் இந்தச் சத்தத்தை கேட்கும் நபரின் செவிப்பறை வெடித்து விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு போராளியை கொல்லாமல் சித்திர வதை செய்யவே அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் முற்படுகிறார்கள். அதன் கேடுகெட்ட சித்திரவதைகளின் கதைகளை அண்மைய ஈராக்கின் அபுகிறாப் சிறைச்சாலையில் பிடிக்கப் பட்ட படங்கள் அம்பலமாக்கிக் கொண்டன. இத்தகைய அமெரிக்க ஏகாதிபத்திய நடவடிக்கைகளை நாம் புரிந்து கொண்டு அவர்களை எதிர்த்து விமர்சனம் செய்யாமல் அரவணைத்துச் செயற்பட வேண்டுமென நமது வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அமெரிக்கரின் சுயரூபத்தை அடக்கி வாசிக்கும் தமிழ் முஸ்லிம் தலைமைகளுக்கு இந்நவீன ஆயுதவகைக் கருவியின் கண்டுபிடிப்பு சமர்ப்பணம்.

- சிறீ -

# அமெரிக்க நடைமுறை பற்றி...

*அமெரிக்கர்களுக்கு ஆட்சி மது வெறியே!*
*வையத்து மக்களை ஒடுக்கும் பணியினில்*
*கை தேர்ந்தவர்கள் கவனம் தலைவர்களே!*
*நிறத்தை காட்டி வெறுப்பை யூட்டி*
*பணத்தைக் கொடுத்து குணத்தை அழித்து*
*மொழியைக் காட்டி வெறியை யூட்டி*
*மனிதரைக் கொன்று நரபலி யுண்டு*
*படைக்கலம் கொண்டு அடைக்கலம் தந்து*
*பாரிலும் நீரிலும் பல தளம் அமைத்து*
*அதுவும் போதாமல் அவனியை விட்டு*
*அண்ட வெளி சென்று அம்புலித்தரையை*
*அணுமயமாக்கி அகிலத்தையே! அடக்கி ஆண்டிட*
*சட்டங்கள் இயற்றி திட்டங்கள் தீட்டி*
*அணுப்போர் ஒன்று அவனியில் நிகழுமே (ல்)*
*நிலக்கீழ் அறையில் நிலை கொண்டிருந்து*
*மண்ணின் மானிடர் மடியும் காட்சியை*
*கண்டு களிப்போராம்! கனவோ ! நனவோ !*
*என்றோ ஒரு நாள் அணுக்கதிர் போரே அவனியை அழிக்கும்*
*முன்னறிவித்தலாய் முதலிரண்டு போர்களில் நாகசாகி*
*ஹிரோசிமா*
*கண்ணெதிர் தோன்றுதே ! காண்போமே !! உலகமே!!!*
*மக்களைக் காக்கவா படைக்கலம் செய்தார்*
*மாக்கள் போல் மக்களை அளிக்குதே ! அக்கலம்!!*
*அவனியில் அறிவுள்ளோர் மக்களே!*
*படைக்கலம் செய்யும் பல நூறு கோடியை*
*பாரிலுள்ள பாமர மக்களின் பசி அகற்றிட*
*பகிர்ந்து அளிக்க மறுப்பதேன் என்று*
*அமெரிக்கக் கழுகினை அதட்டியே கேட்போம்!*

**- காரைக் கவி -**
வவுனியா

# உலக வங்கியின் ஊழல் அம்பலம்

## பாதிக்கப்படுவது மூன்றாம் உலக மக்களே

உலக வங்கியானது ஆரம்ப காலந் தொட்டே அமெரிக்கர் ஒருவரின் தலைமையிலேயே இருந்து வந்துள்ளது. இது எழுதப்படாத ஒரு விதி.

அண்மையில் அமெரிக்க செனேற் வெளிவிவகார கமிட்டி உலக வங்கி தொடர்பாக விசாரணை மேற் கொண்டது. அதன் தலைவர் றிச்சாட் லூகர் கருத்து தெரிவிக்கையில் தனது விசாரணைக் குழுவிற்கு ஒரு பல்கலைக்கழக பேராசிரியர் கொடுத்த புள்ளிவிபரம் சரியென்றால் உலக வறுமைக்கு எதிரான முயற்சிக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்துமென்றார்.

வடமேற்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜெவ்றி வின்ரர்ஸ் தனது அறிக்கையில் உலக வங்கியானது வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட சுமார் 10,000 கோடி டொலர்கள் அளவிலான நிதி மோசடிக்கு உள்ளாகி இருப்பதாக தெரிவித்துள்ளார். லூகர் மேலும் கூறுகையில் "ஏனைய நிபுணர்களது கணிப்பின் படி 1946ம் ஆண்டிலிருந்து இற்றைவரை உலக வங்கி வழங்கிய கடனான 52,500 கோடி டொலரில் ஐந்து வீதத்திலிருந்து 25 வீதம் வரையிலான தொகை தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது 2600 கோடிக்கும் 13000 கோடிக்கு மிடைப்பட்ட தொகையாக அமையும் என கூறப்பட்டுள்ளது.

"ஊழல் வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு பெரும் இடையூறாக அமைவதாகத்" தெரிவிக்கும் லூகர். "நிதியை தவறாகப் பயன்டுத்தினால் திட்டச் செலவுகளை பெரிதாக்கிக் காட்டும், வறிய நாடுகளுக்கான உதவியைத் தடை செய்வதோடு திட்டம் தோல்வியில் முடிவடையச் செய்யும். களவாடப்பட்ட பணம் சர்வாதிகாரத்திற்கு முட்டுக் கொடுப்பதோடு மனித உரிமை மீறல்களுக்கு நிதியைக் கொடுக்கும். இது மட்டுமல்ல வளர்முக நாடுகள் வளர்ச்சிக்கான நிதியை ஊழல் மூலம் இழந்தாலும் அந்த நாட்டு மக்கள் வாங்கிய கடனான முழுமையாகச் செலுத்தியேயாக வேண்டும். உலக வங்கியின் பேச்சாளர் டேமியன் மில்வேட்டன் " இந்தப் புள்ளவிபரத்தை முழுமையாக நிராகரிப்பதாக" கூறி வேறு ஒரு தகவலையும் தந்தார்.

உலக வங்கி ஊழலுக்கு எதிரான நடவடிக்கையில் தீவிரமாகச் செயற் படுவதாயும் அதன் பெறுபேறாக 180 கம்பனிகளும், தனி நபர்களும் ஊழலுக் கும், மோசடிக்குமாக ஓரங்கட்டப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

உலக வங்கி வருடந்தோறும் 1800 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக வழங்குகிறது. 2003ம் ஆண்டு யூன் மாதம் 20ந் திகதியன்று வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகை 11600 கோடி அமெரிக்க டொலராக இருந்தது. இத்தகைய உலக வங்கி தான் மூன்றாம் உலக நாடுகளின் வறுமையைப் போக்கவும் அபிவிருத்திகளைச் செய்யவும் கடன் வழங்குவதாகப் பீற்றிக் கொள்கிறது. உலக முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளின் பாது காவலனே உலக வங்கியாகும். முதலாளித்துவ ஏகாதிபத்திய பெரு நிறுவனங்களே ஊழலையும் மோசடி களையும் உற்பத்தி செய்கின்றன என்பதற்கு உலக வங்கியின் ஊழல் உதாரணமாகும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# கோவில்களும் கடவுள் நம்பிக்கைகளும் மக்கள் பிரச்சினைகளைத் திசை திருப்புகின்றன

இன்று எங்கு பார்த்தாலும் கோவில்கள் புதிது புதிதாகக் கட்டப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. இதில் எல்லா மதக் கடவுள்களையும் நம்புவது வழிபடுவது ஒவ்வொருவரினதும் நம்பிக்கைச் சார்ந்த விடயமாகும். கடவுளை நம்புவதற்கும் நம்பாமல் விடுவதற்கும் உள்ள சுதந்திரம் அடிப்படையில் ஜனநாயகம் சார்ந்த தாகும். ஆனால் கடவுள் நம்பிக்கை என்ற பெயரில் மக்கள் ஏமாற்றப்படு வதும் மூடநம்பிக்கைகள் வளர்க்கப் படுவதும் வர்த்தகமாக்கப்படுவதும் அம்பலப் படுத்தப்பட வேண்டியதாகும். மனிதர்கள் மத்தியில் பொருளாதார நெருக்கடிகள், வேலையின்மை, உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை மற்றும் சமூக நீதிமறுப்புக்களால் வாழ்க்கைச் சுமைகள், கஷ்டங்கள், துன்பங்கள் கூடுகின்றன. இவற்றுக்கான பொருளாதார சமூகக் காரணிகளைக் கண்டுகொள்ளாது அல்லது விளங்கிக்கொள்ள முடியாது கடவுள் மீதான நம்பிக்கை மக்களிடையே வளர்க்கப்படுகிறது.

வழிபாடுகள், விரதங்கள், அர்ச்சனைகள், அபிஷேகங்கள் என மக்கள் அலைந்து பணத்தையும் நேரத்தையும் செலவு செய்கின்றனர். கடவுள் வழிபாட்டால் அல்லது பேய், பிசாசு, மூடநம்பிக்கையால் நோய்கள் மாறும் என்று கூறி முறை யான மருத்துவத்தைக் நிராகரிக் கின்ற நிலை கூடக் காணப்படுகின்றது. இந் நிலையிலே கோவில்களும் அவற்றின் செயற்பாடுகளும் மென்மேலும் விரிவு படுத்தப்படும் சூழல் காணப்படுகின்றது. இந்நிலை சற்றே சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

குறிப்பாக வடபுலத்தை எடுத்து நோக்கின் ஒரு ஊருக்குள் பல கோவில் கள் பெரும் செலவில் ஆடம்பரமாகக் கட்டியெழுப்பப்படும் ஒரு புதிய போக்கினை காண முடிகிறது. இதன் அடிப்படை கடவுள் மீதான நம்பிக்கை, கோவில்கள் மீதான பக்தி மட்டுமல்ல. ஊர், சாதி, தனிமனித கௌரவம், பேர், புகழ், போட்டி, பொறாமை, போலி அந்தஸ்து என்பன கோவிலின் மறைவில் உள்ளன. ''எங்கடை ஊருக்கு மரியாதை இல்லை", "அந்தப் பகுதியைப் பாருங்கோ", "எங்கடை சனம் வெளி நாடுகளில் இருந்து என்ன

**- ஆதிமூலன் -**

பிரயோசனம்'', ''அந்தக் கோவிலை விடத் திறமாக எங்கடை கோவிலைக் கட்டவேணும்". இவ்வாறான குறுகிய சிந்தனை வழிப்பட்டே வெளிநாட்டுப் பணம் கொண்டும் உள்நாட்டுப் பணச் சேர்ப்புடனும் கோவில்கள் கட்டப்படு கின்றன, புதுப்பிக்கப்படுகின்றன, விஸ்த்தரிக்கப்படுகின்றன. இவற்றில் முன்னணியில் நிற்கும் ஆலய நிர்வாகிகள் கோவிலின் பெயரால் கறைபடிந்த அரசியல்வாதிகளிடமும் கொடூர முதலாளிகளிடமும் வாய் கூசாது கோவிலுக்குப் பணம் கேட்டு கைநீட்டி நிற்பர். கசிப்பு வடிப்பவர்களும் மதுக்கடை நடத்துபவர்களும் தாராளமாகக் கோவில்களுக்குப் பணம் கொடுக்கிறார்கள். இவ்வாறு கட்டியெழுப்பப்படும் கோவில்கள் பல வர்த்தக வியாபாரத் தலங்களாக மாறி நிற்கின்றன. கடவுளை வழிபடவும் கண்டு துன்பதுயரங்களைக் கூறவும் பணம் என்பது கோவில்களின் எதிர்ப்பார்ப்பாகும்.

வெளிநாட்டுப் பணம் இக்கோவில்களில் கொட்டப்படுகின்றது. ஒரு கிராமத்தில் சனசமூக நிலையம், நூல் நிலையம், பாலர் பாடசாலை, கல்விக்கழகம், முதியோர்கல்வி, போஷாக்கு நிலையம், பொதுக்கலாசார மண்டபம் போன்ற வற்றுக்கு பணம் தர வெளிநாடுகளில் எத்தனைபேர் முன்வருகிறார்கள். அப்படிக் கொடுப்பதானாலும் அற்ப தொகையினைக் கிள்ளியே போடுவர். ஆனால் கோவில், கோபுரம், மதில்சுவர், திருக்குளம், தேர், திருவிழா என்றால் அள்ளிவாரிக் கொடுக்க சுயநலத் தர்மவான்கள் பலர் இருக்கிறார்கள். பல லட்சங்கள் செலவுசெய்து கோவில் களை எழுப்பி ஊர், சாதி, சமூக அந்தஸ்தை உயர்த்திக்காட்டி நிற்கின்றனர். ஒரு உள்ளூரிலே ஒன்றரைக் கோடி ரூபாவில் அந்தக் கோவிலுக்கு ராஜகோபுரம் அமைக்கத் திட்டமிட்டு ஒவ்வொரு கட்டத்திற்கு மான நிதி வெளிநாடுகளில் கேட்கப்பட்டு குறைந்தது ஒரு லட்சமாக ஒப்புக் கொள்ளப்பட்டு வருவதை அறிய முடிகிறது. இறுதிக் கட்ட கோபுர உச்சிக்கு ஒரு வெளிநாட்டு அன்பர் முப்பது லட்சம் ஒதுக்கிய கதையைக் கேட்க முடிந்தது. ஆனால் அதே ஊரில் கொட்டில் குடிசைகளில் வாழும் மக்கள் பற்றியோ பொருளாதார நெடுக்கடி களால் அல்லலுறும் சக மனிதர்கள் பற்றியோ இப்பணம் படைத்தவர்கள் அக்கறைப்படுவதில்லை. ஏன்? மனிதநேயப் பண்பாடு பணத்தால் அழிக்கப்பட்டு வருவதேயாகும்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

## கம்யூனிஸ்..

9ம் பக்க தொடர்ச்சி..

கலந்து சலிப்பின்றி, பொறுமையோடு அவர்களுக்கு வழிகாட்டுவது; அதாவது, உண்மையான உணர்வு, தைரியம், கருத்தில் உறுதி, தியாகம், சஞ்சலம் இன்மை ஆகிய சிறந்த மனிதப் பண்புக்கு இருப்பிடமாக விளங்குவது; இவையே நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைக ளாகும்.

கம்யூனிஸ்ட் தோழர்களே! இது உங்க ளுக்குப் பொருந்தும். ஏனென்றால், நீங்கள் லெனின் படையைச் சேர்ந்த வர்கள். நீங்கள் எந்தப் பகுதியில் வேலை செய்து கொண்டிருப் பினும் நீங்கள் மனித குலத்தின் விடுதலைக்காக புரட்சியின் எந்த அரணில் போராடிக் கொண்டிருப்பினும் தன்னந்தனியாகக் கடமையைச் செய்து கொண்டிருப்பினும், கொடியவர்களால் இருண்ட சிறைகளில் பூட்டப்பட்டிருப் பினும், ஒவ்வொரு நாளும் உங்கள் செயல்களை, எண்ணங்களை விமர்சனம் செய்யுங்கள்: மாபெரும் லெனின் படையில் ஒரு போர் வீரனாக இருக்க நான் தகுதி உள்ளவனா? தோழர் ஸ்டாலின் எமது பெயராலும், எடுத்துக் கொண்ட சபதத்தை விசுவாசத்துடன் மரியாதை செய்யத் திறமை உள்ளவனா? வரலாறு நம்மீது சுமத்துகின்ற எதிர்காலக் கடமைகளை நிறைவேற்றக் கூடிய அளவுக்கு நான் வளர்ச்சி அடைந்திருக்கிறேனா? இவையே விமர்சனம் செய்யப்பட வேண்டியவை.

எங்களிடம் அனுதாபம் உள்ள நண்பர் களே! அது உங்களுக்கும் பொருந்தும். போராடுகின்ற மக்கள் அணியினால் நீங்கள் எங்கு நின்றாலும், எந்தப் பகுதியில் இருந்தாலும், உங்கள் அனுதாபத்தைச் செயலில் காட்டுவது எப்படி? கட்சியோடு நெருங்கிய தொடர்பு கொள்வது எப்படி? என்பனவற்றைப் பற்றி அடிக்கடி சிந்தியுங்கள். அவ்வாறு சிந்திப்பதனால், கட்சியின் அணிவகுப்பு முன்னேறிச் செல்லும் பொழுது அதனுடன் சேர்ந்து நீங்கள் முன்னேற முடியும். அதனால் உங்களுக்கு வழிகாட்டியாக இருந்து, கொடிய போரில் உயிர் நீத்த தியாகிகளுக்குப் பதிலாக, நீங்களே கட்சி அணியில் இடம் பெறுவீர்கள்.

சமீப காலம்வரை எங்களைப்பற்றி அறிந்து கொள்ளாதவர்களுக்கும், எங்கள் கட்சியைச் சந்தேகத்துடன் பார்த்து வந்தவர்களுக்கும், ஹிட்லரின் நாசகாரக் கும்பலை எதிர்ப்பதில் ஒன்றுபட்டு நின்றவர்களுக்கும் இது பொருந்தும். நீங்கள் மிக உன்னிப்பாக எங்களைக் கவனித்து வருகிறீர்கள்; எங்கள் செயல்களைக் கூர்ந்து கவனிக்கிறீர்கள். ஆம், வெகுநுட்பமாகக் கவனியுங்கள். எங்களுடைய ஒவ்வொரு செயலையும் அலசி அலசி ஆராயுங்கள், விமர்சியுங்கள், உங்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டியது ஒன்றுமில்லை. மக்களுக்குத் தெரியாமல் மூடி மறைக்க வேண்டியது யாதொன்றும் எங்களுக்கு இல்லை. உங்களுக்கு முன்னால், நாட்டு மக்களுக்கு முன்னால் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் மிகக் கடுமையான அக்கினிப் பரீட்சையில் நாங்கள் இறங்கியிருக்கிறோம். நாங்கள் போரில் புறமுதுகு காட்டினோம் என்றோ, ஏதோ ஒன்றில் தவறினோம் என்றோ எங்களின் நேர்மையற்ற விரோதிகூட சொல்லத் துணிய மாட்டான், கூர்ந்து கவனியுங்கள். காரணத்தை அறிவீர்கள், உலகின் பெரும் பகுதி இன்றைக்குப் புரிந்து கொள்ளத் தொடங்கி இருப்பதை, நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். மனித குலம் சுதந்திரமாகவும் சமாதானமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு நாங்கள் கடைப்பிடிக்கும் வழியைத் தவிர வேறு வழியே இல்லை. எங்களுடன் வராத ஒருவன், தனக்குத்தானே விரோதமாகப் போகிறான் என்பதை நீங்கள் உணர்வீர்கள்!

(''எங்கள் நாட்டை நாங்கள் நேசிக்கிறோம்'' - என்ற நூலிருந்து)

## 1966 ஆண்டு

8ம் பக்க தொடர்ச்சி..

மஞ்சுவது வெறும் "குறுகிய தமிழ்த் தேசியவாத மும்", "குறுகிய பிரதேச வாதமும்'' என எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்க தாகும்.

இன்றைய காலகட்டத்தில் நாம் ஒடுக்கப் பட்ட மக்களின் கடந்தகால போராட்டங் களையும் அதன் அனுபவங்களையும் படிக்க வேண்டும். அது மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பயனுள்ள அனுபவமாகவும் பட்டறி வாகவும் அமையும் என்றும் தனது உரையில் தங்கவடிவேல் கூறினார்.

காலங்களில் காட்டுகின்ற வழமையான வித்தைகளில் ஒன்றுதான்.

அண்மையில் பிரான்சில் விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக வெளிவந்த நூல் ஒன்றில் ''வட்டுக்கோட்டை மாநாட்டில் இளைஞர்களின் கடுமை யான நெருக்குவாரத்தை ஏற்றுக் கொண்டு அமிர்தலிங்கம் அவர்கள் தந்தை செல்வநாயகத்தை தமிழ் ஈழத் தீர்மானத்தை ஏற்க வைத்தார்" என எழுதப்பட்டுள்ளது. இது எதைக் காட்டுகின்றது. செல்வநாயகத்திற்கு தனித் தமிழ் ஈழத்தில் நம்பிக்கையில்லை என்பதையும் தேர்தல் வெற்றிக்கு முழுத்

**- பாரிஸிலிருந்து புதியபூமி நிருபர் -**

மேற்படி நினைவுப் பகிர்வு- கலந்துரை யாடலுக்கு தலைமை தாங்கிய தோழர் வை. வன்னியசிங்கம் தனது உரையில், இன்றைய உலகில் இன-மத-நிற-சாதிப் போராட்டங்கள் உட்பட இன்னும் பல வடிவங்களில் தேசியப் போராட்டங் கள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. இவற்றில் சில தம் இலக்கை நோக்கிச் சென்று வெற்றியடைகின்றன. சில அத்திசை நோக்கியே செல்லாமலும் போய்விடுகின்றன. இன்று எமது நாட்டில் தற்காலிக சமாதானச் சூழலும் அதேநேரம் அரசியல் குழப்பநிலையுமே காணப்படுகின்றது. தேசிய விடுதலைப் போராட்டம் எத்திசையில் செல்ல வேண்டு மென்ற வாதப்பிரதிவாதங் களும் நடைபெறுகின்றன. இவ்வேளை தமிழ்க் கூட்டமைப்பு 13வது பாராளுமன்றத்திற் கான தேர்தலை பெரும் புரட்சிகரமான தேர்தலாக காட்ட முற்படுகின்றது. இது தேர்தல் தமிழ் மக்களையும் ஏமாற்றுவதற்காக கூட்டப்பட்ட மாநாடு என்பதையுமே மேற்படி கூற்று எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ் இளைஞர்களை சமாதானப் படுத்தவும் பாராளுமன்ற வெற்றிக் காகவும அன்று தயாரிக்கப்பட்டதே தமிழ் ஈழக் கோரிக்கையென்பதை அன்று ஆனைக்கோட்டையில் ஈழவேந்தனோடு நடைபெற்ற பொது மேடை விவாதத்தில் மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டியது. ஆயுதப் போராட்டம் பற்றியும் பாராளுமன்றத்தை எப்படி பயன்படுத்துவது என்பது பற்றியும் தெளிவீனம் இருக்கும்வரை தமிழ்த் தேசியம் தேசிய விடுதலைப் பயணத்தின் சரியான திசை மார்க்கத்தைக் காண முடியாது. இது சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் காணப்படும் யதார்த்தமாகும் என்றும் கூறினார்.

# நூல் அறிமுகம்

நூல் : **போராடும் தருணங்கள்**
ஆசிரியர் : மருதையன்
வெளியீடு : புதிய கலாச்சாரம்,
மக்கள் கலை இலக்கியக் கழகம்,
18, முல்லை நகர் வணிக வளாகம்,
அசோக்நகர்,
சென்னை - 600083
பக்கம் : **117**
விலை : இந்திய ரூபா : **40/-**




## 'இரவல் சொர்க்கம் அறுந்து விழட்டும்'

மாக்ஸீய மூலவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சமூக மாற்றத்துக்கான மாக்ஸீய சிந்தனையின் கருவூலங்கள் பாட்டாளி மக்களுக்கு எட்டாக் கனியாக பல்கலைக்கழக ஆய்வுக்கூடங்களில் தொங்கிக்கொண்டிருக்கின்றன. மாக்ஸீயம் கற்றவர்கள் பட்டம் பெற்றவர்கள், மாமேதைகள் ஆனார்கள். மக்களை வெறுத்தார்கள். மாகனம் பொருந்திய மனிதர்கள் ஆனார்கள். தொழிலாள, விவசாயிகள் உழைக்கும் மக்களின் உணர்வுகள் ஓரங்கட்டப்பட்டு தீண்டத்தகாதவர்கள் ஆக்கப்பட்டார்கள். ஏனெனில் இம் மாக்ஸீய மேதைகளின் அறிவுப்பெரு ஒளிவட்டத்தின் ஈர்ப்பிற்குள் அவர்கள் உள்ளடங்க மாட்டார்கள். எனவே உழைப்பாளி மக்களோ தூரத் தூர ஒதுங்கிக் கொள்கிறார்கள். மக்களின் அறிவுத்தளத்திலிருந்து ஆரம்பிக்காமல் அவர்களின் உணர்வுத் தளத்திலிருந்து தொடக்கப்படுவதில்லை. மாறாக அன்றாட அரசியல் முதல் அகதிகள் வரையான மக்களின் அவலங்களிலிருந்து கேள்விகளை எழுப்புகிறார் ஆசிரியர். வெறும் அனுதாபத்தை மட்டும் தூண்டும் முயற்சியிலிறங்கவில்லை. பதிலாக வர்க்க உணர்வை தூண்டிப் பழமையைப் பொசுக்கி புதுமை என்ற பேரில் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலினாலான உலகமயத்தின் அந்தரத்தில் தொங்கும் 'இரவல் சொர்க்கத்தை' அறுத்து விழுத்தும் ஆர்வமூட்டும் உரைவீச்சுகள் இந்நூலில் மருதையனால் ஆக்கப்பட்டுள்ளன எனலாம்.

இந்நூலில் 'புதிய கலாச்சாரம்' இதழில் 1991 யூன் முதல் 2000 மே வரையான இதழ்களில் தோழர் மருதையன் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இக்காலக்கட்டத்தில் இந்தியாவில் 'நடந்த அரசியல் நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான எதிர்வினை ஏன் நடக்கவில்லை என்பதே பிரச்சினை' என்ற கேள்வியை எழுப்பும் ஆசிரியர் குழு இந்நூல் 'ஒருவகையில் எமது பதினைந்து ஆண்டு அரசியல் பாதையின் ஒரு இலக்கிய சாட்சியமாய் இக்கட்டுரைகள் அமைகின்றன' என்றும் ''மக்களை போராடத் தூண்டும் இந்நூலினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்' என்றும் தமது வெளியீட்டுரையில் தெரிவித்துள்ளனர்.

இந்தியா பற்றியும் இந்தியத் தமிழகம் பற்றியும் ஈழத்தமிழர்கள் கொண்டுள்ள பிரமைகளை முற்றாகக் களைவதாகவும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி 'இவர்கள் ராஜீவுக்காக அழமாட்டார்கள்.' ''ஆயுதக் கலாச்சாரம்'' என்ற முதலாவது இரண்டாவது கட்டுரைகளிலும், 'பிணங்கள் பேசுகின்றன' என்ற கட்டுரையிலும் ஏனைய பிற கட்டுரைகளிலும் அலசப்படுவது மட்டுமன்றி, இந்திய தேசிய அகங்காரத்துக்கப்பால் பரந்த இந்திய விஷ்வருபத்தினுள் வீழ்ந்துவிடாமல் வர்க்க உணர்வுத் தளத்தில் - மாக்ஸீய ஒளியில் மிக நுணுக்கமாக இலங்கைத் தமிழ் - இந்தியத் தமிழ் மக்களுக்கிடையிலான முரண்களையும் இந்திய ஆதிக்க ஆளுந்தரப்பினரின் பொய்மைகளையும் கொடுமைகளையும் ஆசிரியர் தனது புதுமையான கவித்துவ உரைவீச்சின் மூலம் தோலுரித்துக் காட்டியுள்ளார். 07-04-2000ல் மண்டபம் ஈழ அகதிகள் முகாமில் ஈழத்தமிழ் குடும்பத்தின் தற்கொலை நாம் அறியாத் தகவலென்பதுடன் நெஞ்சை உறைய வைத்து விடுகிறது. ''முலைக்காம்பில் நஞ்சைத் தடவிப் பிள்ளைக்குப் பாலூட்டிய அந்தத் தாயின் பாசம்'' என்பது இந்நூற்றாண்டின் மிகக்கொடிய நிகழ்வாகும்.

சினிமாவில் காணும் தமிழகத் திரைகளை விலக்கி நிஜமான தெருவோரத்தில் 'கொசுக்கடிக்கு அஞ்சி, குடிசைகளில் படுக்காமல நடைபாதையில் உறங்கிய மக்கள் மீது வேன் ஏறியது, ஒருவர் சாவு என 'விபத்து' என்ற உரைவீச்சில், ஆசிரியர் அன்றாடம் நகரங்களில் நடக்கும் விபத்துக்கள் என்ற மக்களின் அவதானத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களைக்கூட மிக நுட்பமாக தனது கவித்துவ நடையில் புரியவைத்து விடுகிறார்.

தோழர் மருதையன் இந்தியத் தமிழ் உழைப்பாளிகள் பட்ட அவலங்களை அன்றாட நிகழ்வுகளில் புதினப்பத்திரிகைகளின் வியாபாரத்துடன் தொழிலாளர்களின் வாழ்வுபோல் முடிந்துவிடாமல் தொடர்ந்தும் பல வினாக்களை எங்கள் நெஞ்சில் எழுப்பும்படி புதிய புறநாநூற்றின் வரிகளை எழுதியுள்ளார்.

கடவுள் கலாச்சாரத்தில் புதையுண்டு 'ஹோமா'வில் உறங்கும் தமிழகத்தில் - கோரிக்கைகளோ, புகார்களோ தொடுக்க வியலாச் சூழலில் 'பேசுங்கள் இந்தியர்களே' எனப் பிரகடனம் செய்கிறார் மருதையன்.

சமகாலப் பிரச்சினைகளின் மீது இதிகாச, புராணங்களின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட புனிதமான கடவுள் படிமங்கள் மீது பல பாணங்கள் தொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் கடுமையாகத் தொடுக்கப்பட்ட பாணங்களில் சிலவற்றை பகிர்ந்து கொண்டதுடன் அறிமுகத்தை நிறைவு செய்கிறேன்.

''பூனைகள் கருவாட்டை வெறுத்து விட்டனவே. தங்கள் குலதெய்வத்தை - துப்பாக்கியை - துர்த் தேவதையென்று தூற்றுகின்றனவே, என்ன காரணம்? அச்சம். பீதி!.

''கல்வியா, செல்வமா, வீரமா என்று மூன்று வருணத்தவர்களும் பட்டிமன்றம் நடத்தலாம். உழைப்பிற்கு விதிக்கப்பட்ட நான்காவது வருணத்தவன் மட்டும் இதில் கலந்துகொள்ள உரிமை இல்லை என்று செய்தான் மனு.

-ஆயுதக் கலாச்சாரம் கட்டுரையில்-

''சம்பூகனும், ஏகலைவனும், நந்தனும் சாட்சி சொல்ல எழுந்து வரவா போகின்றீர்கள்'.

- தமிழன் என்று சொல்லடா'

''நந்தகுமார் கோவலனில்லை; பத்மினி கண்ணகியுமில்லை. காப்பிய நாயகர்களாகும் தகுதியும் அவர்களுக்கில்லை'-

'இருப்பினும் மீண்டும் சிலப்பதிகாரம்,
'குற்றம் நடந்த இடமும் மதுரை அல்ல - தில்லை,
காலைத்தூ..க்கி நின்ற அம்பலவாணன்
களிநடம் புரியும் அம்பலம்'

''அதிகாரத்தின் கால்கள் ஊன்றி நிற்கும்வரைதான்
ஆணவத்தின் கால்கள் அழகுனி ஆட்டம் ஆடும்;
இதுவே சிதம்பர ரகசியம்!
ஊன்றிய திருவடியை வெட்டி எறி!
உயர்த்திய திருவடி துவண்டு விழும்.
அழகியலின் சின்னம் ஆணவத்தின் நினைவுச் சின்னமாகும்
அம்பலவாணனுக்கு மட்டுமல்ல
அண்ணாமலை நகர் நாய்களுக்கும் இதுவே தீர்ப்பு!
காலொடிந்த நாய்களின் ஊளைச்சத்தம்
கடிக்க வரும் நாய்களுக்குப் பாடமாக இருக்கட்டும்'

- தில்லை முதல் அண்ணாமலை நகர் வரை -

**- சோமு -**

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 11 ஜூன் 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 69

## கந்தப்பொளை வன்முறைகளுக்கு கண்டனம்

**கடந்த ஏப்ரல் 27ம் 28ம் திகதிகளில் நுவரெலியா-கந்தப்பொளையில் இடம்பெற்ற இனவன்முறைகளையும் இரண்டு மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் வேண்டுமென்றே பொலிசால் சுட்டுக்கொல்லப்பட்டமையையும் புதிய பூமி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. வெறும் நஷ்டஈடு அல்ல இதற்குப் பரிகாரம். இது போன்ற பேரினவாத வெறியாட்டம் இனிமேலும் இடம் பெறுவதை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றோம்.**

# மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான போராட்டம் பேரினவாத-ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாகும்.

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திட்டத்தினால் முழு நாட்டிற்கும் மக்களுக்கும் சூழலியல் ரீதியாக பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன், அடக்கப்படும் தேசிய இனமான மலையகத் தமிழ் தேசிய இனத்திற்கு சமூக அரசியல் ரீதியாக பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். அதனால் அதனை தடுத்து நிறுத்துவதற்கான போராட்டங்கள் பல முனைகளிலும் முன் எடுக்கப்பட வேண்டும். அதனடிப்படையிலேயே அத்திட்டத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் மேலும் மேலும் பலமடைந்து வருகிறது.

மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் கடந்த காலத்தில் விட்டுக் கொடுக்காது முன்னெடுத்து வந்த நடவடிக்கைகளின் காரணமாக நாளுக்கு நாள் எதிர்ப்பியக்கத்தில் அணிதிரளும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்தும் வருகிறது. அரசசார்பற்ற நிறுவனங்களும், வெகுஜன அமைப்புகளும் எதிர்ப்பியக்கங்களை முன்னெடுத்தும் வருகின்றன.

அத்திட்டம் அமுல் படுத்தப்பட வேண்டுமென்று ம.ம.மு கூறிவருகிறது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அத்திட்டத்தை எதிர்த்து வருகின்ற போதும் அது எந்நேரமும் எதிர்ப்பை கைவிட்டு விடுமோ என்ற சந்தேகம் நிலவுகிறது.

அத்துடன் அத்திட்டத்திற்கு எதிராக அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்கும் எதிர்ப்பியக்கங்கள் அவற்றின் குறுகிய செயற் திட்டத்திற்குள் வரையறுக்கப்படாமல் அரசியல் ரீதியான தலைமைத்துவத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஏனெனில் அத்திட்டத்திற்கு ஜப்பானிய ஏகாதிபத்தியமே பெருமளவு கடனுதவி செய்யது வருகின்றது. அதனுடைய பொருளாதார ரீதியான சுரண்டலை விஸ்தரிக்கும் திட்டம் அத்திட்டமாகும். இது பேரினவாத அடிப்படையுடன் காலஞ்சென்ற காமினி திசாநாயக்காவால் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

அத்திட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கான போராட்டம் என்பது அடிப்படையில் ஏகாதிபத்தியத்திற்கும், பேரினவாதத்திற்கும் எதிரான போராட்டமாகும். மக்கள் நலன் சார்ந்த போராட்டமாகும். அதனால் அத்திட்டத்தை ஆதரிப்பவர்கள் மக்களினால் ஓரம் கட்டப்படுவார்கள்.

மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் அதனது எதிர்ப்பு போராட்டங்களை ஏனைய ஜனநாயக முற்போக்கு அமைப்புக்களையும் ஐக்கியப்படுத்தி மேலும் விஸ்தரிக்க வேண்டும்.

# மலையக துக்க தினத்தன்று ம.ம.மு. என்ன செய்தது!

கந்தப்பொளையில் பொலிசாரினாலும் இராணுவத்தினாலும் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இரண்டு தோட்டத் தொழிலாளர்களின் இறுதி நிகழ்வுகள் மே முதலாம் திகதி நடைபெற்றன. அதனால் மலையகமெங்கும் அன்றைய நாள் துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. இராகலையில் நடைபெறவிருந்த புதிய- ஜனநாயக கட்சியின் மேதின ஊர்வலமும் கூட்டமும் இரத்து செய்யப்பட்டன.

கொல்லப்பட்ட வீராசாமி ஜெயராம், அழகன் விமலநாதன் ஆகியோரின் இறுதி நிகழ்வுகளில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஆனால் புஸ்ஸல்லாவையில் நடைபெற்ற மலையக மக்கள் முன்னணியின் மேதினக் கொண்டாட்டங்கள் மிகவும் கோலகலமாக நடைபெற்றன. தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்களின் டப்பான் கூத்து பாட்டுகளும் ஆட்டங்களும் இடம் பெற்றன.

கந்தப்பொளை சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 19 ஆம் திகதி தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பீக்களும், மலையக மக்கள் முன்னணி எம்.பிக்களும் கறுப்புப் பட்டி அணிந்து பாராளுமன்றத்திற்கு சென்றனர். அது பற்றி பாராளுமன்றத்தில் விவாதமும் நடைபெற்றது. விவாதம் முற்றுப் பெறாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பு மாவட்ட எம்.பி மனோ கணேசனும் கலந்து கொள்ளவில்லை. கந்தப்பொளை சம்பவத்திற்கு பாராளுமன்ற விவாதம் தேவை இல்லை என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கூறியுள்ளார்.

மனோ கணேசனுக்கு உரிய முறையில் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். அவர் கந்தப்பொளை சம்பவத்திற்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கும் ஏனைய அமைப்புகளுக்கு உரியவாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை என்ற விமர்சனமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

கந்தப்பொளை சம்பவ துக்கதின நாளன்று டப்பான் கூத்து நடத்திய சந்திரசேகரன் தான் பின்பு கறுப்புப் பட்டி அணிந்த பாராளுமன்ற நடவடிக்கைக்கு முன் நின்றவர். எல்லாம் போலி நாடகங்கள் தான் பதவிகளைப் பாதுகாத்து இமேஜை தக்க வைக்க இது போன்ற காட்சிகளை மேலும் காணமுடியும்.

## சிறிபாத

1ம் பக்க தொடர்ச்சி..

தெரிவிப்பதை அடுத்து கல்லூரி கால வரையின்றி மூடப்படுவதும் வழக்கமாகி விட்டது.

ஒவ்வொரு வருடமும் சேர்த்துக் கொள்ளப்படும் ஆசிரிய பயிலுநர்கள் அதே பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். அதனால் கல்லூரி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள கல்விசாரா அலுவலர்கள் தான் பிரச்சினைகளுக்கு காரணமாக இருந்து வருகின்றனர் என்பது மிகவும் தெளிவாகிறது. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதும் அவசியமாகிறது.

பிரச்சினைகளை அறிந்து அதற்கு காரணமான அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து, எவ்வித இடையூறுமின்றி ஆசிரிய பயிலுநர்கள் கல்வியை தொடர்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அக்கல்லூரியின் பிரச்சினைகளை ஆராய எத்தனையோ விசாரணைகள் நடைபெற்றன. எத்தனையோ அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டன. ஆனால் எவ்வித நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை.

மலையக அரசியல்வாதிகள் வாக்குகளை சேகரிப்பதில் காட்டும் ஆர்வத்தை அக்கல்லூரியின் பிரச்சினைகளை தீர்ப்பதில் காட்டுவதில்லை. அப்பிரச்சினைகளை ஆறாப் புண்ணாக வைத்திருப்பதிலேயே அவர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

அதேவேளை சிங்களப் பெண் ஒருவர் பீடாதிபதியாக உயர் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். 75சதவீதமான தமிழ் ஆசிரிய பயிலுநர்கள் கற்கும் அக்கல்லூரியில் இதுவரை தமிழர்களே பீடாதிபதிகளாக இருந்துள்ளனர். இதுவும் தமிழ் ஆசிரிய பயிலுநர்களுக்கு மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அக்கல்லூரியை சிங்களமயமாக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே புதிய பீடாதிபதி நியமனத்தை கொள்ள முடிகிறது.

இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறுப்பை வங்குரோத்து நிலையில் இருக்கும் மலையக அரசியல்வாதிகளிடம் பாரப்படுத்திவிட்டு ஆசிரிய பயிலுநர்களும் பெற்றோர்களும் மலையகத் தமிழ் மக்களும் சும்மா இருக்க முடியாது. போராட்டங்களினூடாக அழுத்தங்களை கொடுத்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும்.

## ஜனாதிபதி..

1ம் பக்க தொடர்ச்சி..

உள் நோக்கங்களின் மீது மேற் கொள்ளப்படுகின்றன என்பது முக்கிய கேள்வியாகும்.

ஜனாதிபதி வடக்கின் மீது அக்கறை கொள்வதில் தவறில்லை. ஆனால் இதுவரையான அழிவுகள் இழப்புகள் இடப் பெயர்வுகள் என்பனவற்றுக்கு மூல காரணமாக அமைந்து நிற்கும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படல் வேண்டும் என்பதே யாவற்றையும் விட முக்கியமானதாகும். அதற்காக ஜனாதிபதி எடுத்துள்ள முன் முயற்சிகளை மேலும் வலுப்படுத்தி புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை மூலமான இணக்கப்பாட்டிற்கு வருவதன் ஊடாகவே உரியவாறு புனரமைப்பு புனர்வாழ்வு அபிவிருத்தி முன்செல்ல முடியும். அதனை விடுத்து தனியே வடக்கு அபிவிருத்தி என்றால் அது மக்களைத் திசை திருப்புவதற்கு முன் டக்ளஸ் தேவானந்தா, தி.மகேஸ்வரன் போன்றோர் மூலமாகச் செய்யப்பட்டவை போன்றவற்றை ஜனாதிபதி செய்வ தாகவே அமைந்துவிடும். அது வீண் முயற்சியும் தமிழ் மக்களை ஏமாற்று வதாகவுமே இருக்க முடியும்.

## பேச்சுவா.......

1ம் பக்க தொடர்ச்சி..

இயல்பு வாழ்வையும் விரும்பி நிற்கும் மக்களுக்கு ஆறுதலை ஏற்படுத்தியுள்ளன.

புலிகள் இயக்கம் யூஎன்.பியுடன் மட்டும் தான் பேச்சுக்கள் நடாத்தும் என்று எதிர்பார்த்து நின்ற புலி எதிர்ப்பாளர்களது நிலைக்கு அப்பால் புலிகள் இயக்கம் தமது அரசியல் தந்திரோபாயத்தை தமிழ் மக்களின் உள்ளார்ந்த சமாதான விருப்பத்திற்கு இசைவானதாகக் கொண்டு ஜனாதிபதியின் முன்னெடுப்புகளுக்கு இதுவரை சாதகமாக நடந்து கொண்டு வந்துள்ளது. அவ்வாறே ஜனாதிபதியும் பலபடிகள் கீழ் இறங்கி புலிகள் இயக்கத்துடன் பேசுவதற்கு தயாராகி உள்ளார்.

இந்நிலையில் இத்தகைய சூழலைக் குழப்ப பல்வேறு தரப்புகளும் தமது வழமையான நச்சுத் திட்டங்களை தீட்டவும் நடைமுறைப்படுத்தவும் தொடங்கியுள்ளனர். முதலாவது எதிர்ப்பு ஜனாதிபதியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியிடம் இருந்து கிளம்பி இருக்கிறது. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாயினும் பேச்சுவார்த்தைக்கு முயற்சிக்கப்படும் தரப்பிலிருந்து இந்த எதிர்ப்பு காட்டப்படுகிறது. ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதாகவே அமையும். அரசாங்கம் பதவிக்கு வந்த ஆரம்ப நாட்களில் ஜே.வி.பி பேச்சுவார்த்தை சம்மந்தமாக ஒரு நெகிழ்வுப் போக்கைக் கடைப் பிடிப்பது போன்று மிக அடக்கியே வாசித்து நின்றது. ஆனால் இப்போது நாளாந்தம் அதன் தொனியும் செயற்பாடும் எதிர்த்திசையில் செல்வதை அவதானிக்க முடிகிறது.

அதேவேளை எங்கிருந்து குழப்பத்தை ஆரம்பிக்கலாம் என யோசித்துக் கொண்டிருந்த யூஎன்.பிக்கு உரிய பிடி கிடைத்தும் உள்ளது. உங்களுக் குள்ளேயே ஒரே கருத்து இல்லை. அப்படியானால் எவ்வாறு பேசப் போகிறீர்கள் என்றும் பேச்சுவார்த்தை பற்றிய திட்டத்தை வெளிப்படுத்துமாறு கோரியும் யூஎன்.பியினர் கச்சை கட்ட ஆரம்பித்து விட்டனர். தாங்கள் சமாதானத்திற்கு விரோதமானவர்கள் அல்லவென்றும் எல்லாம் வெளிப்படையாகவும் முன் கூட்டியே தெரியப்படுத்தியுமே விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்த ஆரம்பித்து விட்டனர். முன்பு ஜனாதிபதி குழப்பும் தரப்பிலிருந்த வேளை கூறியவற்றையே யூஎன்.பி தலைமை இப்போது அந்த இடத்திற்கு வந்ததும் கூற ஆரம்பித்துள்ளது இதற்கு படிப்பியாக தீனி போட்டு வளர்த்து எதிர்ப்பு உருவமாக மாற்றுவதற்கு பேரினவாத சிங்கள ஆங்கில ஊடகங்கள் வரிந்து கட்டிக் கொண்டு தயாராகியும் வருகின்றன.

எனவே யூஎன்.பி., ஜே.வி.பி ஹெல உறுமய என்பன வெவ்வேறு நிலை நின்று குழப்பும் தரப்பாக செயல் படவே போகின்றன. இவற்றுக்கு முகம் கொடுப்பதில் ஜனாதிபதியின் தலைமை எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றது என்பது மிகப் பெரும் கேள்வியாகவும் சவாலாகவும் அமைந்துள்ளது.

இந்தவிடயத்தில் தான் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் இலங்கை மீதான தலையீடும் தத்தமது ஆதிக்கத்தினை நிலை நாட்ட எடுக்கும் இரகசிய பகிரங்க நடவடிக்கைகள் பற்றியும் கவனித்தல் வேண்டும். அமெரிக்கா யப்பான், மேற்கு நாடுகள் என்பனவற்றுக்கு தற்போதைய சூழலில் சமாதானம் தேவைப் படுகிறது. அவர்களுக்கு தத்தமது உள்நோக்கம் கருதிய யுத்தத்தேவை முடிவடைந்து விட்டது. இப்போது தாராளமயம், தனியார் மயம், உலக மயமாதல் ஆகிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பொருளாதார அரசியல் ராணுவ ஆதிக்கியிக் களை இலங்கையில் இறுக்கிக் கொள்ள அவர்களுக்கு சமாதான சூழலே அவசியமாகி உள்ளது. அதற்காகவே யப்பானிய அகாஷியும், அமெரிக்காவின் கிரிஷ்ரினா ரொக்காவும் மற்றும் மேற்குலப் பிரமுகர்களும் மாறிமாறி இங்கு வந்து பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு உந்துதல் வற்புறுத்தல் செய்கின்றனர். ஏற்கனவே தீர்மானிக்கப் பட்ட 45 ஆயிரம் கோடி பணப்பையைச் சுட்டிக் காட்டி நிற்கின்றனர்.

அதேவேளை இந்தியா இந்தப் பிராந்தியத்தில் வேறு எவரும் புகுந்து ஆதிக்கம் பெற முடியாது ''நானே பெரிய அண்ணன்'' எனக் கூறி தான் இல்லாத பேச்சுவார்த்தை குழம்ப வேண்டும் என செயலாற்றுகிறது. ஏற்கனவே பிரதமர் இந்தியா பற்றி எடுத்தியம்பி உள்ளார். ஜே.வி.பியின் அண்மைய நகர்வுகளுக்குப் பின்னால் இந்தியாவின் உசிப்பி விடும் செயல்கள் இருக்கின்றன. இத்தருணத் தைப் பயன்படுத்த யூஎன்.பி தயாராகி நிற்கிறது. இவர்களின் குழப்பும் தரப்பிற்கு உரமூட்ட ஹெல உறுமயவின் துறவற பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்த நேரமும் தயார் நிலையில் இருந்து வருகின்றனர். ஜனாதிபதி, பிரதமர் எதிர்க் கட்சித் தலைவர் என்போர் பிரதிநிதிப் படுத்தி நிற்கும் இரண்டு பிரதான ஆளும் வர்க்கத் தலைமைகளுக்கும் தமிழ் தேசிய இனத்தின் தேசிய இனப்பிரச்சினைக்கு நேர்மையான ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு காண்பது விருப்பமற்ற ஒன்றாகும். அத்தகைய ஒரு நியாயமான தீர்வுக்கு வர அவர்கள் தயாரில்லை. அதேவேளை யுத்தமும் தொடராத சமாதானமும் வராத அண்மை வருட நிலை நீடித்துச் சென்றால் போதும் என்பதுதான் தற்காலிகத் திட்டம். ஆனால் நீண்ட காலத்திட்டம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கான போராட்டத்தை மழுங்கடித்து புலிகள் இயக்கத்தை ராணுவ ரீதியில் அழித்து விடலாம் என்பதேயாகும். இந்த விடயத்தில் பேரினவாத ஆளும் வர்க்கத்துடன் அமெரிக்கா இந்தியா மேற்குலகு யாவரும் ஒரே கருத்தில் தான் இருக்கிறார்கள் என்பது புரிந்து கொள்ளப்படல் வேண்டும்.

## கோவில்களும்.

11ம் பக்க தொடர்ச்சி..

மேலும் இத்தகைய கோவில்களின் பெருக்கமும் அதற்குள் போட்டியிட்டுக் கொட்டப்படும் பணமும் சமூக விழிப்புணர்வுக்கோ மேம்பாட்டிற்கோ பயன்படுவ தில்லை. பழமைவாதம் நிலைநிறுத்தப்படு கின்றது. பிராமணியம் விஸ்தரிக்கப்படுகின்றது. சாதியம் துலக்கமாக்கப் படுகிறது. சிறு தெய்வங்களும் அந்த வழிபாட்டு முறைகளும் நிராகரித்து அழிக்கப்படுகின்றன. பிராமணிய பெருதெய்வ வழிபாட்டுமுறைமையில் பிராமணியம் பல தளங்களுக்கும் விரிவு பெறுகிறது. போலி அந்தஸ்து, மேனிலையாக்கம் என்ற நோக்கில் சாதாரண மக்கள் சடங்குகள், கிரிகைகள், சம்பிரதாயங்களுக்குள் மேன்மேலும் வீழ்கின்றனர். இவற்றின் ஊடே அடிமை குடிமை முறைமைகள் கூட சாதாரண மக்களிடையே நடைமுறைப்படுத்த முயற்சிக்கப்படுகின்றன.

எனவே கோவில்கள் கடவுள் நம்பிக்கைகள் மற்றும் மூடநம்பிக்கைகள் என்பனவற்றின் பெயரால் இடம்பெறும் சமூகத் தீங்குகள் பற்றிய பரந்த சிந்தனைகளும் விழிப்புணர்வுகளும் நமது சமூகச் சூழலில் அவசியமாகின்றன. ஏன், எப்படி? எதற்காக? இவற்றால் சாதாரண மக்கள் சமூகத்திற்கு யாது நன்மை என்றவாறான கேள்வி எழுப்பப்படுவது அவசியம். கடவுள் நம்பிக்கையுள்ளவர்களும் கோவில்களுக்கு சென்று வருபவர்களும் எல்லோரும் பிழையானவர்கள், பிற்போக்கானவர்கள், சமூக அக்கறையற்றவர்கள்என்று கூறுவது எமது நியாயம் அல்ல. அதேவேளை கடவுள் நம்பிக்கையற்ற கோவில்களுக்குச் செல்லாதவர்கள் அனைவரும் நேர்மையும் சமூக அக்கறையும் கொண்டவர்கள் என்பதும் உண்மையல்ல. ஆனால் சமூக நலன் சார்ந்தும் மனிதநேய அக்கறைக்கும் சமூக மாற்றச் சிந்தனை செயற்பாட்டிற்கும் எதிராக ஆளும் வர்க்கங்கள் தமது ஆதிக்க கருத்தியல்களைக் கோவில்கள் மூலமும் கடவுள் நம்பிக்கை என்பதன் ஊடாகவே பரப்பி வலுப்படுத்தி வருகின்றன என்பது புரிந்து கொள்ளப்படல் வேண்டும் என்பதே நமது சுட்டுதலாகும்.

வெளியிடுவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட். 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.